**தமிழ்நாடு அரசின் மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்கள், 2021–2022 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு–செலவுத் திட்டத்தை, 2021 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 23 ஆம் நாள் சட்டமன்றப் பேரவை முன் வைத்து ஆற்றும் உரை**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!**

‘கருவியும் காலமும் செய்கையும் செய்யும்
அருவினையும் மாண்டது அமைச்சு’

(குறள் 631)

ஒரு செயலைச் செய்யத் தேவையான பொருள்கள், அச்செயலை செய்வதற்கு ஏற்ற காலம், செய்யும் முறை, செய்யும் செயல் ஆகிய அனைத்திலும் நன்மை விளையும்படி எண்ணுபவரே நல்லமைச்சர் ஆவார்.

வல்லமை மிக்க தலைவர் என்று வரலாறு போற்றுகிற மறைந்த முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நிரந்தர நல்லாசிகளுடனும், வழிகாட்டுதலுடனும் செயல்பட்டு வரும் இந்த அரசு, 2021 ஆம் ஆண்டு மே மாதத்தில் அதன் ஆட்சிக் காலத்தை நிறைவு செய்யவுள்ளது. 2016 ஆம் ஆண்டு மே மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தலில் வரலாற்றுச் சாதனையாக இரண்டாம் முறை தொடர்ச்சியாக மக்களின் நம்பிக்கையை வென்றெடுத்த மறைந்த முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இந்த அரசை உருவாக்கினார். 2016 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் மறைந்த பின்னர்,

இந்த அரசு அதன் ஆட்சிக் காலத்தை முழுமையாக நிறைவு செய்யாது என பலராலும் ஊகிக்கப்பட்டது. அவ்வாறு விமர்சனம் செய்த அனைவரின் கணிப்புகளும் தவறு என தீர்க்கமாக நிரூபிக்கப்பட்டது. **மறைந்த முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசிகளுடன், மாண்புமிகு முதலமைச்சர் திரு எடப்பாடி கே. பழனிசாமி அவர்களின் திறமையான தலைமையின் கீழ் செயல்பட்டு வரும் இந்த அரசு, அதன் ஆட்சிக் காலத்தை முழுமையாக நிறைவு செய்தது மட்டுமல்லாமல், தமிழ்நாட்டை நாட்டிலேயே தலைசிறந்த மாநிலமாக்க வேண்டும் என்ற மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நோக்கத்தை நிறைவேற்றியுள்ளது.** எங்களின் அர்ப்பணிப்பு, அயராத உழைப்பு மற்றும் செயலாற்றலால், மக்கள் எங்கள் மீது முழு நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். மக்களின் நலனை முதன்மை நோக்கமாகக் கொண்ட இந்த அரசு தனது வாக்குறுதிகளையும் நிறைவேற்றியது என மக்கள் நன்கு அறிவர்.

2) இந்த அரசு, மறைந்த முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களையும், தமிழ்நாட்டு மக்கள் மீது அவர் கொண்டிருந்த தீராத அன்பினையும் அரவணைப்பையும் எப்போதும் நினைவில் கொண்டுள்ளது. மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மாவின் இந்த அரசு, அவர்களின் நினைவைப் போற்றி, வங்கக் கரையோரத்தில் மாண்புமிகு அம்மாவின் வாழ்க்கையையும் கொள்கையையும் பெருமைப்படுத்தும் வகையில் ஒரு நினைவு மண்டபத்தை அமைத்துள்ளது. மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் பல ஆண்டுகளாக வாழ்ந்துவந்த ‘வேதா நிலையம்’ நினைவு இல்லமாக மாற்றப்பட்டுள்ளது. பொதுமக்கள் அங்கு சென்று, மாண்புமிகு அம்மா அவர்களின் வாழ்க்கை மற்றும் அருஞ்செயல்களில் இருந்து உத்வேகம் பெறும் விதமாக இந்த நினைவு இல்லம்

அமைந்துள்ளது. மாண்புமிகு அம்மா அவர்களைப் போற்றும் வகையில், அவர்களின் பிறந்தநாள் அரசு விழாவாகக் கொண்டாடப்படும். இவையனைத்தும் மாண்புமிகு அம்மா அவர்களின் நினைவினைப் போற்றுதற்குரிய செயல்களாக இருந்தாலும், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு நாங்கள் செலுத்தும் உண்மையான நன்றிக்கடன், தமிழ்நாட்டு மக்களுக்கு நாங்கள் ஆற்றும் சேவை மட்டுமே. இதே உணர்வோடு, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களை வணங்கி, 2021–22 ஆம் ஆண்டிற்கான இடைக்கால நிதிநிலை அறிக்கையை இப்பேரவை முன் சமர்ப்பிக்கின்றேன்.

3) **மாண்புமிகு முதலமைச்சர் திரு எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் தலைமையிலான இந்த அரசு, இந்திய அளவிலும், உலக அளவிலும் பல விருதுகளையும் அங்கீகாரத்தையும் பெற்றுள்ளது. இந்திய அரசால் 2019 ஆம் ஆண்டு முதன் முறையாக கணக்கிடப்பட்ட நல் ஆளுமைத்திறன் குறியீட்டுப் பட்டியலில் நாம் முதலிடத்தைப் பெற்றுள்ளோம். கடந்த 2020 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 'இந்தியா டுடே' பத்திரிகை நடத்திய 'மாநிலங்களின் நிலை' என்ற தலைப்பில் மேற்கொண்ட ஆய்வில், 'ஒட்டு மொத்த செயல்திறன் மிக்க மாநிலம்' என்று தமிழ்நாடு தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.** தமிழ்நாட்டு மக்களின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்காக நாங்கள் கடுமையாக உழைத்துள்ளோம் என்பதில் பெருமிதம் கொள்கிறோம். அம்மா அவர்களின் அமைதி, வளம் மற்றும் வளர்ச்சி என்ற தாரக மந்திரத்தை அடைவதில் எங்களது முனைப்பு தமிழ்நாட்டை மென்மேலும் உயரத்திற்குக் கொண்டு செல்லும்.

4) தமிழ்நாடு அமைதிப் பூங்காவாக தொடர்ந்து திகழ்ந்து வருகிறது. எங்கள் அரசு மக்களின் தேவையைக் கண்டறிந்து, முனைப்புடன் நிறைவேற்றுகிறது. வல்லுநர்கள், அறிஞர்கள் மற்றும் கல்வியாளர்களின் அறிவுரைகளை கேட்டறிந்து, அதனைப் பின்பற்றி, நாங்கள் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறோம். தமிழ்நாட்டில் புதிய திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக, தமிழக அரசுடன் இணைந்து செயல்பட, பலதரப்பட்ட நிதி நிறுவனங்கள் முன்வருவதைக் கண்டு நாங்கள் பெருமை கொள்கிறோம். கோவிட்–19 பெருந்தொற்று காலத்திலும் கூட, முதலீட்டை ஈர்ப்பதில் ஒரு முன்னணி இலக்காக தமிழ்நாடு திகழ்ந்து வருகிறது.

**கோவிட்–19 பெருந்தொற்று மற்றும் மீட்டெடுப்பு**

5) 2020 ஆம் ஆண்டு கோவிட்–19 பெருந்தொற்று நோய் தாக்கிய ஆண்டாக, வரலாற்றில் எப்பொழுதும் நினைவு கூறப்படும். **கோவிட்–19 பெருந்தொற்று நோயால் நம் மாநிலத்தில் ஏற்பட்ட முன் நிகழ்வற்ற சவால்கள் மற்றும் மிகப்பெரிய தாக்கத்தின் விளைவுகள் இந்த வரவு–செலவுத் திட்டத்தில் காணப்படுகின்றன.** தொற்றுநோயின் ஆரம்ப காலக்கட்டத்தில், தொற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையில், மகாராஷ்டிரா மாநிலத்திற்கு அடுத்ததாக, நாட்டில் இரண்டாவது இடத்தில் தமிழ்நாடு இருந்தது. மேலும், இறப்பு எண்ணிக்கை ஒரு சவாலாக இருந்தது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில், ஒட்டுமொத்த நிர்வாக அமைப்பும் ஒருங்கிணைந்து செயல்பட்டது. பெருந்தொற்றின் பல்வேறு பரிமாணங்களைக் கையாளுவதற்காக தலைமைச் செயலாளரின் கீழ் ஒரு பணிக்குழுவும், மூத்த இந்திய ஆட்சிப்பணி அதிகாரிகளைக் கொண்ட ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழுக்களும் அமைக்கப்பட்டன. அனைத்து பொது சுகாதார மற்றும் மருத்துவ சேவை அமைப்புகள் திறம்பட

செயல்பட்டன. சுகாதாரம், காவல், வருவாய், ஊரக வளர்ச்சி மற்றும் நகராட்சி நிர்வாகம் ஆகிய துறைகளின் முன்களப் பணியாளர்கள் அயராது உழைத்துள்ளனர். இத்தகைய திட்டமிட்ட முயற்சிகளாலும், பயனுள்ள நடவடிக்கைகளாலும், கோவிட்–19 பெருந்தொற்று கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது என நாம் நம்பிக்கையுடன் கூறலாம். கோவிட்–19 தொற்றுநோயை கையாளுவதில் தமிழ்நாடு ஒரு சிறந்த முன்னோடி மாநிலமாக பாராட்டப்படுகிறது. தீர்க்கமாக முடிவெடுக்கும் ஆற்றலுடைய தலைமையினாலும், பொது சுகாதார வல்லுநர்களின் ஆலோசனையைப் பின்பற்றியதாலும் இது சாத்தியமானது. **மாண்புமிகு பிரதமர் அவர்களும், தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்படும் 100 சதவீத ஆர்.டி–பி.சி.ஆர் அடிப்படையிலான பரிசோதனை முறையையும், இணைய அடிப்படையிலான மருத்துவ சேவையான இ–சஞ்சீவனியை பயன்படுத்துவதிலும் முன்மாதிரிகளாக ஏனைய மாநிலங்கள் பின்பற்ற வேண்டும் எனக் குறிப்பிட்டார்.**

6) ஆய்வு செய்தல், பரிசோதனை மேற்கொள்ளுதல், தனிமைப்படுத்துதல் மற்றும் சிகிச்சையளித்தல் சார்ந்த பொது சுகாதார வழிகாட்டி நெறிமுறைகளை முனைப்பாக பின்பற்றியதால் கோவிட்–19 பெருந்தொற்றுப் பரவலைத் தடுத்து, கட்டுக்குள் கொண்டுவர முடிந்தது. திறம்பட்ட தடம் அறிதல், கடுமையான கட்டுப்பாட்டு மேலாண்மை, தீவிர பரிசோதனை மேற்கொள்ளுதல், தனிமைப்படுத்துதல் மற்றும் நோயாளிகள் மேலாண்மை போன்ற நடவடிக்கைகள் நல்ல பலன்கள் அளித்துள்ளன. இன்றைய நிலவரப்படி, தமிழ்நாட்டில் 4.94 சதவீத நோய்த்தொற்றுடன் 8,48,724 நோய்த்தொற்று தெரிவிக்கப்பட்டுள்ளன. தற்போது, மாநிலத்தின் வாராந்திர நோய்த் தொற்று ஒரு சதவீதத்திற்கும் குறைவாக கொண்டு வரப்பட்டுள்ளது. 8,32,167 நோயாளிகள் (98.05 சதவீதம்) சிகிச்சை பெற்று, நோயிலிருந்து மீண்டு,

வீடு திரும்பியுள்ளனர். 4,091 நோயாளிகள் சிகிச்சையில் உள்ளனர். நம் மாநிலத்தில் மொத்த நோய்த்தொற்று இறப்பு வீதம் 1.47 சதவீதமாகக் குறைந்துள்ளது. இதே நோய்த்தொற்று எண்ணிக்கையுள்ள பிற மாநிலங்களுடன் ஒப்பிடுகையில், நம் மாநிலத்தின் நோய்த்தொற்று இறப்பு வீதம் கணிசமான அளவில் குறைவாக உள்ளது.

7) ஆர்.டி–பி.சி.ஆர் பரிசோதனை வசதிகள் மாநிலம் முழுவதும் அதிகரிக்கப்பட்டு, தற்போது 68 அரசு மருத்துவமனைகளிலும், 186 தனியார் மருத்துவமனைகளிலும் செயல்பாட்டில் உள்ளன. 2020 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல், பரிசோதனைகளின் எண்ணிக்கை நாளொன்றுக்கு 70,000 மாதிரிகளாக அதிகரிக்கப்பட்டுள்ளன. 1.68 கோடிக்கும் மேற்பட்ட மாதிரிகளை பரிசோதனை செய்து, நாட்டிலேயே அதிக அளவில் ஆர்.டி–பி.சி.ஆர் பரிசோதனைகளை மேற்கொண்ட மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது. நோயாளிகளுக்கான சிகிச்சை மேலாண்மையில் கோவிட்–மருத்துவமனைகள், கோவிட் சுகாதார மையங்கள் மற்றும் கோவிட் பராமரிப்பு மையங்கள் என மூன்று வகைகள் உள்ளன. கோவிட் மருத்துவமனைகளிலும் சுகாதார மையங்களிலும், ஆக்சிஜன் வசதிகள் கொண்ட 34,849 படுக்கைகள் உட்பட 1,38,310 படுக்கை வசதிகள், அவசர சிகிச்சை பிரிவுக்காக 7,709 படுக்கைகள் மற்றும் 6,517 உயிர் காக்கும் கருவிகள் (ventilators) ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்த அவசரகால சூழ்நிலையை கையாளுவதற்காக 530 மருத்துவர்கள், 2,323 செவிலியர்கள், 1,508 ஆய்வக தொழில்நுட்ப பணியாளர்கள், 334 சுகாதார ஆய்வாளர்கள், 982 முதுநிலை மருத்துவப் படிப்பை முடித்த மருத்துவர்கள், 1,239 அரசுப்பணியில் இல்லாத முதுநிலை மருத்துவப் படிப்பை முடித்த மருத்துவர்கள் மற்றும் 2,715 பல்நோக்கு சுகாதாரப் பணியாளர்கள் கூடுதலாக நியமிக்கப்பட்டனர். 2020 ஆம் ஆண்டு

மே மாதத்தில், 4,570 செவிலியர்களும், 2,000 துணை மருத்துவப் பணியாளர்களும், கூடுதலாக நியமிக்கப்பட்டுள்ளனர். முன்களப் பணியாளர்களை ஊக்குவிக்கும் வகையிலும், அவர்களின் ஆரோக்கியத்தைப் பராமரிக்கும் வகையிலும், அவர்களின் நலன் மற்றும் தனிமைப்படுத்துதலுக்காக சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டது.

8) நோய்த்தொற்றைக் கண்டறிந்து, அதனை கட்டுப்படுத்துவதில் சென்னையில் நடத்தப்பட்ட காய்ச்சல் முகாம்களின் வெற்றி, அதனை மாநிலம் முழுவதும் பின்பற்றச் செய்தது. அதிகபட்சமாக, ஒவ்வொரு நாளும் 2,500 காய்ச்சல் முகாம்கள் நடத்தப்பட்டன. 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல், இதுவரையில் 6.17 இலட்சம் காய்ச்சல் முகாம்கள் நடத்தப்பட்டு, 3.60 கோடிக்கும் மேற்பட்ட நபர்களுக்கு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. 100 சதவீதம் முகக்கவசம் அணிதல், கைகளை கிருமிநாசினி கொண்டு சுத்தம் செய்தல், சமூக இடைவெளி, சுவாச உறுப்புகளை நோய்த்தொற்றிலிருந்து பாதுகாத்தல், தன் சுத்தம், பேறுகால சுத்தம், சுற்றுச்சூழலை தூய்மையாக வைத்திருத்தல், திடக்கழிவு மற்றும் திரவக்கழிவு மேலாண்மை போன்றவற்றைப் பின்பற்றும் வகையில் சமூக நலன் மற்றும் சுகாதாரம் குறித்த விழிப்புணர்வு பிரச்சாரம் நடத்தப்பட்டது. **ஆக மொத்தம், கோவிட்–19 பெருந்தொற்று மீட்டெடுப்பு நடவடிக்கைகளுக்காக, அரசு 13,352.85 கோடி ரூபாய் செலவினங்களை மேற்கொண்டுள்ளது.**

9) இத்தகைய தீவிர நடவடிக்கைகளால், பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை நாளொன்றுக்கு 500–க்கு கீழ் நிலைப்படுத்தப்பட்டு, நோய்த்தொற்று வீதம் கணிசமாகக் குறைந்துள்ளது. ஊரடங்கு வழிகாட்டி நெறிமுறைகள் படிப்படியாக தளர்த்தப்பட்டாலும், காய்ச்சலைக் கண்டறிதல், தீவிர பரிசோதனை மற்றும்

நோயாளிகளுக்குத் திறம்பட சிகிச்சையளித்தல் ஆகியவற்றுடன், கோவிட்–19 பெருந்தொற்றை கையாளுவதற்கான நடவடிக்கைகள், தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தற்போதைய நிலவரப்படி, மாநிலம் முழுவதும் மிகச் சில கட்டுப்பாடுகளுடன் அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்கு அனுமதிக்கப்பட்டதால், தமிழ்நாடு மீண்டும் இயல்பு நிலைக்குத் திரும்புகின்றது. இந்த அரசு தமிழ்நாட்டு மக்களைப் பாதுகாப்பதற்காக, எந்த ஒரு தளர்வும் இல்லாமல் தொடர்ந்து விழிப்புடன் செயலாற்றி வருகிறது.

10) மத்திய அரசின் உத்தரவுகளின்படி, தடுப்பூசி வழங்குவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதுவரையில், 16.70 இலட்சம் கோவிட்–19 தடுப்பூசிகள் பெறப்பட்டு, 3.85 இலட்சம் சுகாதாரப் பணியாளர்களுக்கும் முன்களப் பணியாளர்களுக்கும் தடுப்பூசி செலுத்தப்பட்டது. அடுத்த கட்டத்தில், எளிதில் பாதிக்கப்படக்கூடியவர்களான மூத்த குடிமக்களுக்கும், ஏற்கெனவே பல்வேறு நோய்த் தாக்குதல்களுக்கு உள்ளானவர்களுக்கும் தடுப்பூசி விரைவில் செலுத்தப்படும். 2021–22 ஆம் ஆண்டிற்கான, மத்திய அரசின் வரவு–செலவுத் திட்டத்தில், கோவிட்–19 தடுப்பூசி அளிக்கும் பணிகளுக்காக 35,000 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்ததனால், தடுப்பூசி அளிக்கும் பணிகளுக்கான முழு செலவினத்தை மத்திய அரசு தொடர்ந்து மேற்கொள்ளும் என எதிர்பார்க்கிறோம்.

11) பெருந்தொற்று பரவலால் சமூகப் பொருளாதாரத்தில் பெருமளவில் தாக்கம் ஏற்பட்டது. இது, சமீபகாலத்தில் பொருளாதாரம் சார்ந்திராத காரணத்தால் ஏற்பட்ட, முதல் பொருளாதார நெருக்கடியாகும். தமிழ்நாடு அரசு எடுத்த பல்வேறு சுகாதார நடவடிக்கைகள், மேலும்

தொற்றுநோயின் தாக்குதலில் இருந்து மக்களைப் பாதுகாத்ததுடன், மாநிலத்தின் நீண்டகால வளர்ச்சித் திறனையும் பாதுகாத்துள்ளன. இருப்பினும், ஊரடங்கு உள்ளிட்ட சில நடவடிக்கைகளால் பொருளாதாரத்தில் குறுகிய காலத்தில் பாதகமான தாக்கங்கள் ஏற்பட்டுள்ளன. **எதிர்பார்த்த வளர்ச்சிப் பாதையில் தமிழ்நாட்டை மீண்டும் நிலைநிறுத்துவதற்கும், நீண்டகால நிதி இழப்பைக் கட்டுப்படுத்துவதற்கும், மாநில அரசு மேற்கொள்ள வேண்டிய இடைக்கால நடவடிக்கைகள் குறித்து பரிந்துரைகளை வழங்குவதற்காக, பொருளாதார வல்லுநர்கள் மற்றும் நிபுணர்களைக் கொண்ட உயர்மட்டக் குழுவை அரசு அமைத்தது. ஒவ்வொரு துறையிலிருந்தும் பொருளாதார வல்லுநர்கள், பயிற்றுநர்கள் மற்றும் நிபுணர்களை உள்ளடக்கிய இந்தக் குழுவிற்கு, முன்னாள் இந்திய ரிசர்வ் வங்கியின் ஆளுநர் டாக்டர் சி. ரங்கராஜன் அவர்கள் தலைமை தாங்கினார்.** இந்தக் குழு, பொருளாதார வளர்ச்சிக்கான வாய்ப்புகள் மற்றும் மாநில அரசின் கொள்கை முடிவுகள் குறித்து பகுப்பாய்வை மேற்கொண்டது. கோவிட்–19 ஆல் ஏற்பட்ட பாதிப்புகளுக்கு தமிழ்நாடு அரசு மிக விரைவான நடவடிக்கைகளை மேற்கொண்டு, ஏழைகள் மற்றும் எளிதில் பாதிக்கப்படக்கூடியவர்கள் மீது குறிப்பிட்ட கவனம் செலுத்தி, பல்வேறு அவசரகால மற்றும் இடைக்கால நடவடிக்கைகளை செயல்படுத்தியது என குழுவால் பாராட்டப்பட்டுள்ளது.

12) இக்குழு, 2020–21 ஆம் ஆண்டில் பொருளாதார வளர்ச்சிக்கான கணிப்புகளை இரண்டு சூழல்களில் காட்சிப்படுத்தியுள்ளது. ஒரு சூழலில், மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி 1.31 சதவீதமாகக் குறையும் எனவும், மற்றொன்றில் எதிர்மறை வளர்ச்சி (–) 0.61 சதவீதமாக இருக்கும் எனவும் குறிப்பிட்டது. உடனடிப் பொருளாதார நிவாரணம், புதுப்பித்தல் நடவடிக்கைகள், வேளாண்மை மற்றும் வேளாண் சார்ந்த துறைகள், தொழில்துறை, குறு,

சிறு மற்றும் நடுத்தரத் தொழில் துறைகள், வளர்ந்து வரும் துறைகள், கட்டுமானம் மற்றும் வீட்டுமனை விற்பனை தொழில் (Real Estate), நிதி மற்றும் வங்கிகள், சுற்றுலா, சமூகத் துறைகள், மாநிலங்களுக்கு இடையே புலம் பெயரும் தொழிலாளர்கள் மற்றும் **மாநில நிதி நிலை தொடர்பான துறை சார்ந்த 413 பரிந்துரைகளையும் குறிப்புகளையும் இக்குழு வழங்கியது. தமிழ்நாடு அரசு குழுவின் பரிந்துரைகள் மற்றும் குறிப்புகளை முனைப்புடன் செயல்படுத்தத் தொடங்கி, இதுவரையில் 273 பரிந்துரைகளைச் செயல்படுத்தியுள்ளது.**

13) பொருளாதாரத்தில் உற்பத்தித் துறைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கும் விதமாக, ஊரடங்கில் தளர்வுகள் அனுமதித்தல், எதிர் சுழற்சி நிதிமுறையைச் (counter cyclical fiscal policy) சார்ந்த நடவடிக்கைகள், தொற்றுநோயை எதிர்கொள்வதற்கு உதவும் முக்கிய துறைகளில் முதலீடுகளையும் உற்பத்தித் திறனையும் ஊக்குவித்தல் என தமிழ்நாடு அரசால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளால், மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சி எதிர்பார்த்ததைவிட விரைவாக மீண்டெழுந்துள்ளது. எதிர் சுழற்சி நிதிமுறையைப் பின்பற்றியதால், 2020–21 ஆம் ஆண்டில் ஒட்டுமொத்த வருவாய் வரவினங்கள் கணிசமான அளவில் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இருந்த போதிலும், 2020–21 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் மதிப்பிடப்பட்டதை விட, ஒட்டுமொத்த வருவாய் செலவினங்கள் அதிகரித்துள்ளன. **2020–21 ஆம் ஆண்டில், குறைந்தபட்சம் 10,000 கோடி ரூபாய் கூடுதல் மூலதனச் செலவினங்களை மேற்கொள்ள வேண்டும் என்ற டாக்டர் சி. ரங்கராஜன் குழுவின் தலைமையிலான உயர்மட்டக் குழுவின் பரிந்துரையின் மீது இந்த அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்துள்ளது.** 2020–21 ஆம் ஆண்டு வரவு–செலவுத்

திட்ட மதிப்பீட்டில் செய்த ஒதுக்கீட்டிற்கு மேல் நீர்ப்பாசனம், கட்டடங்களின் கட்டுமானம், சாலைகள் மற்றும் நெடுஞ்சாலைகள், வீட்டுவசதி, குடிநீர் வழங்கல் மற்றும் சுகாதாரம் போன்ற **மூலதனப் பணிகளுக்கு ஒட்டுமொத்தமாக 20,013 கோடி ரூபாய் மதிப்பில் கூடுதலாக ஒப்புதல்கள் வழங்கப்பட்டன.** இதனால், இந்த ஆண்டில் ஏற்படும் மூலதனச் செலவினங்கள், ஆரம்பக்கட்ட இலக்கைவிட அதிகமாக இருக்கும்.

14) அரசு மேற்கொண்ட இந்த நடவடிக்கைகளின் விளைவாக, **2020–21 ஆம் ஆண்டில் தமிழ்நாடு, 2011–12 ஆம் ஆண்டின் நிலையான விலை விகிதத்தில் 2.02 சதவீதம் நேர்மறை வளர்ச்சியைப் பதிவு செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது, 2020–21 ஆம் ஆண்டின் அகில இந்திய பொருளாதார வீழ்ச்சி விகிதமான 7.7 சதவீதத்திற்கு மாறாக உள்ளது. கால்நடைத் துறை மற்றும் மீன்வளத் துறையில் வலுவான வளர்ச்சி உட்பட முதன்மைத் துறை 5.23 சதவீதம் வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது.** உற்பத்தித் துறையில் 1.25 சதவீதமும், சேவைத் துறையில் 1.64 சதவீதமும் வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. கோவிட்–19 பெருந்தொற்று நோயை எதிர்கொள்வதற்காக தமிழ்நாடு அரசால் மேற்கொள்ளப்பட்ட முனைப்பான நடவடிக்கைகளால், 2020–21 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்பட்ட பொருளாதார வளர்ச்சியைக் காட்டிலும் இவை மிகச்சிறந்ததாக அமைந்தது. 2021–22 ஆம் ஆண்டில், பொருளாதார வளர்ச்சி மேலும் வலுவானதாக அமையும் என்பதில் அரசுக்கு எந்த ஒரு ஐயமும் இல்லை.

## தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023

15) வளர்ந்த நாடுகளுக்கு இணையாக தமிழ்நாட்டின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் வகையில், மறைந்த முன்னாள்

முதல்வர் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் சிந்தையில் உருவான திட்டம் 'தொலைநோக்குத் திட்டம் 2023' ஆகும். இத்திட்டத்தின் கீழ் கண்டறியப்பட்ட 217 திட்டங்களில், 157 திட்டங்களுக்கான பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பல முக்கிய திட்டங்களான, முதன்மையான மாநில நெடுஞ்சாலைகள், மெட்ரோ இரயில், துணைக்கோள் பேருந்து முனையம் மற்றும் வேளாண் உட்கட்டமைப்புகளை உருவாக்குதல் மற்றும் மேம்படுத்தும் பணிகள், செய்து முடிக்கப்பட்டுள்ளன. மேலும், 18 திட்டங்களுக்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதுடன் மேலும் 19 திட்டங்களுக்கான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**15வது நிதிக்குழு மற்றும் மத்திய – மாநில நிதி உறவுகள்**

16) 2021–22 முதல் 2025–26 வரையுள்ள காலத்திற்கான 15வது நிதிக்குழுவின் இறுதி அறிக்கையுடன், நடவடிக்கை எடுக்கப்பட்டதற்கான குறிப்பாணை 2021 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 1–ஆம் தேதியன்று, மாண்புமிகு மத்திய நிதியமைச்சரால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. 2020–21 ஆம் ஆண்டிற்கான நிதிக்குழுவினால் அளிக்கப்பட்ட இடைக்கால அறிக்கையில், தமிழ்நாடு போன்று சிறப்பாகச் செயல்படும் மாநிலத்திற்கு உரிய பலன்கள் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்புகளுக்கு மாறாக, 15வது நிதிக்குழுவின் இறுதி அறிக்கை அமைந்துள்ளது. இந்த அறிக்கை, தமிழ்நாட்டின் நியாயமான எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்யாமல் இருப்பதுடன் முந்தைய நிதிக்குழுக்களில், குறிப்பாக 14வது நிதிக்குழுவில் இழைக்கப்பட்ட அநீதியை சரிசெய்யவில்லை.

17) மத்திய அரசிடமிருந்து, மாநிலத்திற்கான வரிப் பகிர்வு 41 சதவீதமாகப் பராமரிக்கப்பட்டு வந்துள்ளது. 14வது நிதிக்குழுவில்,

மாநிலங்களுக்கு இடையேயான நிதிப்பகிர்வில் தமிழ்நாட்டின் பங்கு 4.023 சதவீதத்திலிருந்து, 15வது நிதிக்குழுவின் இடைக்கால அறிக்கையில் 4.189 சதவீதமாக ஓரளவிற்கு உயர்ந்து, தற்போது இறுதி அறிக்கையில் 4.079 சதவீதமாக குறைந்துள்ளது. 2020–21 ஆம் ஆண்டின் தமிழ்நாட்டிற்கான வருவாய் பற்றாக்குறை மானியமான 4,025 கோடி ரூபாயை வழங்க முதன்முறையாக இடைக்கால அறிக்கை பரிந்துரை செய்திருந்தது. இது நமது மாநிலத்திற்கு தொடர்ந்து உதவுகின்ற வகையில் அமையும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியது. ஆனால், **இறுதி அறிக்கையில் 2021–22 ஆம் ஆண்டில், வருவாய் பற்றாக்குறை மானியத்தைக் குறைத்து 2,204 கோடி ரூபாய் மட்டுமே பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இத்தொகை, முதலாவது ஆண்டிற்கு மட்டும்தான் (2021–22) வழங்கப்படும்.**

18) **தமிழ்நாட்டிற்குப் பரிந்துரைக்கப்பட்ட மொத்த உள்ளாட்சி அமைப்பு மானியத் தொகை, 2020–21 ஆம் ஆண்டில் 5,344 கோடி ரூபாயிலிருந்து 2021–22 ஆம் ஆண்டில் 3,979 கோடி ரூபாயாகக் குறைக்கப்பட்டுள்ளது.** 13வது நிதிக்குழுவில் பரிந்துரைக்கப்பட்ட 5,455.90 கோடி ரூபாய் உள்ளாட்சி அமைப்பு மானியத்தைவிட, 14வது நிதிக்குழுவின் ஐந்தாண்டு காலத்திற்கான உள்ளாட்சி அமைப்பு மானியம் மும்மடங்கு அதிகரித்து 17,009.74 கோடி ரூபாயாகப் பரிந்துரைக்கப்பட்டிருந்தது. இதனை ஒப்பிடுகையில், 15வது நிதிக்குழு 2021–22 ஆம் ஆண்டிலிருந்து 2025–26 ஆம் ஆண்டு வரையிலான ஐந்தாண்டு காலத்திற்கான உள்ளாட்சி அமைப்பு மொத்த மானியமாக 21,246 கோடி ரூபாயை பரிந்துரைத்துள்ளது. இத்தொகையானது, 14வது நிதிக்குழுவால் பரிந்துரைக்கப்பட்ட மானியங்களைக் காட்டிலும் மிகக் குறைந்த அளவில் அதிகரிக்கப்பட்டதையே காட்டுகிறது. **14வது நிதிக்குழுவால்**

**பரிந்துரைக்கப்பட்ட தொகையை விட, தமிழ்நாட்டின் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான மொத்த மானியத் தொகை 15வது நிதிக்குழுவின் பரிந்துரைகளில் கணிசமாகக் குறைந்துள்ளது. அதாவது, 2016 முதல் 2020 ஆம் ஆண்டு வரையிலான காலக்கட்டத்தில் 8,232.31 கோடி ரூபாயிலிருந்து, 2021 முதல் 2026 ஆம் ஆண்டு வரையிலான காலக்கட்டத்தில் 7,187 கோடி ரூபாயாகக் குறைக்கப்பட்டுள்ளன.** ஏனென்றால், 15வது நிதிக்குழுவால், தேசிய நகர்ப்புற மக்கள் தொகையில் தமிழ்நாட்டின் நகர்ப்புற மக்கள்தொகை விகிதாச்சாரத்தை அடிப்படையாகக் கொள்ளாமல், தேசிய ஒட்டுமொத்த மக்கள்தொகை மற்றும் பரப்பளவில், தமிழ்நாட்டின் மக்கள்தொகை மற்றும் பரப்பளவின் விகிதாச்சாரத்தை தவறான அடிப்படையாகக் கொண்டு, உள்ளாட்சி அமைப்புகளின் மானியம் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக, தமிழ்நாடு போன்ற நகரமயமாக்கப்பட்ட மாநிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

19) **முந்தைய நிதிக்குழுவால், உள்ளாட்சி அமைப்புகளுக்குப் பரிந்துரைக்கப்பட்ட ஒட்டுமொத்த மானியத் தொகையில், நிபந்தனையில்லாத மானியத்தின் பங்கு, ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு 90 சதவீதத்திலிருந்து 40 சதவீதமாகவும், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு 80 சதவீதத்திலிருந்து 40 சதவீதமாகவும் குறைக்கப்பட்டுள்ளன.** மீதமுள்ள மானியங்கள் செயல்திறன் மானியமாகவும் ஊக்க மானியமாகவும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு விடுவிக்கப்படும். முந்தைய அனுபவத்தினால், உண்மையில் இந்த மானியங்கள் உரிய நேரத்தில் விடுவிக்கப்படுமா என்ற ஐயம் உள்ளது. 14வது நிதிக்குழுவின் பரிந்துரைகளின்படி, தமிழ்நாட்டில் உள்ள உள்ளாட்சி அமைப்புகளுக்கு உரிய 548.76 கோடி ரூபாய் அடிப்படை மானியம் மற்றும் 2,029.22 கோடி ரூபாய், செயல்திறன் மானியம், மத்திய

அரசால் இதுவரை விடுவிக்கப்படவில்லை. இந்த அரசின் தொடர் நடவடிக்கையின் காரணமாக, 2019–20 ஆம் ஆண்டுக்கான உரிய அடிப்படை மானியம் 3,796.81 கோடி ரூபாய் இவ்வாண்டில் தான் பெறப்பட்டுள்ளது. 2017–18 முதல் பெரும்பாலான மாநிலங்களுக்கு 14வது நிதிக்குழுவால் பரிந்துரைக்கப்பட்ட செயல்திறன் மானியம் மத்திய அரசால் விடுவிக்கப்படவில்லை. செயல்திறன் மானியத்திற்காக சுட்டிக்காட்டப்பட்ட அனைத்து நிபந்தனைகளையும் தமிழ்நாடு பூர்த்தி செய்து, அதன் கோரிக்கைகளை சமர்ப்பித்தது. 14வது நிதிக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் தமிழ்நாட்டிற்கு உரிய ஒட்டுமொத்த செயல்திறன் மானியங்களையும், மேலும் காலதாமதமின்றி விடுவிக்க வேண்டும் என்று மத்திய அரசை நாங்கள் கேட்டுக் கொள்கிறோம். 15வது நிதிக்குழுவால் பரிந்துரைக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்பிற்கான மானியத்தை மத்திய அரசிடமிருந்து உரிய நேரத்தில் பெறுவதற்கு தொடர்ந்து நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

20) 14வது நிதிக்குழு பரிந்துரைத்தது போல் அல்லாமல், **மாநிலத்திற்கு குறிப்பிட்ட மானியங்களையும், துறைகளுக்கு குறிப்பிட்ட மானியங்களையும் பரிந்துரைத்துள்ளது. நீதித்துறை மற்றும் புள்ளியியல் துறை உட்பட ஆளுகை மற்றும் நிர்வாகச் சீர்திருத்தங்கள், சுகாதாரம், பள்ளிக்கல்வி, உயர்கல்வி, வேளாண்மை மற்றும் ஊரக உட்கட்டமைப்பு, உள்ளிட்ட சில குறிப்பிட்ட துறைகளுக்காக தமிழ்நாட்டிற்கு 4,784 கோடி ரூபாய் செயல்திறன் ஊக்கத்தொகையையும், மானியங்களையும் 15வது நிதிக்குழு பரிந்துரைத்துள்ளது.** ஆனால், மாண்புமிகு மத்திய நிதி அமைச்சரால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட, நடவடிக்கை எடுக்கப்பட்ட குறிப்பாணையில், துறைகளுக்கான குறிப்பிட்ட மானியங்களைப் பொறுத்தவரையில், ‘நடைமுறையில் உள்ள மற்றும் புதிய மத்திய அரசால் பொறுப்பேற்கும்

மற்றும் மத்திய துறை திட்டங்களை வடிவமைக்கும்போதும், செயல்படுத்தும்போதும், ஆணையத்தால் அடையாளம் காணப்பட்ட துறைகளை மத்திய அரசு உரியவாறாக கருதிப் பார்க்கும்' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மத்திய துறை மற்றும் மத்திய அரசால் பொறுப்பேற்கப்பட்ட திட்டங்களுக்கான அவர்களின் பங்கிற்குப் பதிலாக, 15வது நிதிக்குழுவால் பரிந்துரைக்கப்பட்ட மானியங்களை பயன்படுத்த வேண்டாம் என மத்திய அரசை நாங்கள் வலியுறுத்துகிறோம். இதுநாள் வரை பின்பற்றப்பட்ட நடைமுறையிலிருந்து இது பெருமளவில் விலகுவதாக அமையும்.

21) சென்னை நீர்நிலைகளைச் சீரமைத்தல், வரலாற்றுச் சிறப்புமிக்க மற்றும் பழங்காலக் கோயில்களைப் புனரமைத்தல், பாரம்பரிய கட்டடங்களைப் பராமரித்தல், பாரம்பரிய நீர்நிலைகளை மறுசீரமைத்தல் மற்றும் சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த முக்கிய நகரங்களின் மேம்பாடு உள்ளிட்ட **ஐந்து திட்டங்களுக்கு மாநிலத்திற்கு குறிப்பிட்ட மானியமாக, தமிழ்நாட்டிற்கு 2,200 கோடி ரூபாயை குழு பரிந்துரைத்துள்ளது.** மாண்புமிகு மத்திய நிதியமைச்சரின், நடவடிக்கை எடுக்கப்பட்ட குறிப்பாணையில், 'மாநில அரசிடம் உள்ள நிபந்தனை இல்லாத நிதி ஆதாரங்கள் மற்றும் மத்திய அரசின் நிதி சார்ந்த பொறுப்புகளைக் கருத்திற்கொண்டு, மேற்கூறிய பரிந்துரைக்கு உரிய கவனம் செலுத்தப்படும்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. நிதிக்குழுவின் பரிந்துரைகளை ஒரு தீர்ப்பாகச் செயல்படுத்தும் வழக்கத்தைப் பின்பற்றி, 15வது நிதிக்குழுவால் பரிந்துரைக்கப்பட்ட, மாநிலத்திற்கு குறிப்பிட்ட மானியங்களையும், துறைகளுக்கு குறிப்பிட்ட மானியங்களையும் எந்த ஒரு கூடுதல் நிபந்தனைகளையும் விதிக்காமல், மாநிலங்களுக்கு நேரடியாக விடுவிக்க வேண்டும் என்று மத்திய அரசை நாங்கள் வலியுறுத்துகிறோம்.

22) **15வது நிதிக்குழு அதன் அறிக்கையில்,** மத்திய அரசால் விதிக்கப்பட்ட மேல்வரிகள் மற்றும் கூடுதல் கட்டணங்கள் தொடர்ந்து அதிகரித்து வரும் போக்கை குறிப்பிட்டுள்ளது. இவை, மாநிலங்களுடன் பகிர்ந்துகொள்ளக் கூடிய வரி வருவாயின் பங்காக இல்லை. **மத்திய அரசின் மொத்த வரி வருவாயில், மேல்வரி மற்றும் கூடுதல் கட்டணங்களின் பங்கானது, 2011–12 ஆம் ஆண்டில் 10.4 சதவீதத்திலிருந்து, 2019–20 ஆம் ஆண்டின் திருத்த மதிப்பீடுகளில் 20.2 சதவீதமாக அதிகரித்துள்ளது என அறிக்கை குறிப்பிட்டுள்ளது.** இந்தப் போக்கை நிதிக்குழு குறிப்பிட்டிருந்தாலும், தமிழ்நாடு உட்பட பல்வேறு மாநிலங்கள் கோரியபடி, அடிப்படை வரி விகிதத்தில் மேல்வரி மற்றும் கூடுதல் கட்டணங்களை இணைப்பது அல்லது அவற்றை மாநிலங்களுடன் பகிர்ந்துகொள்ளக் கூடிய மொத்த வரி வருவாயுடன் சேர்ப்பது குறித்து எந்தவொரு திட்டவட்டமான பரிந்துரையையும் 15வது நிதிக்குழு செய்யவில்லை என்பது வருத்தமளிக்கிறது.

23) **2020 ஆம் ஆண்டு மே மாதத்தில், பெட்ரோல் மற்றும் டீசல் மீது விதிக்கப்படும் ஆயத்தீர்வையில் மத்திய அரசு மேல்வரி மற்றும் கூடுதல் கட்டணங்களின் பங்கை கணிசமாக உயர்த்தி, அடிப்படை தீர்வையின் பங்கைக் குறைத்துள்ளது.** பெட்ரோல் மற்றும் டீசல் மீதான பல்வேறு வரிகளின் காரணமாக மத்திய அரசின் வருவாய் ஏப்ரல் முதல் நவம்பர் வரையிலான காலத்தில், 2019 ஆம் ஆண்டை ஒப்பிடும்போது, 2020 ஆம் ஆண்டில் 48 சதவீத வளர்ச்சியைக் கண்டது. ஆனால், இதே காலகட்டத்தில், 2019 ஆம் ஆண்டை ஒப்பிடும்போது, 2020 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் பெட்ரோல் மற்றும் டீசல் மீதான ஆயத்தீர்வையின் பங்கு குறைந்து, 39.40 சதவீதம் மட்டும் பெற்றுள்ளது. 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 18 ஆம் தேதியன்று நடைபெற்ற வரவு–செலவுத் திட்டத்திற்கு முந்தைய கூட்டத்தில், மத்திய

வரிகளிலிருந்து பகிர்ந்தளிக்கப்படும் உரிய பங்கினை மாநிலங்கள் பெறும் வகையில், அனைத்து மேல்வரி மற்றும் கூடுதல் கட்டணங்களை அடிப்படை வரி விகிதத்துடன் இணைக்கவேண்டும் என்று நான் தனிப்பட்ட முறையில் மாண்புமிகு மத்திய நிதியமைச்சரிடம் கேட்டுக்கொண்டேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் இப்பிரச்சினையை மத்திய அரசின் கவனத்திற்கு எடுத்துச் சென்றுள்ளார். இருப்பினும், **2021–22 ஆம் ஆண்டின் மத்திய வரவு–செலவுத் திட்ட அறிக்கையில், பெட்ரோல் மற்றும் டீசல் மீதான அடிப்படை ஆயத்தீர்வையை மேலும் குறைத்து, விவசாய உட்கட்டமைப்பு மேம்பாட்டு மேல்வரி விதிக்கப்பட்டது.**

24) இதேபோல் **2013–14 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட தனிநபர் வருமான வரி மீதான கூடுதல் கட்டணம் மேலும் விரிவாக்கப்பட்டு, அதிகரித்ததன் மூலம் மத்திய அரசிற்கு பெருமளவிலான வருவாயை அளித்து வருகிறது. ஆனால், இந்த அதிகரிக்கப்பட்ட வருவாயில் இருந்து, மாநிலங்களுக்கு எந்தவிதமான பங்கும் கிடைப்பதில்லை. 2021–22 ஆம் ஆண்டின் மத்திய அரசின் வரவு–செலவுத் திட்டத்தில் தங்கம், வெள்ளி, மதுபானங்கள், கச்சா சமையல் எண்ணெய், நிலக்கரி, பழுப்பு நிலக்கரி மற்றும் முற்றா நிலக்கரி (Lignite and Peat), ஆப்பிள்கள், பருப்பு வகைகள் மற்றும் தரமான உரங்கள் உட்பட பல்வேறு பொருட்கள் மீதான அடிப்படை சுங்க வரி குறைக்கப்பட்டு, அதற்கு மாற்றாக வேளாண்மை உட்கட்டமைப்பு மேம்பாட்டு மேல்வரி விதிக்கப்பட்டுள்ளது.** இந்த நடவடிக்கைகள் அனைத்தும் மாநிலங்களுடன் பகிர்ந்துகொள்ளக் கூடிய மத்திய வரி வருவாயை மேலும் குறைத்துள்ளன. அனைத்து மேல்வரிகள் மற்றும் கூடுதல் கட்டணங்களை அடிப்படை வரி விகிதத்துடன் இணைக்கவும்,

மாநிலங்கள் தங்களது உரிய வருவாயின் பங்கினைப் பெறுவதை உறுதிசெய்யவும் மத்திய அரசை நாங்கள் வலியுறுத்துகிறோம்.

**தமிழ் வளர்ச்சி**

25) தமிழ்நாடு பாரம்பரியம்மிக்க பண்பாட்டைக் கொண்டிருப்பதுடன், தமிழ் மொழியானது உலகில் மிகத் தொன்மை வாய்ந்த மொழியாகவும் திகழ்கிறது. தமிழ் மொழி மற்றும் பண்பாட்டின் பெருமையைப் பறைசாற்றும் வகையில் இந்த அரசு செயல்பட்டு வருகிறது. தமிழ் பண்பாட்டைப் போற்றும் விதமாக, இந்த ஆண்டு முதல், தைப்பூசம் திருநாள் பொது விடுமுறையாக அறிவிக்கப்பட்டுள்ளது. தமிழ் அறிஞர்கள் மற்றும் தமிழ் மொழியின் மாண்பிற்காகப் போராடியவர்களுக்கு தொடர்ந்து சிறப்பு செய்யப்படுவதுடன், அவர்களுக்கு மாதாந்திர உதவித் தொகையும் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. தமிழ் அறிஞர்களுக்கான உதவித்தொகையை 497 நபர்கள் பெற்று வருவதுடன், தமிழ்மொழி பேசும் பகுதிகளை தமிழ்நாட்டுடன் இணைக்கப் போராடிய 137 எல்லை வீரர்களும் உதவித் தொகையைப் பெற்று வருகின்றனர். தமிழ் அறிஞர்களுக்கு ஆண்டுதோறும் மொத்தமாக 78 விருதுகள் வழங்கப்படுவதுடன், தற்போது, அருட்பெருஞ்சோதி வள்ளலார் விருது மற்றும் காரைக்கால் அம்மையார் விருது ஆகிய இரண்டு புதிய விருதுகள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. மதுரையிலுள்ள உலகத் தமிழ்ச் சங்கத்திற்காக, 87,300 சதுர அடி பரப்பளவில் 37.25 கோடி ரூபாய் செலவில் பெருந்திட்ட வளாகம் கட்டப்பட்டுள்ளது. தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு வழங்கப்பட்டு வந்த ஆண்டுத் தொகுப்பு மானியமானது 5.98 கோடி ரூபாயிலிருந்து 24.92 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. **ஹார்வர்டு பல்கலைக்கழகம் மற்றும் ஹூஸ்டன் பல்கலைக்கழகத்தைப் போன்றே, கனடாவிலுள்ள டொரண்டோ**

**பல்கலைக் கழகத்திலும் தமிழ் இருக்கை அமைத்திட உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.**

**வருவாய் நிர்வாகம்**

26) அரசின் நிர்வாகத்தினை மக்களிடையே கொண்டு செல்வதற்காக, 2011 ஆம் ஆண்டிலிருந்து, 6 புதிய மாவட்டங்கள், 18 புதிய வருவாய் கோட்டங்கள் மற்றும் 92 புதிய வட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. 2011 ஆம் ஆண்டிலிருந்து, பொதுமக்கள் எளிதாக அணுகும் வகையில் 10 மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள், 43 வருவாய்க் கோட்டங்கள் மற்றும் 203 வட்டாட்சியர் அலுவலகங்கள் கட்டப்பட்டு, அவற்றில் போதிய பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

27) நம் மாநிலத்திலுள்ள மிகவும் ஏழ்மை நிலையில் உள்ளவர்களுக்கும், எளிதில் பாதிக்கப்படக்கூடியவர்களுக்கும் மாதாந்திர ஓய்வூதியம் வழங்குவதற்காக 8 சமூகப் பாதுகாப்புத் திட்டங்களை இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. தற்போது, இத்திட்டங்களின் கீழ் 33.60 இலட்சம் பயனாளிகள் ஓய்வூதியம் பெற்று வருகின்றனர். இத்திட்டங்களுக்காக, 2010–11 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் 1,083.78 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையை உயர்த்தி, 2021–22 ஆம் ஆண்டு இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 4,316.43 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. உழவர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர் உரிய நேரத்தில் உதவி பெறும் வகையில், முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டமானது 2011 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 10 ஆம் தேதியன்று தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ், இதுவரை 2,058 கோடி ரூபாய் செலவில் 28,58,092 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

28) 2011 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1 ஆம் தேதி முதல் இன்று வரையில் 25,32,732 இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு ஆண்டும் நிர்ணயிக்கப்பட்ட இலக்கை விட அதிகமான வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. 2019 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் அறிவித்த குடியிருப்பு ஆக்கிரமிப்புகளை வரன்முறை செய்வதற்கான சிறப்புத் திட்டம், மேலும் ஓராண்டிற்கு நீட்டிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், ஆட்சேபணையில்லாத புறம்போக்கு நிலங்களில் உள்ள குடியிருப்புகள் வரன்முறைப்படுத்தப்பட்டு, வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டு வருகின்றன. ஆட்சேபணையுள்ள புறம்போக்கு நிலங்களில் குடியிருக்கும் மக்களில் தகுதியானவர்களுக்கு, மாற்று வீட்டுமனைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதுவரை கண்டறியப்பட்ட 1,36,481 ஆட்சேபணையில்லாத புறம்போக்கு நிலங்களில், 60,203 வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

**29) 'புரட்சித் தலைவி அம்மா விரிவான விபத்து மற்றும் ஆயுள் காப்பீட்டுத் திட்டத்தை' இந்திய ஆயுள் காப்பீட்டு நிறுவனம் மற்றும் யுனைட்டெட் இந்தியா காப்பீட்டு நிறுவனங்களுடன் இணைந்து, மாநில அரசு துவக்கி வைத்துள்ளது என்பதை இந்த அவைக்குத் தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். இத்திட்டத்திற்கான முழு நிதியையும் மாநில அரசே ஏற்றுக்கொள்ளும். தமிழ்நாட்டில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள 55.67 இலட்சம் தகுதியான குடும்பங்களுக்கு, குடும்பத் தலைவரின் இயற்கை மரணத்திற்கு 2 இலட்சம் ரூபாய் காப்பீட்டுத் தொகை வழங்கப்படும். மேலும், குடும்பத் தலைவரின் விபத்து மரணத்திற்கு 4 இலட்சம் ரூபாய் காப்பீட்டுத் தொகையும், நிரந்தர இயலாமைக்கு 2 இலட்சம் ரூபாய் காப்பீட்டுத் தொகையும் வழங்கப்படும்.**

**பேரிடர் மேலாண்மை**

30) ‘நிவர்’ மற்றும் ‘புரெவி’ ஆகிய இரண்டு புயல்கள் மற்றும் 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் பருவம் தவறிப் பெய்த கனமழையால் தமிழ்நாடு தாக்கப்பட்டது. இதனால், பயிர்கள், உடைமைகள் மற்றும் பொதுச் சொத்துகள் பெருமளவில் சேதமடைந்தன. மொத்த சேதங்களை மதிப்பிட்டு, நிவர் புயலால் ஏற்பட்ட சேதங்களுக்காக 3,758.65 கோடி ரூபாயும், புரெவி புயலால் ஏற்பட்ட சேதங்களுக்காக 1,514 கோடி ரூபாயும், 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் பருவம் தவறிப் பெய்த கனமழை சேதங்களுக்காக 900.82 கோடி ரூபாயும் வழங்கக்கோரி மத்திய அரசிடம் கோரிக்கைமனு அளிக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட பகுதிகளில் மத்திய குழுவினர் ஆய்வு செய்துள்ளனர். **மாநிலப் பேரிடர் பொறுப்பு நிதியிலிருந்து கோவிட்–19 நிவாரண நடவடிக்கைகளுக்காக கணிசமான செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2020–21 ஆம் ஆண்டின் மாநிலப் பேரிடர் பொறுப்பு நிதியிலிருந்து இதுவரை மொத்தம் 11,943.85 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.** மேலும், 2020 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கோரிக்கையை ஏற்று, முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்கு பொதுமக்கள் அளித்த நன்கொடையிலிருந்து 200 கோடி ரூபாய் கோவிட்–19 நிவாரணப் பணிகளுக்கான செலவினங்களை மேற்கொள்வதற்காக, மாநிலப் பேரிடர் மேலாண்மை ஆணைய நிதிக்கு மாற்றம் செய்யப்பட்டது. இவ்வாறு, **மாநிலப் பேரிடர் பொறுப்பு நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட்ட அதிக அளவிலான செலவினங்கள், 2020–21 மற்றும் 2021–22 ஆம் ஆண்டுகளுக்காக, மாநிலப் பேரிடர் நிவாரண மற்றும் மேலாண்மை நிதிக்கு, மத்திய அரசின் பங்கு 1,020 கோடி ரூபாயுடன், தமிழ்நாட்டிற்காக 15வது நிதிக்குழுவால் பரிந்துரைக்கப்பட்டுள்ள தொகையான 1,360 கோடி**

**ரூபாய் உண்மையில் போதுமான அளவில் இல்லை** என்பதையே எடுத்துக்காட்டுகிறது. எனவே, தேசியப் பேரிடர் நிவாரண மற்றும் மேலாண்மை நிதியத்திலிருந்து தமிழ்நாட்டிற்கு போதுமான நிதியை மத்திய அரசு வழங்க வேண்டும் என்று நாங்கள் வலியுறுத்துகிறோம்.

**காவல்துறை**

31) சட்டம் ஒழுங்கை திறம்பட கையாளுவதால், முதலீட்டிற்கான ஒரு முன்னணி இலக்காக உருவாகியுள்ளதுடன், மக்கள் அச்சமின்றி அமைதியாக வாழும் இடமாகவும் தமிழ்நாடு அமைந்துள்ளது. எனவே, மாநிலக் காவல் துறைக்கு போதிய அளவில் மனித வளங்கள், வாகனங்கள், ஆயுதங்கள், வெடிமருந்துகள், மேம்பட்ட தொழில்நுட்பக் கருவிகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் கிடைப்பதை உறுதி செய்வதில், இந்த அரசு முன்னுரிமை அளிக்கின்றது. இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், காவல் துறையை நவீனமயமாக்குதல் பணிகளுக்காக 100.02 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. காவல்துறையின் காலிப் பணியிடங்கள் கணிசமாகக் குறைக்கப்பட்டுள்ளன. 2011 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 1 ஆம் தேதி முதல் இன்று வரையில் 65,503 காவல் துறை பணியாளர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். 10,329 இரண்டாம் நிலை காவலர்களை தேர்வு செய்யும் பணி தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. **2011–12 ஆம் ஆண்டில் காவல்துறைக்கான வரவு–செலவுத் திட்ட நிதி ஒதுக்கம், 3,513.15 கோடி ரூபாயிலிருந்து 2021–22 ஆம் ஆண்டு இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 9,567.93 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.**

**தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறை**

32) 2020 ஆம் ஆண்டில், தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறை, 19,142 தீ விபத்துக்கான அழைப்புகளையும், 32,264 மீட்புக்கான அழைப்புகளையும் ஏற்று, கால்நடைகள் மற்றும் உடைமைகள் உட்பட, 2,129 உயிர்களைக் காப்பாற்றியுள்ளது. 2020–21 ஆம் ஆண்டில் 11 புதிய தீயணைப்பு நிலையங்களை உருவாக்கியதுடன், சிவகாசி தீயணைப்பு மீட்பு நிலையத்தை தரம் உயர்த்துவதற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இதனுடன், மாநிலத்திலுள்ள தீயணைப்பு மற்றும் மீட்பு நிலையங்களின் மொத்த எண்ணிக்கை 347 ஆக அதிகரித்துள்ளது. 2021–22 ஆம் ஆண்டு இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறைக்கு 436.68 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

**சாலைப் பாதுகாப்பு**

33) **தமிழ்நாட்டில் சாலைப் பாதுகாப்பிற்கு தொடர்ந்து முக்கியத்துவம் அளித்ததனால், 2016 ஆம் ஆண்டில் 17,218 ஆக இருந்த உயிரிழப்பிற்குக் காரணமான விபத்துகளின் எண்ணிக்கை 2020 ஆம் ஆண்டில் 8,060 ஆகக் குறைந்துள்ளது.** தமிழ்நாடு சாலை பாதுகாப்பு இயக்கம் தொடங்கப்பட்டு, காவல் துறை, போக்குவரத்து துறை, மாநில போக்குவரத்து துறை நிறுவனங்கள், நெடுஞ்சாலைத் துறை, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் சுகாதாரம் மற்றும் குடும்பநலத் துறை ஆகியவை ஒருங்கிணைந்து செயல்பட்டு வருகின்றன. இவ்வாறு, மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளால், தேசிய மற்றும் உலகளவில் பல விருதுகளை தமிழ்நாடு அரசு வென்றது. இந்த முயற்சிகள் முன்மாதிரியானவை எனப் பாராட்டப்பட்டுள்ளன.

**நீதித்துறை நிருவாகம்**

34) நீதியை விரைவாகவும் முனைப்பாகவும் வழங்குவது, ஒரு திறம்பட நிர்வகிக்கப்படும் நவீன நாட்டின் முக்கிய அம்சமாகும். **2019 மற்றும் 2020 ஆம் ஆண்டின் இந்திய நீதி அறிக்கைகளில் நீதித்துறை என்ற பிரிவில் தமிழ்நாடு முதல் இடத்தைப் பெற்றுள்ளது.** 2011 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை, சிறப்பு நீதிமன்றங்கள் உட்பட 520 நீதிமன்றங்களை இந்த அரசு அமைத்துள்ளது. 2012 ஆம் ஆண்டு குழந்தைகள் பாதுகாப்பு மற்றும் பாலியல் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் (போக்சோ), வழக்குகளை விசாரணை மேற்கொள்வதற்காக 16 சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன. நீதிமன்றங்களின் கட்டுமானப் பணிகள் மற்றும் நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் உட்பட ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளுக்காக 1,332 கோடி ரூபாய்க்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. 2021–22 ஆம் ஆண்டு இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், புதிய நீதிமன்றக் கட்டடங்களைக் கட்டுவதற்காக 289.78 கோடி ரூபாய் உட்பட நீதி நிர்வாகத்திற்காக 1,437.82 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**வேளாண்மை**

35) தமிழ்நாட்டிலுள்ள மக்கள் தொகையில் 50 சதவீதமாக இருக்கும் விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்களின் நலனுக்கு இந்த அரசு முன்னுரிமை அளித்து வருகிறது. 8 ஆண்டுகளுக்குப் பிறகு, கடந்த ஆண்டு, உரிய நாளான ஜூன் 12 ஆம் தேதியன்றே மேட்டூர் அணை திறக்கப்பட்டது. இதனால், சாதனை அளவாக 4.12 இலட்சம் ஏக்கரில் குறுவை நெல் பயிரிடப்பட்டது. போதுமான பாசன வசதிகள் கிடைத்ததாலும், உரிய நேரத்தில் விதைகள் மற்றும் பிற இடுபொருட்கள்

வழங்கப்பட்டதாலும், விவசாயிகள் ஒரு நல்ல மகசூலை எதிர்பார்த்திருந்தார்கள். ஆனால், தொடர்ச்சியான இரண்டு புயல்களான நிவர் மற்றும் புரெவி மற்றும் 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் பருவம் தவறிப் பெய்த கனமழையின் காரணமாக அறுவடை நேரத்தில் விவசாயிகளின் பயிர்கள் சேதமடைந்து, அவர்களின் நம்பிக்கையை சிதைத்தது. முற்றிய பயிர்களுக்கு ஏற்பட்ட சேதங்களின் காட்சிகள் இதயத்தை உருக்கின. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் ஒரு விவசாயியாக இருப்பதால், விவசாயிகளின் துயரத்தைப் புரிந்துகொண்டு, விவசாயிகளுக்கு உதவும் வகையில் தொடர்ச்சியாக நடவடிக்கைகளை மேற்கொண்டார். பயிர்களுக்கு வழங்கவேண்டிய நிவாரணம், மானாவாரிப் பயிர்களுக்கு ஹெக்டேர் ஒன்றிற்கு 7,410 ரூபாயிலிருந்து 10,000 ரூபாயாகவும், நெல் மற்றும் இதர இறைவைப் பயிர்களுக்கு ஹெக்டேர் ஒன்றிற்கு 13,500 ரூபாயிலிருந்து 20,000 ரூபாயாகவும், பல்லாண்டுகாலப் பயிர்களுக்கு ஹெக்டேர் ஒன்றிற்கு 18,000 ரூபாயிலிருந்து 25,000 ரூபாயாகவும் உயர்த்தப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், நிவாரணம் பெறுவதற்கு உச்சவரம்பான 2 ஹெக்டேர் பரப்பளவு என்ற அளவுகோலையும் நீக்கிவிட்டார். இதன் விளைவாக, மாநிலம் முழுவதும் உள்ள 15.25 இலட்சம் விவசாயிகளின் வங்கிக் கணக்குகளுக்கு, மொத்தம் 1,715 கோடி ரூபாய் நேரடியாகச் செலுத்தப்பட்டு வருகிறது.

36) இந்த நடவடிக்கையைத் தொடர்ந்து, **மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், விவசாயிகளுக்கு மேலும் நிவாரணம் அளிக்கும் விதமாக, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்களுக்குச் செலுத்தப்பட வேண்டிய அனைத்து பயிர்க் கடன்களையும் தள்ளுபடி செய்வதாக அறிவித்தார். இதனால், 16,43,347 விவசாயிகள் செலுத்த வேண்டிய மொத்தம் 12,110.74 கோடி ரூபாய் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.**

கோவிட்–19 காரணமாக கடும் நிதி நெருக்கடி ஏற்பட்ட நிலையில் கூட, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விவசாயிகளின் நலனுக்கு முன்னுரிமை அளித்து, இத்திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளார். **பயிர்க்கடன் தள்ளுபடித் திட்டத்திற்காக, 2021–22 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 5,000 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

37) இந்த நிவாரண நடவடிக்கைகளுடன், மறுசீரமைக்கப்பட்ட பிரதம மந்திரியின் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தை (RPMFBY) செயல்படுத்த இந்த அரசு கணிசமான அளவில் கூடுதல் நிதிச்சுமையை ஏற்று வருகிறது. மத்திய அரசு தனது காப்பீட்டுக் கட்டண மானியத்தில் உச்ச வரம்பு நிர்ணயித்திருந்ததாலும், பல காப்பீட்டு நிறுவனங்கள் இத்திட்டத்தில் பங்கேற்கத் தயங்கியதனாலும், பல மாநிலங்களில் இத்திட்டத்தின் செயல்பாடு நிறுத்தப்பட்டது. இருந்த போதிலும், **தமிழ்நாடு அரசு காப்பீட்டுக் கட்டண மானியத்தை கூடுதல் சுமையாக ஏற்றுக்கொண்டு, 80:20 எனும் பகிர்மான அடிப்படையில் வடிவமைக்கப்பட்ட ஒரு புதிய இணைக் காப்பீட்டு முறையை அறிமுகப்படுத்தியுள்ளது. இதன் மூலம், நடப்பு ஆண்டில் விவசாயிகளுக்கு போதுமான இடர்க் காப்பீடு உறுதி செய்யப்பட்டுள்ளது. 2020–21 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் இத்திட்டத்திற்கான ஒதுக்கீடான 747.15 கோடி ரூபாயை உயர்த்தி, 2020–21 ஆம் ஆண்டில் திருத்த மதிப்பீடுகளில் 812.09 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்தொகையை மேலும் உயர்த்தி, 2021–22 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 1,738.81 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

38) அரிதான நீர்வளங்களைப் பாதுகாக்க நுண்ணீர்ப் பாசனம் இன்றியமையாதது. எனவே, நுண்ணீர்ப் பாசனத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் தமிழ்நாடு முன்னணியில் உள்ளது. **2011–12 ஆம் ஆண்டிலிருந்து, நுண்ணீர்ப் பாசனத் திட்டத்தின் கீழ், 4,060.12 கோடி ரூபாய் மொத்தச் செலவில், 19.26 இலட்சம் ஏக்கர் பரப்பளவு நிலம் கொண்டு வரப்பட்டுள்ளது.** 2020–21 ஆம் ஆண்டில், ஒரு சாதனையாக 1,200 கோடி ரூபாய் மானியம் வழங்கப்பட்டு, 5 இலட்சம் ஏக்கர் பரப்பளவு நிலம் நுண்ணீர்ப் பாசனத்தின் கீழ் கொண்டு வரப்படுகிறது.

39) மாநிலத்திலுள்ள விவசாயிகளின் வருமானத்தை உயர்த்திட, தமிழ்நாடு நிலைக்கத்தக்க மானாவாரி மேம்பாட்டு இயக்கம் மீண்டும் தொடங்கப்பட்டு, மூன்றாண்டு காலத்தில் மேலும் 25 இலட்சம் ஏக்கர் பரப்பளவு நிலம் இதன் கீழ் கொண்டுவரப்பட உள்ளது. நடப்பு ஆண்டில் கோடை உழவு, மானிய விலையில் விதை விநியோகம், வேளாண் இயந்திர வாடகை மையங்கள் மற்றும் மதிப்புக் கூட்டும் மையங்களை நிறுவுதல் போன்ற பணிகள் மூலம் 7.5 இலட்சம் ஏக்கர் பரப்பளவு நிலம் கொண்டு வரப்பட்டுள்ளது. சிறு மற்றும் குறு விவசாயிகள் எதிர்கொள்ளும் சவால்களிலிருந்து மீண்டு வருவதற்கு, 2017–18 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட கூட்டுப் பண்ணைய முறை தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில், 8 இலட்சம் சிறு மற்றும் குறு விவசாயிகள் ஒன்று சேர்ந்து, 40,000 உழவர் ஆர்வலர் குழுக்கள் மற்றும் 8,000 உழவர் உற்பத்தியாளர் குழுக்களை அமைத்துள்ளனர். மூலதன நிதியாக 300 கோடி ரூபாய் விடுவிக்கப்பட்டது. மேலும், 25,228 வேளாண் இயந்திரங்கள் உழவர் உற்பத்தியாளர் குழுக்களால் கொள்முதல் செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றன. ஒருங்கிணைந்த பண்ணைய முறை தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு

வருவதன் மூலம், நடப்பாண்டில் மேலும் 12,022 நில உடைமைதாரர்கள் பயன்பெறுவார்கள்.

40) பழங்கள் மற்றும் காய்கறிகள் பயிரிடுவதை ஊக்குவிப்பதற்காக, தமிழ்நாடு அரசு பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. முந்தைய ஆண்டை ஒப்பிடும்போது, 2019–20 ஆம் ஆண்டில் பழங்கள் பயிரிடும் பரப்பளவு 7.17 இலட்சம் ஏக்கரிலிருந்து 7.86 இலட்சம் ஏக்கராகவும், காய்கறிகள் பயிரிடும் பரப்பளவு 5.59 இலட்சம் ஏக்கரிலிருந்து 9.24 இலட்சம் ஏக்கராகவும் அதிகரித்துள்ளது. பழங்கள் மற்றும் காய்கறிகளில் அறுவடைக்குப் பின் ஏற்படும் இழப்பு தொடர்பான பிரச்சினைகளை எதிர்கொள்வதற்காக, தோட்டக்கலைப் பயிர்களை அதிகமாக சாகுபடி செய்யும் 10 மாவட்டங்களில் 482.36 கோடி ரூபாய் செலவில் விநியோகத் தொடர் மேலாண்மைத் திட்டத்தை, அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டம் 102 கோடி ரூபாய் செலவில், மேலும் 8 மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்படுகிறது.

41) தொழிலாளர்களின் பற்றாக்குறையை எதிர்கொள்வதற்கும், சாகுபடி செலவைக் குறைப்பதற்கும், வேளாண் இயந்திரமயமாக்கல் திட்டம் மேலும் விரிவாக்கம் செய்யப்படுகிறது. இதுவரையில் 1,51,813 வேளாண் இயந்திரங்கள் 714.43 கோடி ரூபாய் மானிய உதவியுடன் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு உதவுவதற்காக, 314.15 கோடி ரூபாய் மானியத்துடன் 3,416 வேளாண் இயந்திர வாடகை மையங்கள் நிறுவப்பட்டுள்ளன.

42) **விவசாயத் தலைவர்களின் சேவைகளை கௌரவப்படுத்தும் வகையில்** அரசு பல்வேறு நடவடிக்கைகளை

மேற்கொண்டுள்ளது. **‘நெல் உற்பத்திக்கான திரு. சி.நாராயணசாமி நாயுடு விருது’ திருந்திய நெல் சாகுபடி முறையில் நெல் உற்பத்தியில் சாதனை படைத்தவர்களுக்கு, இந்த ஆண்டு முதல் வழங்கப்படுகிறது. ‘பாரம்பரிய நெல் இரகங்களுக்கான நெல் ஜெயராமன் மையம்’, 47.87 இலட்சம் ரூபாய் செலவில் நீடாமங்கலத்தில் அமைக்கப்பட்டு வருகிறது.**

43) 2020–21 ஆம் ஆண்டின் திருத்த மதிப்பீடுகளில் வேளாண்மைத் துறைக்கான ஒதுக்கீடு 11,109.48 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. 2021–22 ஆம் ஆண்டு இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் வேளாண்மைத் துறைக்கு 11,982.71 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## பொது விநியோகத் திட்டம்

44) அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்தைச் செயல்படுத்த இந்த அரசு முழுமையாக உறுதிபூண்டுள்ளது. ஒரே நாடு, ஒரே குடும்ப அட்டை திட்டம் மாநிலம் முழுவதும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம், தமிழ்நாட்டிலிருந்து பிற மாநிலங்களுக்கு புலம் பெயரும் தொழிலாளர்களும், மற்ற மாநிலங்களிலிருந்து தமிழ்நாட்டிற்குப் புலம் பெயரும் தொழிலாளர்களும் அந்தந்த மாநிலங்களில் உள்ள நியாயவிலைக் கடைகளிலேயே அவர்களுக்கு உரிய மாதாந்திர ஒதுக்கீட்டைப் பெறலாம். பிரதம மந்திரியின் கரீப் கல்யாண் அன்ன யோஜனா திட்டத்தின் ஒரு பகுதியாக, 2020 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் நவம்பர் வரையிலான காலகட்டத்தில் முன்னுரிமை பெற்ற குடும்பங்களுக்கும், அந்தியோதயா அன்ன யோஜனா திட்டத்தின் கீழ் உள்ள குடும்பங்களுக்கும், மத்திய அரசு கூடுதலான அரிசியை வழங்கியது. அனைவருக்குமான பொது விநியோகத் திட்டம் என்ற நோக்கத்தைக் கடைபிடிக்கும் வகையில்,

தமிழ்நாடு அரசு தனது சொந்த நிதியிலிருந்து 880.31 கோடி ரூபாய் கூடுதல் மானியத்துடன் இதுபோன்ற கூடுதல் அரிசி ஒதுக்கீட்டை, மத்திய அரசின் திட்டத்தில் சேராத மாநிலத்திலுள்ள 90.71 இலட்சம் குடும்பங்களுக்கும் வழங்கியது. சிறப்பு பொது விநியோகத் திட்டத்தின் கீழ், அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் 2020 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் ஜூலை வரை, சர்க்கரை, துவரம் பருப்பு மற்றும் பாமாயில் ஆகியவை இலவசமாக வழங்கப்பட்டன. இதன் விளைவாக, மாநில அரசுக்கு 867.40 கோடி ரூபாய் கூடுதல் மானியச் சுமை ஏற்பட்டுள்ளது.

45) 2020 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில், அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கும் மொத்தம் 2,014.70 கோடி ரூபாய் செலவில் 1,000 ரூபாய் ரொக்க உதவி வழங்கப்பட்டது. 2020 ஆம் ஆண்டு, ஜூன் மாதத்தில் சென்னை மற்றும் மதுரை மாநகரங்களிலும், அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் உள்ள அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு, 283.15 கோடி ரூபாய் செலவில், 1,000 ரூபாய் ரொக்க உதவி கூடுதலாக வழங்கப்பட்டது. கோவிட்–19 மற்றும் அடுத்தடுத்து தாக்கிய புயல்கள் மற்றும் பருவம் தவறிப் பெய்த கனமழை ஆகிய பாதிப்புகளிலிருந்து மாநிலம் மீண்டு வருவதால், இவ்வாண்டு, ஒவ்வொரு குடும்பத்திற்கும், பொங்கல் பரிசுத் தொகுப்புடன் 2,500 ரூபாய் ரொக்க உதவி, மொத்தம் 5,604.84 கோடி ரூபாய் செலவில் வழங்கப்பட்டது.

46) 2020–21 ஆம் ஆண்டின் திருத்த மதிப்பீட்டின்படி ஒட்டுமொத்த உணவு மானியம் 6,500 கோடி ரூபாயிலிருந்து 9,604.27 கோடி ரூபாயாக அதிகரிக்கப்பட்டது. பொது விநியோகத் திட்டத்தைச் செயல்படுத்தும் கூட்டுறவு நிறுவனங்களுக்கு

மானியமாகவும், விளிம்புத் தொகையாகவும், 715.61 கோடி ரூபாய் வழங்கப்படுகிறது.

**கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளம்**

47) விலையில்லா கறவை மாடுகள், வெள்ளாடுகள் மற்றும் செம்மறியாடுகளை வழங்குதல் மற்றும் கோழிகள் வளர்ச்சி திட்டம் போன்ற முன்னோடித் திட்டங்களை 2011–12 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தியதன் மூலம் கால்நடை வளர்ப்பவர்களுக்கு ஊக்கம் அளிக்கப்பட்டது. இத்தகைய திட்டங்கள், ஊரக பொருளாதாரத்தை மாற்றியமைத்ததுடன் பல ஊரக குடும்பங்களின் வருமானத்தை கணிசமாக உயர்த்தியுள்ளது. இத்திட்டங்களின் விளைவாக அதிகரித்துள்ள கால்நடைகளுக்கு, மேம்படுத்தப்பட்ட சேவைகளை அரசு வழங்கியது. 2011–12 ஆம் ஆண்டிலிருந்து, 'கால்நடை பாதுகாப்பு திட்டத்தின்' கீழ், மொத்தம் 52,252 முகாம்கள் நடத்தப்பட்டு, ஏறத்தாழ 70 இலட்சம் விவசாயிகள் பயனடைந்துள்ளனர். 2011–12 ஆம் ஆண்டில் மாநில தீவன அபிவிருத்தி திட்டத்தின் கீழ், 4.5 இலட்சம் ஏக்கர் பரப்பளவு நிலம், பசுந்தீவன சாகுபடியின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது. ஆண்டுதோறும், 20 இலட்சம் மெட்ரிக் டன் பசுந்தீவனம் கூடுதலாக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

48) 2011–12 ஆம் ஆண்டு முதல் சிறந்த கால்நடை மருத்துவ சேவைகளை வழங்குவதற்காக, 440 புதிய கால்நடை கிளை நிலையங்கள் அமைக்கப்பட்டு, 1,085 கிளை நிலையங்கள் கால்நடை மருந்தகங்களாக தரம் உயர்த்தப்பட்டு, 20 புதிய கால்நடை மருந்தகங்கள் அமைக்கப்பட்டு, 10 கால்நடை மருந்தகங்கள் கால்நடை மருத்துவமனையாக தரம் உயர்த்தப்பட்டு, 6 பெரு மருத்துவமனைகள் மற்றும் 2 கால்நடை மருத்துவமனைகள்

கால்நடை பன்முக மருத்துவமனைகளாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. 2020–21 ஆம் ஆண்டில், தேனி, தலைவாசல் மற்றும் உடுமலைப்பேட்டையில் மூன்று புதிய கால்நடை மருத்துவக் கல்லூரிகள் தொடங்கப்பட்டன. 2011–12 ஆம் ஆண்டிலிருந்து, கால்நடை நிலையங்களுக்காக 647.87 கோடி ரூபாய் மதிப்பில் 2,139 புதிய கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. 108 அவசர ஊர்தி வசதியைப் போன்று ஊரக கால்நடை பராமரிப்பிற்காக, கால்நடைகளுக்கான நடமாடும் அம்மா அவசர ஊர்தி சேவை நிறுவப்பட்டுள்ளது.

49) சேலம் மாவட்டத்திலுள்ள தலைவாசலில், 1,020 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 1,102 ஏக்கர் பரப்பளவு நிலத்தில் கால்நடை மற்றும் விலங்குகள் அறிவியலுக்கான ஒருங்கிணைந்த உயர் ஆராய்ச்சி நிலையம் அமைக்கப்பட்டு வருகின்றது. விவசாயிகள் மற்றும் தொழில்முனைவோர் பயன் பெறும் வகையில், அதிநவீன கால்நடை உற்பத்தி, பதப்படுத்துதல் மற்றும் சந்தைப்படுத்துதலுக்கான வாய்ப்புகள் ஆகியவை இந்த நிலையத்தில் காட்சிப்படுத்தப்படும். 2020–21 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடுகளில், இந்நிறுவனத்தை அமைப்பதற்கான நிதி ஒதுக்கீடு 634.87 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

50) **ஆவின் நிறுவனம் தற்போது நாளொன்றுக்கு சராசரியாக 36.79 இலட்சம் லிட்டர் பாலை கொள்முதல் செய்து வருகிறது. ஆவின் வரலாற்றிலேயே, 2020 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 19 ஆம் தேதியன்று, அதிகபட்சமான அளவாக, நாளொன்றுக்கு 40.63 இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.** ஆவின் மற்றும் மாவட்ட ஒன்றியங்களால் நாளொன்றுக்கு சராசரியாக 24.49 இலட்சம் லிட்டர் பால் விற்பனை செய்யப்படுகிறது. தேவைக்கும்

அதிகமாக உள்ள பாலை அதிவெப்பநிலையில் பதப்படுத்தப்பட்ட பால், நெய் மற்றும் வெண்ணெய் போன்ற மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களாக மாற்றப்பட்டு வருகிறது. அதனை, சிங்கப்பூர், ஹாங்காங், கத்தார் மற்றும் இதர நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு ஊக்கமளிக்கப்பட்டு வருகிறது.

**மீன்வளம்**

51) ஆழ்கடல் மீன்பிடிப்பு, உலகத்தரம் வாய்ந்த உட்கட்டமைப்பினை உருவாக்குதல், தகவல் தொடர்பு அமைப்புகள், மீன் பதப்படுத்தும் வசதிகள் மற்றும் நிலைக்கத்தக்க மீன்பிடிப்பு நடைமுறைகள் ஆகியவற்றை ஊக்குவிப்பதற்காக, இந்த அரசால் மேற்கொள்ளப்பட்ட அயராத முயற்சிகள் பெரிய அளவில் பாராட்டப்பட்டுள்ளன. 2,000 இழுவலை மீன்பிடி படகுகளை மாற்றுவதற்கான சிறப்புத் திட்டம் தற்போது செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், 500 ஆழ்கடல் தூண்டில் கொண்ட சூரை மீன்பிடி படகுகளின் கட்டுமானப்பணிகள் நடைபெற்று வருகின்றன. 42 ஆழ்கடல் மீன்பிடிப் படகுகள் கட்டப்பட்டு, தற்போது செயல்பாட்டில் உள்ளன. கடல் மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம், தமிழ்நாடு கடல் மீனவ மகளிர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம், மீனவர்களுக்கான மீன்பிடிப்பு குறைவுகால சிறப்பு நிதி உதவித் திட்டம் மற்றும் மீன்பிடி தடைக்கால நிவாரணத் திட்டம் உள்ளிட்ட, மீனவர்களுக்கான பல்வேறு நலத்திட்டங்களின் கீழ், 2020–21 ஆம் ஆண்டில் மொத்த நிவாரண நிதியுதவியாக 301.31 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

52) **மீன்பிடி துறைமுகங்கள், மீன் இறங்கும் தளங்கள் மற்றும் கடற்கரை பாதுகாப்பு பணிகள் உள்ளிட்ட உட்கட்டமைப்பு கணிசமான அளவில் மேம்படுத்தப்பட்டது. 2011–12 ஆம் ஆண்டு முதல் இத்தகைய மூலதன பணிகளுக்காக, மொத்தம் 1,731.82 கோடி ரூபாய்**

**செலவிடப்பட்டுள்ளது. 43 புதிய மீன்பிடி துறைமுகங்கள், மீன் இறங்கும் தளங்கள் மற்றும் உட்கட்டமைப்புப் பணிகள் மேற்கொள்வதற்காக, 1,374.64 கோடி ரூபாய் மதிப்பில் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.** 2021–22 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், மீன்வளத் துறைக்கான மூலதனச் செலவினங்கள் 580.97 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டது.

**நீர்வள ஆதாரங்கள்**

53) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டின் நீர்வள ஆதாரங்களை பாதுகாப்பதை தனது முதன்மையான நோக்கமாக கொண்டு அயராது உழைத்துள்ளார். இதன் விளைவாக, **ஜல் சக்தி அமைச்சகத்தினால் வழங்கப்பட்ட 2019 ஆம் ஆண்டிற்கான தேசிய நீர் விருதுகளில், தமிழ்நாடு முதலிடத்தை வென்றுள்ளது.** மிகவும் புகழ்பெற்ற குடிமராமத்து திட்டத்தின் கீழ், மொத்தம் 1,418 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இதுவரையில் 6,211 பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதில் 5,586 பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் விரைவில் முடிக்கப்படவுள்ளன. 2020–21 ஆம் ஆண்டின் திருத்த மதிப்பீடுகளில் குடிமராமத்து திட்டப்பணிகளுக்காக 485.68 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2020–21 ஆம் ஆண்டில், காவேரி டெல்டா பகுதிகளில் ஆற்றினை தூர்வாரும் 413 பணிகள் 69.25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதில் 412 பணிகள் முழுமையாக முடிக்கப்பட்டதுடன், மற்றொரு பணியும் விரைவில் முடிக்கப்படும்.

54) பல்வேறு உபவடிநிலங்களைக் கொண்ட காவேரி வடிநிலத்தில் நீர்ப்பாசன உட்கட்டமைப்பினை நீட்டித்தல், புனரமைத்தல் மற்றும் நவீனமயமாக்குதல் (ERM) பணிகளை அரசு மேற்கொண்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், 184 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டளை

உயர்மட்டக் கால்வாய் பாசன அமைப்பிலும், 335.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ராஜவாய்க்கால் நீர்ப்பாசன அமைப்பிலும், மற்றும் 230 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நொய்யல் உப வடிநிலத்திலும் நீட்டித்தல், புனரமைத்தல் மற்றும் நவீனமயமாக்குதல் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. **2,639 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கல்லணைக் கால்வாய் நீட்டித்தல், புனரமைத்தல் மற்றும் நவீனமயமாக்குதல் திட்டம், மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. இத்திட்டத்திற்கான நிதியுதவி ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது. 3,384 கோடி ரூபாய் செலவில் காவேரி உப வடிநிலத்தில் நீட்டித்தல், புதுப்பித்தல் மற்றும் நவீனமயமாக்கல் பணிகள், நபார்டு உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியத்தின் (NIDA) நிதியுதவியுடன் செயல்படுத்துவதற்கு, நபார்டு வங்கி அனுமதித்துள்ளது. இத்திட்டத்தை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 2021 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 21 ஆம் தேதியன்று தொடங்கி வைத்தார். 933 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நபார்டு உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியத்தின் உதவியுடன், கீழ் பவானி பாசனப் பகுதிகளில் நீட்டித்தல், புனரமைத்தல் மற்றும் நவீனமயமாக்கல் திட்டம் விரைவில் தொடங்கப்படும்.** காவேரி டெல்டாவில், கீழ் வெண்ணாறு வடிநிலத்தில், காலநிலை மாற்றத் தழுவல் திட்டத்தின் முதற்கட்டம் தற்போது ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. விரைவில் அப்பணிகள் நிறைவடையும்.

55) **1,652 கோடி ரூபாய் செலவில் கோயம்புத்தூர், திருப்பூர் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் உள்ள 24,468 ஏக்கர் பரப்பளவு ஆயக்கட்டு நிலங்கள் பயனடையும் வகையில், அத்திக்கடவு–அவிநாசி வெள்ளக் கால்வாய் திட்டம் 2021 ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. 565 கோடி ரூபாய் செலவில்**

**மேட்டூர் அணையிலிருந்து வெள்ள உபரி நீரை சரபங்கா வடிநிலத்தில் உள்ள வறண்ட ஏரிகளுக்கு கொண்டு செல்லும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் பணிகள் விரைவில் முடிவடையும்.** நபார்டு உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியத்தின் (NIDA) நிதியுதவியுடன், கரூர் மாவட்டத்தில் நஞ்சை புகலூரில் 406 கோடி ரூபாய் செலவில் காவேரி ஆற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

56) அணை புனரமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் முதல் கட்டத்தின் கீழ் திருத்தப்பட்ட திட்ட மதிப்பீடு 803.49 கோடி ரூபாயில் மேற்கொள்ளப்பட்ட 89 அணைகளில், 87 அணைகளின் பணிகள் முடிவடைந்தன. மேலும், இத்திட்டம் 2021 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரையில் நீட்டிக்கப்பட்டுள்ளது. அணை புனரமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தின் கீழ் 610.26 கோடி ரூபாயில் 37 அணைகளுக்கான பணிகளின் ஆரம்பக்கட்டப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. 4,778 குளங்கள், 477 அணைக்கட்டுகள் மற்றும் செயற்கை முறையில் நீர் செறிவூட்டும் கிணறுகள் புனரமைக்கும் பணிகள், தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனப்படுத்தும் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படுகிறது. முதல் கட்டத்தில், அனைத்துப் பணிகளும் முடிவடையும் தறுவாயில் உள்ளன. 2020–21 ஆம் ஆண்டில் இரண்டாம் கட்டப் பணிகள், 649.50 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

57) பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் வட்டம் கொட்டாரை கிராமத்திற்கு அருகில் மருதையாா் ஆற்றின் குறுக்கே புதிய நீர்த்தேக்கம் அமைப்பதற்கான பணிகள், 124.20 கோடி ரூபாய் செலவில் நடைபெற்று வருகின்றன. **தாமிரபரணி, கருமேனியாறு மற்றும் நம்பியாறு**

**இணைப்புத் திட்டத்திற்கான பணிகள், 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் தேதிக்குள் முடிக்கப்படும். இத்திட்டத்தால், திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களின் வறட்சி பாதிப்புக்குள்ளாகும் பகுதிகளில் உள்ள, 56,909 ஏக்கர் பரப்பளவில் நிலங்கள் பயனடையும். காவேரி–தெற்கு வெள்ளாறு நதிகள் இணைப்பிற்காக, 6,941 கோடி ரூபாய் மதிப்பில் கொள்கை அளவிலான ஒப்புதலை அரசு அளித்துள்ளது. முதல் கட்டப் பணியாக, கரூர், திருச்சி மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் 331 கோடி ரூபாய் செலவில் வெள்ள நீர் செல்லும் கால்வாய்களை அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2021 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம், 21 ஆம் நாளன்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இத்திட்டத்தை துவக்கி வைத்தார்.** 2014 ஆம் ஆண்டிலிருந்து, ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின் கீழ் 2,280 கோடி ரூபாய் செலவில் புதிய அணைக்கட்டுகள், புதிய பாசன வாய்க்கால்கள், புதிய பாலங்கள் மற்றும் குளங்களை புனரமைத்தல் ஆகியவற்றுக்கான கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதில், 1,522.58 கோடி ரூபாய் செலவில் 288 திட்டங்களின் பணிகள் நிறைவடைந்துள்ளன. எஞ்சியுள்ள பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

58) நீர்ப்பாசனப் பணிகளுக்கு முன்னுரிமை அளித்து, தடுப்பணைகள், குடிநீர் வழங்கல் பணிகள், வெள்ள நீர் கால்வாய்கள் மற்றும் அது தொடர்பான பணிகளுக்கு அரசு ஒப்புதலளித்துள்ளது. இவை, மூலதனப் பணிகளில் செலவினத்தை அதிகரிக்க வேண்டும் என டாக்டர் சி. ரங்கராஜன் தலைமையிலான உயர்மட்டக் குழுவின் பரிந்துரைகளுக்கு ஏற்புடையதாக உள்ளது. அதற்கிணங்க, **பெரிய, நடுத்தர மற்றும் சிறிய பாசனம் குறித்த பணிகளுக்கான மூலதன நிதி ஒதுக்கீடு, 2020–21 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில்**

**4,882.45 கோடி ரூபாயிலிருந்து, 2020–21 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடுகளில் 6,389.22 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. 2021–22 ஆம் ஆண்டு இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 6,453.17 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**சுற்றுச்சூழல் மற்றும் வனம்**

59) பசுமைப் போர்வையினை அதிகரித்தல் மற்றும் சுற்றுச்சூழல் மாசினால் ஏற்படும் பாதிப்புகளை குறைத்தல் ஆகிய நோக்கங்களுடன் மாபெரும் மரம் நடும் திட்டத்தினை 2011–12 ஆம் ஆண்டிலிருந்து வனத்துறை செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ், அரசு நிலங்கள், தனியார் நிலங்கள் மற்றும் தரம் குன்றிய வனப்பகுதிகளில், நடப்பாண்டில் நடப்பட்டு வரும் 72 இலட்சம் மரக்கன்றுகள் உட்பட, 6.12 கோடி மரக்கன்றுகள் நடப்பட்டு, அவை பராமரிக்கப்பட்டு வருகின்றன. இதன் விளைவாக, 2019 ஆம் ஆண்டின் இந்திய வனநிலை அறிக்கையின்படி 2017 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்கு இடையே, **தமிழ்நாட்டில் 15,900 ஹெக்டேர் அளவில் மரங்களின் பரப்பளவு அதிகரித்துள்ளது. மரங்களின் பல்லுயிர்த் தன்மையில் தமிழ்நாடு இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது.**

60) நீர்நிலைகள் மாசுபடுவதையும், நீர்நிலைகளில் வண்டல் படிவதையும் குறைக்கும் வகையில், நபார்டு வங்கியின் நிதி உதவியுடன், வைகை, நொய்யல் மற்றும் பாலாற்றின் வடிநிலங்களில் நதிகளுக்குப் புத்துயிர் அளிக்கும் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு, அவை சிறந்த பயனை அளித்துள்ளன. தமிழ்நாட்டிலுள்ள மிக முக்கியமான சதுப்பு நிலங்களில் ஒன்றாகவும், வெள்ளம் ஏற்படுவதைத் தடுத்து, நிலத்தடி நீர் வளத்தை மீள்நிரப்புவதிலும் மிக முக்கியமான பங்கு வகிக்கும் பள்ளிக்கரணை சதுப்பு நிலப்பகுதியை காப்பதற்கு அரசு உறுதி

பூண்டுள்ளது. 165.68 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மறுசீரமைப்பு நடவடிக்கைகளை செயல்படுத்துவதற்காக, பள்ளிக்கரணை சதுப்புநில பாதுகாப்பு ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது. பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கான தேசியத் தழுவல் நிதியிலிருந்து நிதியுதவி எதிர்பார்க்கப்பட்டுள்ளது. அண்மையில் சென்னை மாநகரின் தெற்குப் பகுதிகளில் ஏற்பட்ட வெள்ளங்களை கருத்திற்கொண்டு, பள்ளிக்கரணை சதுப்புநிலப் பகுதிக்கு நீரைக் கொண்டு செல்லும் நீர்வழிகளை தூய்மைப்படுத்தவும், சதுப்பு நிலத்தின் நீர் உறிஞ்சும் தன்மையை மீட்டமைக்கவும், பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத்துறை மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி ஒருங்கிணைந்து செயல்படுத்தும் திட்டம் 816.80 கோடி ரூபாய் உத்தேச மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

61) மனித–வன உயிரின மோதல்களைக் குறைப்பதற்காக வாழ்விட மேம்பாடு, வனப்பகுதிகளில் நீர்வளங்களைப் பெருக்குதல், தீவனப்பயிர் வளங்களை மேம்படுத்துதல், வன எல்லைகளில் தடுப்புகளை ஏற்படுத்துதல் மற்றும் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துதல் ஆகிய நடவடிக்கைகளைச் செயல்படுத்த பன்முக உத்திகள் மேற்கொள்ளப்படும். பயிர்கள் மற்றும் உடைமைகளுக்கு ஏற்பட்ட சேதங்களுக்கும், உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கும் இழப்பீடுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

62) தமிழ்நாடு பருவநிலை மாற்றம் குறித்த செயல்திட்டத்தினை செயல்படுத்துவதற்கான ஒருங்கிணைப்பு முகமையாக சுற்றுச்சூழல் துறை செயல்பட்டு வருகிறது. நாட்டிலேயே முதல் திட்டமாக, மன்னார் வளைகுடாப் பகுதியின் கடற்பகுதி மேலாண்மைக்கான திட்டம் மொத்தம் 24.74 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்துவதற்காக பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கான

தேசியத் தழுவல் நிதி அமைப்பின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இத்திட்டம் தற்போது செயல்படுத்தப்பட்டு வருவதுடன், எதிர்காலங்களில் இது போன்ற எண்ணற்ற புதிய திட்டங்களுக்கு முன்னோடித் திட்டமாகவும் அமையும்.

**உள்ளாட்சி அமைப்புகளுக்கான நிதிப் பகிர்வு**

63) 15வது நிதிக்குழு, ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு மானியமாக, 2020–21 ஆம் ஆண்டில் 3,607 கோடி ரூபாயும், 2021–22 ஆம் ஆண்டில் 2,666 கோடி ரூபாயும் பரிந்துரைத்துள்ளது. 15வது நிதிக்குழு, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு மானியமாக, 2020–21 ஆம் ஆண்டில் 1,737 கோடி ரூபாயும், 2021–22 ஆம் ஆண்டில் 1,313 கோடி ரூபாயும் பரிந்துரைத்துள்ளது. இத்தொகை, 14வது நிதிக்குழுவின் இறுதி ஆண்டிற்காக, அதாவது 2019–20 ஆம் ஆண்டிற்கான நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்காகப் பரிந்துரைக்கப்பட்ட 2,519.02 கோடி ரூபாய் மானியத்தை விட, கணிசமான அளவில் குறைவாக உள்ளது.

64) 2020–21 ஆண்டில், கோவிட்–19 பெருந்தொற்று மற்றும் மத்திய அரசிடமிருந்து வரப்பெறும் நிதி குறைந்த காரணத்தால், மாநில அரசின் நிதியின் மீது கணிசமான அழுத்தம் இருந்தபோதிலும், உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதி வழங்கலை உறுதி செய்ய இந்த அரசு தன்னால் இயன்ற அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளது. 2021–22 ஆம் ஆண்டின் இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதிப் பகிர்விற்காக 5,141.60 கோடி ரூபாயும், ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதிப் பகிர்விற்காக 6,754.30 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. திரு. மோகன் பியாரே, இ.ஆ.ப. (ஓய்வு) அவர்களின் தலைமையில்

ஆறாவது மாநில நிதிக்குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு, தொடர்புடையவர்களுடன் கலந்தாய்வு மேற்கொண்டு வருகிறது. ஆறாவது மாநில நிதிக்குழுவின் பரிந்துரைகள் 2022–23 ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்படும்.

**ஊரக வளர்ச்சி**

65) ஊரகப் பகுதிகளில் நிலைக்கத்தக்க வாழ்வாதாரங்கள், தரமான உட்கட்டமைப்பு மற்றும் சேவைகள் வழங்குவதே இந்த அரசின் பல்வேறு ஊரக வளர்ச்சித் திட்டங்களின் முக்கிய நோக்கமாகும். ஊரக குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்கல் ஒரு அடிப்படைத் தேவையாகும். ஜல் ஜீவன் மிஷன் மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டமாகும். இத்திட்டத்தைச் செயல்படுத்த வேண்டிய அனைத்து சேவைப் பயன் கட்டணத்தையும் (centage charges) மாநில அரசு ஏற்றுக்கொள்கிறது. மேலும், ஏனைய மாநிலத் திட்டங்களின் நிதிகளை ஒருங்கிணைத்து இத்திட்டம் செயல்படுகிறது. இதனால், மாநில அரசின் பங்கு 45 சதவீதம் எனக் குறிப்பிட்டிருந்தாலும், உண்மையான பங்கு அதிகமாக உள்ளது. இத்திட்டத்தின் கீழ், மாநிலத்திலுள்ள அனைத்து கிராமப்புற வீடுகளுக்கும் குடிநீர் குழாய் இணைப்பு வழங்கப்படும். தமிழ்நாட்டின் கிராமப்புறப் பகுதிகளில் உள்ள 126.89 இலட்சம் வீடுகளில் 21.93 இலட்சம் வீடுகளில் ஏற்கனவே குடிநீர் குழாய் இணைப்புகள் உள்ளன. மீதமுள்ள 104.96 இலட்சம் வீடுகளுக்கு 2023 ஆம் ஆண்டின் மார்ச் மாத இறுதிக்குள் குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்கப்படும். **2020–21 ஆம் ஆண்டில், 3,016.26 கோடி ரூபாய் செலவில் 40 இலட்சம் வீடுகளுக்கு குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்கப்படும். இதில் 2,006.08 கோடி ரூபாய் ஜல் ஜீவன் மிஷன் வாயிலாகவும் 1,010.18 கோடி ரூபாய் பிற திட்டங்களின் நிதியை ஒருங்கிணைத்தும் வழங்கப்படும்.**

66) ஊரகப் பகுதி மக்களின், குறிப்பாக, பெண்கள் மற்றும் குழந்தைகளின் ஆரோக்கியம் மற்றும் ஊட்டச்சத்தினை மேம்படுத்த, சுகாதாரத்தைப் பேணுவது மிகவும் இன்றியமையாததாகும். தமிழ்நாடு, திறந்தவெளியில் மலம் கழித்தலற்ற நிலையை ஏற்கெனவே அடைந்துள்ளது. தூய்மை இந்தியா திட்டம் (ஊரகம்) இரண்டாம் கட்டத்தில், இந்த நிலையைத் தக்கவைத்து, எந்த ஒரு வீடும் விடுபடாமல் பயன்பெறுவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். 2020–21 ஆம் ஆண்டில் 1.79 இலட்சம் புதிய மற்றும் விடுபட்ட வீடுகள் கண்டறியப்பட்டு, 214.63 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தனிக் கழிவறைகள் கட்டப்பட்டு வருகின்றன. மேலும், தனிக் கழிவறைகள் கட்டுவதற்கு போதிய இடவசதி இல்லாத குடியிருப்புப் பகுதிகளிலும், 144.33 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 2,749 சமூக சுகாதார வளாகங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

67) ஊரகப் பகுதிகளில் சாலை இணைப்புகளை மேம்படுத்துவது அரசின் உயர்ந்த முன்னுரிமையாகும். 2011–12 ஆம் ஆண்டு முதல், 98,894 கிலோமீட்டர் ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளின் மேம்பாட்டிற்காக 23,349 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், 2015–16 ஆம் ஆண்டிலிருந்து 5,800 கோடி ரூபாய் செலவில் 27,205 கிலோமீட்டர் ஊரகச் சாலைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. பிரதம மந்திரி கிராம சாலைகள் திட்டத்தின் மூன்றாம் கட்டத்தில், ஊரகச் சந்தைகள், உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் மருத்துவமனைகள் ஆகியவற்றை இணைக்கும் விதமாக 7,375 கிலோமீட்டர் சாலைகள் அமைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக, முதல் கட்டத்தில் 3,198 கிலோமீட்டர் மொத்த நீளத்தைக் கொண்ட 880 சாலைகளை மேம்படுத்துவதற்காக, 2021–22 ஆம் ஆண்டு இடைக்கால

வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், 440 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

68) இந்திரா வீட்டுவசதித் திட்டத்தின் கீழ், 2011–12 ஆம் ஆண்டு முதல் 2015–16 ஆம் ஆண்டு வரை 4,41,637 வீடுகள் கட்டுப்பட்டுள்ளன. 2016–17 ஆம் ஆண்டில் பிரதம மந்திரி வீட்டுவசதி திட்டம் (ஊரகம்) தொடங்கப்பட்டு, 2019–20 ஆம் ஆண்டு வரை 5,27,552 வீடுகளின் கட்டுமானம் மேற்கொள்ளப்பட்டது. **வீடு ஒன்றிற்கு 1.20 இலட்சம் ரூபாய் என மத்திய அரசால் நிர்ணயிக்கப்பட்ட அலகுத் தொகை போதுமானதாக இல்லாததால், தற்போது தமிழ்நாடு அரசு அளித்து வரும் மேற்கூரை மானியமான 50,000 ரூபாயுடன், வீடு ஒன்றிற்கு, கூடுதலாக 70,000 ரூபாய் அனுமதித்துள்ளது. இதன் மூலம் வீடு ஒன்றிற்கான தொகை 2.75 இலட்சம் ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இத்தொகையில் பல்வேறு திட்டங்களை ஒருங்கிணைத்து மேற்கொள்ளப்படும் செலவினமான 35,000 ரூபாய் உள்ளடங்கும். இதன் மூலம், கட்டுமானத்திலுள்ள 2,57,925 வீடுகளை பயனாளிகள் கட்டி முடிக்க உதவும். 2021–22 ஆம் ஆண்டு இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், பிரதம மந்திரி வீட்டுவசதித் திட்டத்திற்காக (ஊரகம்) மொத்த தொகையாக 3,548 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.**

69) மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தை திறம்பட செயல்படுத்துவதில் தமிழ்நாடு முன்னணி மாநிலமாகத் திகழ்கிறது. 2020–21 ஆம் ஆண்டு தமிழ்நாட்டிற்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்கான 32 கோடி மனித வேலை நாட்களில், இதுவரை 5,998.99 கோடி ரூபாய் செலவில் 28.62 கோடி மனித வேலை நாட்களுக்கான வேலை வாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளது. மகாத்மா காந்தி

தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தை திறம்பட செயல்படுத்தியதற்காக, 2011–12 ஆம் ஆண்டிலிருந்து 26 தேசிய விருதுகளை தமிழ்நாடு பெற்றுள்ளது.

70) **2021–22 ஆம் ஆண்டுக்கான இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், ஊரக வளர்ச்சித் துறைக்காக 22,218.58 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.**

**வாழ்வாதாரத் திட்டங்கள்**

71) தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், மாநிலத்தில் சுய உதவிக் குழு இயக்கத்தை வழிநடத்தி வருகிறது. 2012–13 ஆம் ஆண்டிலிருந்து தமிழ்நாடு மாநில கிராமப்புற வாழ்வாதார இயக்கம் செயல்பட்டு வருகிறது. தற்போது இத்திட்டம் அனைத்து வட்டாரங்களிலும், அதாவது, 388 வட்டாரங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை, 96,304 சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. மேலும், இக்குழுக்கள் ஊராட்சி மற்றும் வட்டார அளவில் அமைக்கப்பட்டுள்ளன. நடப்பாண்டில் 13,047 சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. 2020–21 ஆம் ஆண்டில் சுய உதவிக் குழுக்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்கான 14,000 கோடி ரூபாயை விட, அதிகமாக வங்கிக் கடன் ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ளது. 2011–12 ஆம் ஆண்டிலிருந்து சுய உதவிக் குழுக்களால் பெறப்பட்ட மொத்த வங்கிக் கடன் 80,100 கோடி ரூபாயாகும். கிராமப்புற வாழ்வாதார இயக்கத்துடன் ஏனைய துறைகள் மற்றும் முகமைகளால் செயல்படுத்தப்படும் திட்டங்களை ஒருங்கிணைத்து, உழவர் உற்பத்தியாளர்கள் அமைப்புகள், இயந்திர வாடகை மையங்கள், உணவு பதப்படுத்தும் குறு நிறுவனங்கள் மற்றும் ஏனைய உற்பத்தி நடவடிக்கைகள் ஆகியவை அமைக்கப்பட்டு வருகின்றன. உலக வங்கியின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வரும்

தமிழ்நாடு கிராமப்புற புத்தாக்கத் திட்டத்தின் மூலம், 2020–21 ஆம் ஆண்டில், 300 கோடி ரூபாய் மதிப்பிலான கோவிட் நிதியுதவித் தொகுப்பு வழங்கப்பட்டது. இதுவரை, 2,53,457 பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

72) தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ், 2020–21 ஆம் ஆண்டில் நகர்ப்புறப் பகுதிகளில் 17,021 சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. 15,000 இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புடன் கூடிய திறன் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் சுய வேலைவாய்ப்பு பிரிவின் கீழ், 897.38 கோடி ரூபாய் மதிப்பில் வங்கிக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. நகர்ப்புறத்தில் வீட்டுவசதி இல்லாதவர்களுக்கு உறைவிடம் வழங்கும் திட்டத்தின் கீழ், 110.83 கோடி ரூபாய் செலவில் 254 உறைவிடங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதில், 202 உறைவிடங்கள் பயன்பாட்டிலும், 52 உறைவிடங்கள் கட்டுமானப் பணியிலும் உள்ளன. ஓர் ஆய்வின் மூலம், 1,21,098 சாலையோர வணிகர்கள் கண்டறியப்பட்டு, அவர்களுக்கான வட்டி மானியத்துடன் வங்கிக் கடன்கள் பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**நகர்ப்புற ஊதிய வேலைவாய்ப்பு**

73) நகர்ப்புற ஏழைகளின் நலனை நோக்கமாகக் கொண்ட அரசின் திட்டங்கள், வீட்டுவசதி, திறன் மேம்பாடு மற்றும் குறு நிறுவனங்களுக்கான ஆதரவு ஆகியவற்றை மையமாகக் கொண்டுள்ளன. கோவிட்–19 பெருந்தொற்று நகர்ப்புற ஏழைகளின் வாழ்வாதார வாய்ப்புகளையும், மாற்று வேலை தேடும் திறனையும் கடுமையாக பாதித்துள்ளது. எனவே, நகர்ப்புறங்களில் ஊதிய உத்தரவாதம் மற்றும் சமூகப் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக ஒரு சிறப்புத் திட்டத்தை உருவாக்கவேண்டிய அவசியம் உள்ளது என்று டாக்டர் சி. ரங்கராஜன் குழு பரிந்துரை செய்துள்ளது. குறைந்த வருமானம் கொண்ட பகுதிகளில்

சமூக சொத்துகளை உருவாக்கிட இந்தத் திட்டத்தைப் பயன்படுத்தலாம். நகர்ப்புற ஊதிய வேலைவாய்ப்புத் திட்டத்தை அரசு வகுத்து வருகிறது. மேலும் விரிவான வழிகாட்டுதல்கள், சம்பந்தப்பட்டவர்களுடனான கலந்துரையாடல்கள் மூலம் இறுதி செய்யப்படும்.

**நகராட்சி நிருவாகம்**

74) தமிழ்நாடு வேகமாக நகரமயமாக்கப்பட்டு வருகின்ற நிலையில், நகர்ப்புற உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை சேவைகளை வலுப்படுத்துவதற்கான முதலீடுகள் அதிக முக்கியத்துவம் வாய்ந்தது. சீர்மிகு நகரங்கள் திட்டத்தின் கீழ் இதுவரையில், 11,000 கோடி ரூபாய் செலவில் 507 திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அட்டல் நகர்ப்புற புத்துணர்வு மற்றும் நகர்ப்புற மாற்றங்களுக்கான திட்டத்தின் கீழ் (அம்ருத்), 11,441.32 கோடி ரூபாய் செலவில் 445 திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு, அதில் 420 திட்டங்கள் நிறைவடைந்துள்ளன. 2020–21ஆம் ஆண்டின் திருத்த மதிப்பீடுகளில், சீர்மிகு நகரங்கள் திட்டத்திற்கான ஒதுக்கீடு 1,850 கோடி ரூபாயாகவும், அம்ருத் திட்டத்திற்கு 1,450 கோடி ரூபாயாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது. 2021–22 ஆம் ஆண்டு இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் சீர்மிகு நகரங்கள் திட்ட இயக்கத்திற்கு 2,350 கோடி ரூபாயும், அம்ருத் திட்டத்திற்கு 1,450 கோடி ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளது.

75) 2015–16 முதல் 2020–21 வரையிலான காலகட்டத்தில், தூய்மை இந்தியா இயக்கத்தின் கீழ் மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிப் பகுதிகளில் 2.70 இலட்சம் தனிநபர் வீட்டு கழிப்பறைகள் மற்றும் 7,708 சமூகக் கழிப்பறைகள் கட்டப்பட்டுள்ளன. பேரூராட்சிகளில் 2.31 இலட்சம் தனிநபர் வீட்டுக் கழிப்பறைகள், 13,114 சமூகக் கழிப்பறைகள் கட்டும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**தமிழ்நாட்டில் உள்ள அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளும் திறந்தவெளியில் மலம் கழித்தலற்றவையாக மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி அமைச்சகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.**

76) **2015ஆம் ஆண்டிலிருந்து, மொத்தம் 3,831 கோடி ரூபாய் செலவில் தமிழ்நாடு நிலைக்கத்தக்க நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் (TNSUDP), உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.** இத்திட்டம் 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் தேதியுடன் நிறைவடையும். **இத்திட்டத்தில் ஏற்பட்ட 32 மில்லியன் அமெரிக்க டாலர் சேமிப்பில், சென்னையின் முக்கிய பகுதிகளில் விடுபட்டுப்போன மழைநீர் வடிகால் பணிகள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளில், குடிநீர் மற்றும் கழிவுநீர் குழாய் அமைத்த காரணத்தால் சேதமடைந்த சாலைகளை மேம்படுத்துதல் உட்பட 2 துணைத் திட்டங்களை கூடுதலாக மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.** இத்திட்டங்களுக்கான ஒப்புதலை உடனடியாக அளிக்குமாறு மத்திய அரசிடம் கோரியுள்ளோம். **முக்கியமான தொழில் வழித்தடங்களில், முன்னுரிமை அடிப்படையில் குடிநீர் வழங்கல், கழிவுநீர் மற்றும் வடிகால் உட்கட்டமைப்பை மேம்படுத்துவதற்காக 3 கட்டங்களில் ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதியுதவியுடன் 502 மில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பில் தமிழ்நாடு நகர்ப்புற முதன்மை முதலீட்டுத் திட்டம் (TNUFIP) தற்போது செயல்படுத்தப்பட்டு வருகிறது.** 2021–22 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் இத்திட்டத்திற்காக மொத்தம் 871.31 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. **ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதியுதவியுடன் கொசஸ்தலையாறு வடிநிலத்தில் ஒருங்கிணைந்த வெள்ளநீர் வடிகால் வலையமைப்புத் திட்டம் நடப்பாண்டில் 3,220 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.** 2021–22 ஆம் ஆண்டிற்கான இடைக்கால

வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் இத்திட்டத்திற்காக 287 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**குடிநீர் வழங்கல்**

77) 2020–21 ஆம் ஆண்டில், 1,690.67 கோடி ரூபாய் செலவில் 3 மாநகராட்சிகள், 6 நகராட்சிகள், 11 பேரூராட்சிகள் மற்றும் 1,311 ஊரக வாழ்விடங்களில் 40.85 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில், நாளொன்றிற்கு 271 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கும், 21 குடிநீர் வழங்கல் திட்டங்கள் முடிக்கப்பட்டுள்ளன. 5 மாநகராட்சிகள், 22 நகராட்சிகள், 57 பேரூராட்சிகள் மற்றும் 12,346 ஊரக வாழ்விடங்களில் மொத்தம் 12,013.79 கோடி ரூபாய் செலவில், நாளொன்றிற்கு 1,223.35 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கிடும் வகையில் வடிவமைக்கப்பட்ட 56 குடிநீர் வழங்கல் திட்டங்களின் செயல்பாடு, பல்வேறு நிலைகளில் உள்ளது. இத்திட்டங்களின் மூலம் 185.58 இலட்சம் மக்கள் பயனடைவர். திருப்பத்தூர், நாகப்பட்டினம், கள்ளக்குறிச்சி, ஈரோடு மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் 2020–21 ஆம் ஆண்டில், 5 பாதாள சாக்கடை திட்டப் பணிகள் 285.87 கோடி ரூபாய் செலவில் முடிக்கப்பட்டுள்ளன. 2,391.39 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 3 மாநகராட்சிகள், 9 நகராட்சிகள் மற்றும் 7 பேரூராட்சிகளில், 19 பாதாள சாக்கடை கட்டும் திட்டப் பணிகள் தற்போது செயல்பாட்டில் உள்ளன.

**வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற மேம்பாடு**

78) மறைந்த முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் கனவான குடிசைகள் இல்லாத நகரங்கள் என்னும் நிலையை அடைவதற்கு இந்த அரசு கடினமாக உழைத்து வருகிறது. **2011 முதல் 2020 ஆம் ஆண்டு வரையில்,**

**பல்வேறு திட்டங்களின் கீழ், 12,248 கோடி ரூபாய் மதிப்பில் 1.09 இலட்சம் அடுக்குமாடிக் குடியிருப்புகளும், 2.27 இலட்சம் தனி வீடுகளும் கட்டி முடிக்கப்பட்டு பயனாளிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. தற்போது கட்டப்பட்டு வரும் 1.25 இலட்சம் அடுக்குமாடிக் குடியிருப்புகளும், விரைவில் கட்டி முடிக்கப்படும். 2021–22 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் பிரதம மந்திரி வீட்டுவசதி திட்டத்திற்கு (நகர்ப்புறம்) 3,700 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

79) முதலாவது தமிழ்நாடு வீட்டுவசதித் துறை வலுவூட்டல் திட்டம், 200 மில்லியன் அமெரிக்க டாலர் வளர்ச்சிக் கொள்கை வடிவமைப்புக் கடனுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. **2020–21 ஆம் ஆண்டில், வீட்டுவசதித் துறைக்கு நிதியுதவியாக உலக வங்கியிடமிருந்து 1,492.40 கோடி ரூபாய் பெற்றுள்ளோம். மேலும், தமிழ்நாடு வீட்டுவசதி மற்றும் வாழ்விட மேம்பாட்டுத் திட்டம் செயல்பட்டு வருகிறது.** அரசு–தனியார் பங்களிப்பின் அடிப்படையில், வாங்கத்தக்க வீட்டுவசதித் திட்டங்களில் தனியார் துறையின் பங்களிப்பை ஊக்குவிப்பதற்காக, இரண்டாம் அடுக்கு (Tier-II) உறைவிட நிதிக்கு 50 கோடி ரூபாய் விடுவிக்கப்பட்டுள்ளது.

80) **அனைவரையும் உள்ளடக்கிய நகர்ப்புற ஏழை மக்களுக்கான, நிலைக்கத்தக்க வீட்டுவசதித் திட்டத்தின் முதல் கட்டத்திற்கான நிதியுதவி, ஆசிய வளர்ச்சி வங்கியின் அனுமதி பெறும் நிலையில் உள்ளது.** இத்திட்டத்தின் கீழ், சிவகங்கை மாவட்டத்தில் உள்ள கழனிவாசல், திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள ரெட்டியார்பட்டி மற்றும் தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள வல்லம் ஆகிய இடங்களில் மூன்று துணை திட்டங்களுக்கான ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டுள்ளன.

**சென்னை மாநகரக் கூட்டாண்மை**

81) **உலக வங்கியுடன் விரிவான கலந்துரையாடலுக்குப் பின், சென்னை மாநகரக் கூட்டாண்மை ஒரு தனித்தன்மை வாய்ந்த வளர்ச்சித் திட்டமாக வடிவமைக்கப்பட்டுள்ளது.** கோவிட்–19 பெருந்தொற்றின் அனுபவத்தைக் கருத்திற்கொண்டு, பொது சுகாதாரம், போக்குவரத்து, குடிநீர் மற்றும் சுகாதாரம் ஆகிய துறைகளில் நெகிழ்திறன் வாய்ந்த சேவைகளை வழங்குவதற்கு இத்திட்டத்தில் கவனம் செலுத்தப்படுகிறது. **இத்திட்டத்திற்கான ஒப்புதல் மத்திய அரசிடமிருந்து பெறப்பட்டுள்ளது. மேலும், உலக வங்கியுடன் கடன் பெறுவதற்கான பேச்சுவார்த்தைகள் விரைவில் நடைபெறும்.** இத்திட்டத்தின் முதற்கட்டத்தில், நிர்வாகம், கொள்கைகள் மற்றும் நிறுவனங்களை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக, சென்னை ஒருங்கிணைந்த போக்குவரத்துக் குழுமம் (CUMTA) மறுசீரமைக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க, சட்டத்தில் தேவையான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நீர்வளங்களை திட்டமிடுதல் மற்றும் நீர்ப் பாதுகாப்பை மேம்படுத்துதல் போன்ற பணிகளை ஒருங்கிணைக்க ஒரு நீர்க் குழுமம் நிறுவப்படும். பெருநகரச் சென்னை மாநகராட்சியில் ஆரம்ப சுகாதார சேவைகளின் வசதிகளையும், தரத்தையும் உயர்த்துதல், மாநகரப் போக்குவரத்துக் கழகத்தின் பேருந்து சேவைகளையும், சென்னைப் பெருநகரக் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் நீர் வழங்கலையும் விரிவுபடுத்துதல் மற்றும் மேம்படுத்துதல், மேற்கூறிய நிறுவனங்களின் நிதிநிலையை வலுப்படுத்துதல் மற்றும் பெருநகரச் சென்னை மாநகராட்சியின் திடக்கழிவு மேலாண்மையை மேம்படுத்துதல் போன்ற முக்கியமான முயற்சிகள் மேற்கொள்ளப்படும். **இத்திட்டம் மூன்று கட்டங்களாக ஏழாண்டு காலத்தில் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் முதல் கட்டம் 3,140 கோடி ரூபாய்**

**மதிப்பில் செயல்படுத்தப்படும். இதில், உலக வங்கியின் நிதியுதவியாக 300 மில்லியன் அமெரிக்க டாலர் அடங்கும்.**

**நெடுஞ்சாலைகள் துறை**

82) 2004–05 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட 'ஒருங்கிணைந்த சாலைக் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்' மூலம் (CRIDP) தமிழ்நாட்டில் சாலை வலையமைப்பின் தரம் மேம்படுத்தப்பட்டதுடன், பராமரிக்கப்பட்டு வருவதும் உறுதி செய்யப்பட்டுள்ளது. **2020–21 ஆம் ஆண்டில் 3,167.28 கிலோமீட்டர் நீளமுள்ள சாலைகளை அகலப்படுத்துதல், வலுப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் பணிகளுக்கும், 3,220.60 கிலோமீட்டர் நீளமுள்ள சாலைகளின் ஓடுதளப்பாதை தரத்தினை மேம்படுத்துவதற்கான பணிகளுக்கும், 706 பாலங்கள் மற்றும் சிறுபாலங்களுக்கான கட்டுமானப் பணிகளுக்கும் 5,300 கோடி ரூபாய் செலவில் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.** 'ஒருங்கிணைந்த சாலைக் கட்டமைப்பு மேம்பாட்டு திட்டத்தின்' கீழ், 2011–12 ஆம் ஆண்டிலிருந்து, இதுவரையில் இந்த அரசு, 43,688.67 கிலோமீட்டர் நீளமுள்ள சாலைகளை அகலப்படுத்துதல், வலுப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் பணிகளுக்கும், 10,643.38 கிலோமீட்டர் நீளமுள்ள சாலைகளின் ஓடுதளப்பாதை தரத்தினை மேம்படுத்துதல் பணிகளுக்கும், 3,768 பாலங்கள் மற்றும் ஏனைய கட்டுமானப் பணிகளுக்கும் 34,013.60 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. **2020–21 ஆம் ஆண்டின் திருத்த மதிப்பீடுகளில் இத்திட்டத்திற்கான ஒதுக்கீடு 6,023.11 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.**

83) மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதற்காகவும், சாலை இணைப்புகளை மேம்படுத்துவதற்காகவும், 5 ஆண்டு காலத்தில்,

7,964 கிலோமீட்டர் நீளமுள்ள ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளை இதர மாவட்டச் சாலைகளின் தரத்திற்கு மேம்படுத்துவதற்கான முடிவை 2017–18 ஆம் ஆண்டில் இந்த அரசு எடுத்துள்ளது. டாக்டர். சி. ரங்கராஜன் குழுவால் பரிந்துரைக்கப்பட்டவாறு, கிராமப்புறப் பகுதிகளின் மூலதனப் பணிகளில் முதலீட்டினை மேலும் அதிகரிப்பதற்கு **2020–21 ஆம் ஆண்டில், இரண்டு ஆண்டுகளுக்கான இலக்கிற்கு இந்த ஆண்டே ஒப்புதல் அளித்து, 3,063.66 கிலோமீட்டர் நீளத்தில் 1,430 ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளுக்கான பணிகள் 2503.80 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டன. இவற்றுடன், ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளை இதர மாவட்டச் சாலைகளின் தரத்திற்கு மேம்படுத்துவதற்காக திட்டமிட்ட பணிகளை நிறைவேற்ற, நிர்ணயிக்கப்பட்ட இலக்கான 5 ஆண்டுகளுக்கு மாறாக, 4 ஆண்டுகளுக்குள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.** 2020–21 ஆம் ஆண்டின் திருத்த மதிப்பீடுகளில் இத்திட்டத்திற்கான ஒதுக்கீடு 1,250 கோடி ரூபாயாக அதிகரிக்கப்பட்டது.

84) **உலக வங்கி நிதியுதவியுடன் 'தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்' இரண்டாவது கட்டம் (TNRSP-II), 5,171 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.** கோவிட்–19 பெருந்தொற்றினைக் கருத்திற்கொண்டு ஏற்கெனவே செயல்பாட்டில் உள்ள திட்டங்களுக்காக, உலக வங்கி அதன் பங்கினை முன்கூட்டியே வழங்குவதற்கு ஒப்புக்கொண்டுள்ளது. மேலும், மாநில அரசின் பங்காக 906.25 கோடி ரூபாய் செலவில், மாநில அரசு கூடுதலாக இரண்டு துணைத் திட்டங்களை மேற்கொள்வதற்கு உலக வங்கி அனுமதித்துள்ளது. **சென்னை கன்னியாகுமரி தொழில் வழித்தடத் திட்டம், ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் 6,448 கோடி ரூபாய் மதிப்பில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.** 16 தொகுப்புகளுக்கான ஒப்பந்தப்

புள்ளிகள் கோரப்பட்டு, 4 தொகுப்புகளுக்கான ஒப்புதல்கள் வழங்கப்பட்டன. மீதமுள்ள தொகுப்புகளுக்கு விரைவில் அனுமதி வழங்கப்படும். ஆசிய வளர்ச்சி வங்கியுடனான கடன் ஒப்பந்தம் விரைவில் கையெழுத்திடப்படும். இத்திட்டத்திற்காக, 2021–22 ஆம் ஆண்டு இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், 1,274.09 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

85) **5 பகுதிகள் கொண்ட, 133.87 கிலோமீட்டர் நீளமுள்ள சாலைகளில் சென்னை எல்லை சுற்றுச் சாலை திட்டம், 12,301 கோடி ரூபாய் மொத்த மதிப்பீட்டில் செயல்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ளது.** ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு முகமையின் நிதியுதவியுடன் பகுதி–1 ஐ செயல்படுத்துவதற்கு 2,673.42 கோடி ரூபாய் ஒப்புதலை அரசு வழங்கியுள்ளது. இத்திட்டத்தின் இரண்டாம் பகுதி மற்றும் மூன்றாம் பகுதியை செயல்படுத்துவதற்காக, 4,899 கோடி ரூபாய் மதிப்பில், ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி மற்றும் பெட்ரோலியம் ஏற்றுமதி நாடுகள் அமைப்பின் (OPEC) சர்வதேச வளர்ச்சி நிதியம் ஆகியவற்றுடன் கடன் ஒப்பந்தம் விரைவில் கையெழுத்திடப்படவுள்ளது. இரண்டாம் பகுதியின் இரண்டு பொறியியல், கொள்முதல், கட்டுமான தொகுப்புகளுக்காக (EPC-Engineering, Procurement and Construction) ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கான ஒப்புதல் விரைவில் வழங்கப்படும். இத்திட்டத்திற்காக, 2021–22 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு–செலவுத் திட்டத்தில் 2,248.62 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

86) **நெடுஞ்சாலைத் துறைக்காக, திருத்த மதிப்பீடுகளில் 16,316.47 கோடி ரூபாயும், 2021–22 ஆம் ஆண்டின் இடைக்கால**

**வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 18,750.96 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**போக்குவரத்துத் துறை**

87) குறைந்த விலையில் தரமான பேருந்து போக்குவரத்து சேவைகளை வழங்குவதற்கு, இந்த அரசு அதிக முக்கியத்துவம் அளிக்கிறது. 2011 ஆம் ஆண்டிலிருந்து 14,489 புதிய பேருந்துகள் கொள்முதல் செய்யப்பட்டு, பேருந்துகளின் சராசரியான ஆயுட்காலம் 6.38 ஆண்டுகளாகக் குறைக்கப்பட்டுள்ளது. 2010–11 ஆம் ஆண்டில் எரிபொருள் இயக்கத் திறன் ஒரு லிட்டருக்கு 5.25 கிலோமீட்டரில் இருந்து, 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் ஒரு லிட்டருக்கு 5.40 கிலோமீட்டராக உயர்ந்துள்ளது. மாநிலப் போக்குவரத்துக் கழகங்களில், விபத்து விகிதம் ஒரு இலட்சம் கிலோமீட்டர் இயக்கத்திற்கு 0.09 என்ற அளவிற்கு குறைக்கப்பட்டுள்ளது.

88) கோவிட்–19 பெருந்தொற்றின் காரணமாக, 2020–21 ஆம் ஆண்டு பேருந்து போக்குவரத்துக் கழகங்களுக்கு மிகவும் கடினமான ஆண்டாக இருந்தது. 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வரையில் மாநிலப் போக்குவரத்துக் கழகங்களுக்கு 3,717.36 கோடி ரூபாய் வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. தங்களது செலவினங்களை மேற்கொள்வதற்காக, அரசு உத்தரவாதத்தின் அடிப்படையில் 3,739 கோடி ரூபாய் கடன்களைப் பெறுவதற்கு அரசு அனுமதித்துள்ளது. மேலும், போக்குவரத்துக் கழகங்களின் சம்பளம், ஓய்வூதியம் மற்றும் பேருந்து இயக்குவதற்கான கட்டணங்கள், மாணவர்களுக்கான இலவசப் பேருந்துப் பயணக் கட்டணம் மற்றும் ஏனைய மானியங்களாக 2,914.44 கோடி ரூபாய் வழங்கப்பட்டது. மேலும், 526.47 கோடி ரூபாய்

குறுகியகாலக் கடனும், டீசல் மானியமாக 135.87 கோடி ரூபாயும் அரசு வழங்கியது.

89) தூய்மையான மற்றும் பசுமையான எரிபொருளை பயன்படுத்துவதில் உறுதியாக இருப்பதை எடுத்துக்காட்டும் வகையில் உலக C40 தூய்மை பேருந்து உறுதிமொழியில் கையெழுத்திட்டதில், நாட்டின் முதல் மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது. **அடுத்த சில ஆண்டுகளில், 12,000 பேருந்துகள் கொள்முதல் செய்யப்படும். அவற்றில் 2,000 பேருந்துகள் மின்சாரப் பேருந்துகளாக இருக்கும். முதல் கட்டத்தில், ஜெர்மன் வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன், 1,580 கோடி ரூபாய் செலவில் 2,200 BS-VI பேருந்துகளும், 500 மின்சாரப் பேருந்துகளும் கொள்முதல் செய்யப்படும்.** இத்திட்டத்தை செயல்படுத்துவதற்காக, 2021–22 ஆம் ஆண்டின் இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 623.59 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### சென்னை மெட்ரோ இரயில் திட்டம்

90) மாண்புமிகு பிரதமர் அவர்கள் 9 கிலோமீட்டர் நீளமுள்ள சென்னை மெட்ரோ இரயில் முதற்கட்ட விரிவாக்கத் திட்டத்தை தொடங்கி வைத்தார். இத்துடன், மொத்தம் 54.1 கிலோமீட்டர் நீளமுள்ள சென்னை மெட்ரோ இரயிலின் முதற்கட்ட திட்டம் தற்போது முழுமையாகச் செயல்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. மேலும், 61,843 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 118.90 கிலோமீட்டர் நீளத்திலான மூன்று வழித்தடங்கள் அடங்கிய, சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் இரண்டாவது கட்டப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. **சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணிகளுக்கான நிதியில், மத்திய அரசு தனது பங்கை வழங்கும் என்று மாண்புமிகு மத்திய நிதியமைச்சர் தனது வரவு–செலவுத் திட்ட உரையில் தெரிவித்துள்ளதை நான் மகிழ்ச்சியுடன் குறிப்பிடுகிறேன்.**

**இத்துடன் இத்திட்டத்திற்கான மொத்த நிதியாதாரம் இறுதி செய்யப்பட்டுள்ளது.** தாம்பரம் வழியாக விமான நிலையம் முதல் கிளாம்பாக்கம் பேருந்து நிலையம் வரையிலான மெட்ரோ இரயில் நீட்டிப்பிற்கான விரிவான திட்ட அறிக்கையும், தாம்பரத்திலிருந்து வேளச்சேரி வரையிலான திட்டத்திற்கான விரிவான சாத்தியக்கூறு அறிக்கையும் தயாரிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. **6,683 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 44 கிலோமீட்டர் நீளமுள்ள கோயம்புத்தூர் மெட்ரோ இரயில் திட்டத்தின் முதற்கட்டத்தை அமைப்பதற்கான விரிவான சாத்தியக்கூறு அறிக்கை தயாரிக்கப்பட்டு, ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.**

**எரிசக்தி**

91) புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மின் நிறுவுதிறனான 16,167 மெகாவாட் உட்பட, மாநிலத்தின் தற்போதைய ஒட்டு மொத்த மின் நிறுவுதிறன் 32,149 மெகாவாட் ஆகும். 2011 ஆம் ஆண்டு முதல் மாநில மற்றும் மத்திய அரசின் திட்டங்கள், மின்கொள்முதல் ஒப்பந்தங்கள் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்கள் ஆகியவற்றின் வாயிலாக, 15,745 மெகாவாட் மின்சாரம், மின்கட்டமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளது. தற்போது வரையில், 6,220 மெகாவாட் மின் உற்பத்தித் திறன் கொண்ட திட்டங்கள், 50,582 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உருவாக்கப்பட்டு வருகின்றன. கூடுதலாக, 62,365 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 11,510 மெகாவாட் மின் உற்பத்தித் திறன் கொண்ட பல்வேறு பணிகள் பரிசீலனையில் உள்ளன. இவ்வாறு, தமிழ்நாட்டை மின்மிகை மாநிலமாக மாற்றியதோடு அல்லாமல், எதிர்காலங்களிலும் இந்நிலை தொடருவதற்கான நடவடிக்கைகளை அரசு உறுதிசெய்துள்ளது.

92) புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை மின்கட்டமைப்பிற்கு உடனடியாகச் செலுத்தும் வசதிகள் உட்பட, மின் தொடரமைப்பு உட்கட்டமைப்பில் இந்த அரசு தொடர்ந்து முதலீடு செய்து வருகிறது. 2011–12 ஆம் ஆண்டு முதல் 110 கிலோவோல்ட் அல்லது அதற்கு மேற்பட்ட திறன் கொண்ட 701 புதிய துணை மின் நிலையங்கள் மற்றும் 14,664 சுற்று கிலோமீட்டர் நீளமுள்ள கூடுதல் உயர் அழுத்த மின்பாதைகள் இயக்கி வைக்கப்பட்டுள்ளன. 110 கிலோவோல்ட் அல்லது அதற்கு மேற்பட்ட திறன் கொண்ட 128 துணை மின் நிலையங்கள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. சென்னை கன்னியாகுமரி இடையிலான தொழில் வழித்தட மின் தொடரமைப்புத் திட்டத்தை 4,333 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகம் செயல்படுத்தி வருகின்றது. தடையற்ற மற்றும் நிலையான மின்சாரம் வழங்குவதற்கு மின்சாரம் பகிர்மான உட்கட்டமைப்பினை மேம்படுத்துவது மிகவும் அவசியம். 2011 ஆம் ஆண்டு முதல், 34,088 கிலோமீட்டர் உயரழுத்த மின் பாதைகள், 90,368 கிலோமீட்டர் தாழ்வழுத்த மின் பாதைகள் மற்றும் 1,37,579 மின்மாற்றிகள் இயக்கி வைக்கப்பட்டுள்ளன. மேலும், 1.99 இலட்சம் புதிய விவசாய மின் இணைப்புகள் உட்பட, பல்வேறு பிரிவுகளில் உள்ள பயனாளிகளுக்கு, மொத்தம் 89.09 இலட்சம் புதிய மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

93) தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் கடுமையான நிதி நெருக்கடியை கருத்திற்கொண்டு, அரசு தொடர்ந்து நிதியுதவியினை வழங்கி வருகிறது. 2020–21 ஆம் ஆண்டின் திருத்த மதிப்பீடுகளில் மின் கட்டண மானியமாக 8,413.98 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2021–22 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், மானியக் கட்டணங்களுக்காக 8,834.68 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. உதய் திட்டத்தின்

கீழ், 5 ஆண்டு காலத்தில் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் கடன்களை மானியமாக மாற்றுவதற்கான ஐந்தாவது மற்றும் இறுதிக் கட்ட மானியமாக 4,563 கோடி ரூபாய், 2021–22 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு ஏற்பட்ட இழப்புகளை ஈடு செய்யும் விதமாக உதய் திட்டத்தின் வழிமுறைகளின்படி, 2021–22 ஆம் ஆண்டு இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 7,217.40 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் நிதி நெருக்கடியிலிருந்து மீண்டு வருவதற்காக, 2020–21 ஆம் நிதியாண்டில் பல்வேறு நிதி நிறுவனங்கள் மற்றும் வங்கிகளிலிருந்து 37,130.30 கோடி ரூபாய் மதிப்பில் கடன்களைப் பெறுவதற்கான உத்தரவாதத்தை அரசு வழங்கியுள்ளது.

**பள்ளிக்கல்வி**

94) குழந்தைகளுக்கு உயர்தரக் கல்வியை வழங்குவது இந்த அரசின் உயர்ந்த முன்னுரிமையாகும். எனவே, **பள்ளிக் கல்விக்காக அதிகபட்சமான ஒதுக்கீடாக, 2020–21 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 34,181.73 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.** 2011–12 ஆம் ஆண்டு முதல் 273 தொடக்கப் பள்ளிகள் திறக்கப்பட்டுள்ளன. 127 தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும், 1,115 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 644 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. தொடக்கக் கல்வியில் மாணவர் நிகர சேர்க்கை விகிதம் 99.90 சதவீதமாக உயர்ந்துள்ளது. பள்ளி இடைநிற்றல் விகிதம் 0.75 சதவீதமாகக் குறைந்துள்ளது. மதிய சத்துணவு, பாடப்புத்தகங்கள், நோட்டுப்புத்தகங்கள், மடிக்கணினிகள், சீருடைகள், காலணிகள்,

பள்ளி புத்தகப்பைகள், கிரையான்கள், வண்ண பென்சில்கள், வடிவியல் பெட்டிகள் மற்றும் நிலவரைபடப் புத்தகங்கள், இலவசப் பேருந்து அட்டை மற்றும் விலையில்லா மிதிவண்டி வழங்குதல் போன்றவை தொடர்ந்து செயல்படுத்தப்படும். இந்தத் திட்டங்கள் தொடர்வதற்காக, 2020–21 ஆம் ஆண்டின் திருத்த மதிப்பீடுகளில் மொத்தம் 3,703.35 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாய கல்விச் சட்டம், 2009, பிரிவு 12(1) (C) இன் படி, இதுவரை 5,61,111 குழந்தைகள் தனியார் பள்ளிகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதற்காக, மொத்தம் 1,324.28 கோடி ரூபாய் தமிழ்நாடு அரசால் தனியார் பள்ளிகளுக்கு திருப்பியளிக்கப்பட்டுள்ளது.

95) கோவிட்–19 பெருந்தொற்று காலத்தில், மாணவர்கள் இடைவிடாமல் தொடர்ந்து கல்வி கற்பதை உறுதி செய்வதற்காக, 1 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் இலவசமாக பாடப்புத்தகங்களை அரசு வழங்கியது. 12 ஆம் வகுப்பிற்கு, உயர் தொழில்நுட்ப ஆய்வகங்கள் மூலம் 1,912 வீடியோ பாடங்கள், மாணவர்களுக்கு வழங்கப்பட்ட விலையில்லா மடிக்கணினிகளில் பதிவேற்றம் செய்யப்பட்டன. இதனால் 4,20,624 மாணவர்கள் பயனடைந்தனர். 5,522 வீடியோ பாடங்கள் தயாரிக்கப்பட்டு, கல்வி தொலைக்காட்சி வாயிலாக ஒளிபரப்பு செய்யப்படுகின்றன. அரசின் சார்பாக 10 இதர தனியார் தொலைக்காட்சிகளும் கல்வி சார்ந்த நிகழ்ச்சிகளை ஒளிபரப்பு செய்கின்றன. மாணவர்களுக்கான பாடங்கள் பல்வேறு இணையதளங்களில் மின்னணு தொகுப்பில் பதிவேற்றப்பட்டுள்ளன.

96) தகவல் தொடர்பு தொழில்நுட்பம் வாயிலாக தரமான கல்வியை, பள்ளிகளில் வழங்குவதில் இந்த அரசு

உறுதிபூண்டுள்ளது. 6 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரையிலான அறிவியல் பாடத்திட்டத்தின் ஒரு பகுதியாக தகவல் தொடர்பு தொழில்நுட்பக் கல்வியை ஒருங்கிணைப்பதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டுள்ளது. மேலும், 6,029 அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் 520.13 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உயர் தொழில்நுட்ப ஆய்வகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. **இதுவரையில், கணிப்பொறி அறிவியல் பாடப்பிரிவானது 11 மற்றும் 12 ஆம் வகுப்புகளுக்கு மட்டும் தனிப்பாடமாக கற்பிக்கப்பட்டு வருகிறது. தற்போது, அனைத்து அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளிலும் 6 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு கணிப்பொறி அறிவியல் அறிமுகப்படுத்தப்படும்.**

**உயர் கல்வி**

97) தமிழ்நாட்டின் இளம் மக்கள்தொகை சார் ஆதாயத்தினையும், இளைஞர்களின் ஆற்றலையும், மனித வளமாக மாற்றுவதற்கு இந்த அரசு உயர்கல்வித் துறையின் மூலம் முக்கியமான திட்டங்களை மேற்கொண்டு வருகிறது. தமிழ்நாட்டின் மொத்தச் சேர்க்கை விகிதம் தற்போது 49 சதவீதம் ஆகும். இது தேசிய சராசரி விகிதத்தை விட இரு மடங்கு அதிகமாகும். 2018–19ஆம் ஆண்டின் பாலின சமநிலைக் குறியீடு 0.97 ஆக உள்ளது. பெண்களுக்கு சமமான பள்ளி வசதிகள் வழங்கப்பட்டுள்ளதை இது எடுத்துக்காட்டுகிறது. 2011–12 ஆம் ஆண்டு முதல், 37 இருபாலர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளையும், 3 அரசு பெண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளையும், 21 பல்தொழில்நுட்பக் கல்லூரிகளையும் 4 அரசு பொறியியல் கல்லூரிகளையும் அரசு நிறுவியுள்ளது. வேலைவாய்ப்பினை அதிகரிக்கும் நோக்கத்தில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 1,577 புதிய பாடப் பிரிவுகள்

தொடங்கப்பட்டுள்ளன. முதல் தலைமுறை பட்டதாரிகளுக்கான கல்விக்கட்டண சலுகை ஒவ்வொரு ஆண்டும் 2 இலட்சம் மாணவர்களுக்கு வழங்கப்படுகிறது. இதற்காக, 2020–21 ஆம் ஆண்டின் திருத்த மதிப்பீடுகளில் 391.50 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. 2021–22 ஆம் ஆண்டு இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் உயர்கல்விக்காக மொத்தமாக 5,478.19 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை**

98) சுகாதாரத் துறையில் இந்த அரசு செய்த முதலீடுகளால் கடந்த பத்தாண்டு காலத்தில், முக்கிய சுகாதாரக் குறியீடுகளில் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. 2010 ஆம் ஆண்டில் 24–ஆக இருந்த குழந்தை இறப்பு விகிதம், 2018 ஆம் ஆண்டில் 15–ஆகவும், 2010 ஆம் ஆண்டில் 90–ஆக இருந்த தாய்மார்கள் இறப்பு விகிதம் 2019 ஆம் ஆண்டில் 57ஆகவும் குறைக்கப்பட்டுள்ளது. தேசிய மற்றும் நிலைக்கத்தக்க வளர்ச்சி குறிக்கோள்களின் இலக்கினை தமிழ்நாடு குறிப்பிடப்பட்ட காலவரையறைக்கு முன்னதாகவே அடைந்துள்ளது.

99) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தற்போதைய இரண்டு புதிய சிறப்பு முயற்சிகளின் வாயிலாக, பொது சுகாதார அமைப்பின் மூலம் தொடக்க மற்றும் இரண்டாம் நிலைகளில் தரம் வாய்ந்த மருத்துவ சேவைகளை வழங்குவதற்கான தமிழ்நாடு அரசின் ஒருங்கிணைந்த உத்திமுறைக்கு பெருமளவில் ஊக்கம் அளிக்கப்பட்டுள்ளது. அரசுப் பள்ளிகளில் 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயின்று, தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வில் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு, மருத்துவப் படிப்பு, பல் மருத்துவப் படிப்பு,

இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி படிப்புகளுக்கான மாணவர் சேர்க்கையில் 7.5 சதவீத இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டன. இது, முதல் சிறப்பு முயற்சியாகும். மருத்துவப் படிப்பு மற்றும் பல் மருத்துவப் படிப்புகளில் அனுமதி பெற்ற மாணவர்களுக்கு தங்கும் விடுதிக் கட்டணங்கள் மற்றும் அனைத்து வகையான முக்கிய கட்டணங்களைச் செலுத்துவதற்கு 16 கோடி ரூபாய் மதிப்பில் சுழற்சி நிதியை இந்த அரசு ஏற்படுத்தியுள்ளது. ஊரக மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் அத்தியாவசிய ஆரம்ப சுகாதார சேவைகளை வழங்குவதற்காக, படிப்படியாகத் தொடங்கப்படும் 2,000 அம்மா மினி கிளினிக்குகள் சுகாதார வசதிகளை மேலும் மேம்படுத்தும் விதமாக அமையும். **இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், அம்மா மினி கிளினிக்குகளுக்காக 144 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

100) இந்த அரசு ஏற்கெனவே 6 புதிய மருத்துவ கல்லூரிகளைத் தொடங்கி, தமிழ்நாட்டில் செயல்பட்டு வரும் மருத்துவப் படிப்பிற்கான இடங்களை அதிகரித்துள்ளது. இதனால், 2011 ஆம் ஆண்டில் இருந்த 1,940 மருத்துவப் படிப்பிற்கான இடங்கள், இன்றைய நாள் வரை 3,650 இடங்களாக அதிகரிக்கப்பட்டுள்ளன. 3,995 கோடி ரூபாய் மதிப்பில் 11 புதிய அரசு மருத்துவக் கல்லூரிகள் நிறுவப்படுவதன் மூலம், 2021–22 ஆம் கல்வியாண்டில் கூடுதலாக 1,650 மருத்துவப் படிப்பிற்கான இடங்கள் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 2021–22 ஆம் ஆண்டு இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், புதிய மருத்துவக் கல்லூரிகள் அமைப்பதற்காக 2,470.93 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

101) அரசு மருத்துவமனைகளில் வழங்கப்படும் சிகிச்சையின் தரத்தை மேம்படுத்தவும், குறிப்பாக தொற்றா நோய்களின்

மேலாண்மையை வலுப்படுத்தவும், ஏற்றத்தாழ்வின்றி, சமமான தாய்–சேய் சுகாதார சேவைகளை வழங்கவும், 2,857 கோடி ரூபாய் மதிப்பீட்டில், உலக வங்கியின் நிதியுதவியுடன் தமிழ்நாடு சுகாதார சீரமைப்புத் திட்டத்தை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகின்றது. இத்திட்டத்திற்காக, 2021–22 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 291.50 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு முகமையின் (JICA) நிதியுதவியுடன், மொத்தம் 1,634 கோடி ரூபாய் மதிப்பீட்டில், தமிழ்நாடு நகர்ப்புற சுகாதாரத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2021–22 ஆம் ஆண்டு இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், இத்திட்டத்திற்காக 815.70 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

102) முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், 2012 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல், 54.99 இலட்சம் பயனாளிகள் 7,473.52 கோடி ரூபாய் மதிப்பிலான மருத்துவ சிகிச்சைகளைப் பெற்றுள்ளனர். இத்திட்டத்தின் கீழ், அரசு மருத்துவமனைகள் 2,779 கோடி ரூபாய் காப்பீட்டுத் தொகையாகப் பெற்றுள்ளன. இத்திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட மூலதன நிதியிலிருந்து 753.76 கோடி ரூபாய் செலவில் 9,727 நபர்கள் உயர்தர சிகிச்சையை பெற்றுள்ளனர். டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு உதவித் திட்டத்தின் கீழ், பயனாளி ஒருவருக்கு உயர்த்தப்பட்ட நிதியுதவியான 18,000 ரூபாயை அரசு வழங்குகிறது. 2011 ஆம் ஆண்டு மே மாதம் முதல், 68.91 இலட்சம் கர்ப்பிணிப் பெண்களுக்கு 6,929.07 கோடி ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. இறந்தவர்களின் உறுப்பு மாற்றுத் திட்டத்தை செயல்படுத்துவதில் சிறப்பாகச் செயலாற்றி, கடந்த ஆறு ஆண்டுகள் தொடர்ச்சியாக சிறந்த மாநில விருதினை தமிழ்நாடு பெற்றுள்ளது.

103) 2011 ஆம் ஆண்டில், 415 ஆக இருந்த 108 அவசர சிகிச்சை ஊர்தி சேவைகளின் எண்ணிக்கை, இன்றைய நாள்வரையில், 1,303 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. 2011 ஆம் ஆண்டு மே மாதம் முதல், 23.22 இலட்சம் கர்ப்பிணித் தாய்மார்கள் உட்பட, 94.84 இலட்சம் மக்கள் இந்த சேவையைப் பெற்றுள்ளனர். கால அளவு அனைத்து மெட்ரோ பகுதிகளிலும் 8 நிமிடங்கள் 7 நொடிகளாகவும் மற்ற பகுதிகளில் 13 நிமிடங்கள் 42 நொடிகளாகவும் குறைக்கப்பட்டுள்ளது. மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் துறைக்கான ஒதுக்கீடு, **2020–21 ஆம் ஆண்டின் வரவு–செலவுத் திட்டத்தில், 15,863.37 கோடி ரூபாயிலிருந்து 2020–21 திருத்த மதிப்பீடுகளில் 18,458.27 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. மேலும், இந்த ஒதுக்கீட்டை உயர்த்தி, 2021–22 ஆம் ஆண்டின் இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 19,420.54 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**தொழிலாளர் நலன்**

104) பட்டாசு மற்றும் தீப்பெட்டி தொழிற்சாலை தொழிலாளர்கள் நல வாரியத்தை அமைத்ததுடன், தற்போது தமிழ்நாட்டில் 18 அமைப்பு சாரா நல வாரியங்கள் உள்ளன. **தற்போது, இந்த வாரியங்களில் 26,67,355 தொழிலாளர்கள் பதிவு செய்யப்பட்டு, 2011 ஆம் ஆண்டு முதல் இன்றைய நாள் வரையில், புலம் பெயர் தொழிலாளர்கள் உட்பட 84,32,473 பயனாளிகளுக்கு, நல நிதி உதவியாக 2,219.70 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.** 2020–21 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளில், உயர்த்தப்பட்ட ஒதுக்கீடாக அமைப்பு சாரா நல வாரியங்களுக்கு மானியத் தொகையாக 149.86 கோடி ரூபாய் செய்யப்பட்டுள்ளது. **2020ஆம் ஆண்டு மார்ச் மாதத்திலிருந்து சென்னை மாவட்டத்தில் பணியமர்த்தப்பட்ட 1,20,309 பதிவு பெற்ற கட்டுமானப் பணியாளர்கள் அம்மா உணவகங்களில் இலவசமாக உணவை உட்கொள்கின்றனர்.**

ஊரடங்கின் போது, 22.75 இலட்சம் அமைப்பு சாரா பணியாளர்களுக்கும் மாநிலங்களுக்கிடையே புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கும் 143.52 கோடி ரூபாய் மதிப்பில் ரேஷன் பொருட்கள் வழங்கப்பட்டன. பதிவு பெற்ற அமைப்பு சாரா பணியாளர்கள் ஒவ்வொருவருக்கும் ரூ.1000/–வீதம் 475.13 கோடி ரூபாய் நிதியுதவி மூன்று தவணைகளில் வழங்கப்பட்டுள்ளது.

**வேலைவாய்ப்பு மற்றும் திறன் பயிற்சி**

105) அரசு தொழிற்பயிற்சி நிறுவனங்களில் பயிற்சி பெறுபவர்களுக்கான மாதாந்திர உதவித் தொகை 500 ரூபாயிலிருந்து 750 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. **வேலை தேடுபவர்கள் மற்றும் தனியார் துறை வேலையளிப்பவர்கள் அணுகும் வகையில், தமிழ்நாடு தனியார் வேலைவாய்ப்பு வலைதளம் உருவாக்கப்பட்டுள்ளது. இன்றைய நாள்வரையில், 1,12,194 வேலை தேடுபவர்களும் 3,360 வேலையளிப்பவர்களும் இந்த வலைதளத்தில் பதிவு செய்துள்ளனர். ஏற்கெனவே 18,147 வேலை தேடுபவர்கள் வேலைவாய்ப்பினைப் பெற்றுள்ளனர்.** மாநிலம் முழுவதும் ஒருங்கிணைக்கப்பட்ட திறன் பதிவகமாகச் செயல்படுவதற்கு 2020 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் தரம் உயர்த்தப்பட்ட வலைதளம் தொடங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகம், கோவிட்–19 பெருந்தொற்றின் காரணமாக, பல்வேறு நாடுகள் மற்றும் மாநிலங்களிலிருந்து திரும்பி வந்தவர்கள் பதிவு செய்வதற்கான வலைதளங்களையும் உருவாக்கியுள்ளது. 2021–22 ஆம் ஆண்டு இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்திற்காக 200 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## தொழில்துறை

**106) 2020–21 ஆம் ஆண்டில் நடைபெற்ற நிகழ்வுகள், இந்தியாவில் முன்னணி முதலீட்டு இலக்காக தமிழ்நாடு திகழ்வதை மீண்டும் உறுதி செய்துள்ளன. 2019 ஆம் ஆண்டு உலக முதலீட்டாளர்கள் மாநாட்டிலிருந்து இன்றைய நாள் வரையில், கையெழுத்திடப்பட்ட 304 புரிந்துணர்வு ஒப்பந்தங்களில், 81 திட்டங்கள் வணிக உற்பத்தியை தொடங்கி, 191 திட்டங்கள் பல்வேறு நிலைகளில் செயல்பாட்டில் உள்ளன. ஆக மொத்தம், 89 சதவீதத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.** உலக முதலீட்டாளர்கள் மாநாட்டினை தொடர்ந்து, தமிழ்நாடு 1,08,913 கோடி ரூபாய் மொத்த முதலீட்டு மதிப்பில் 2,55,633 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் 166 திட்டங்களை ஈர்த்துள்ளது. கோவிட்–19 பெருந்தொற்றின் போது, அனைத்திந்திய அளவில் அதிக எண்ணிக்கையில் முதலீடுகளை தமிழ்நாடு ஈர்த்துள்ளது. 1,69,496 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் விதமாக, 88,727 கோடி ரூபாய் மதிப்பில் முதலீடுகளுக்கான 101 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையின் கீழ் உயர்நிலைக் குழு, 71,766 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் விதமாக, 39,941 கோடி ரூபாய் மதிப்பில் 62 முதலீட்டுத் திட்டங்களுக்கு விரைவில் அனுமதி வழங்கியுள்ளது.

107) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சமீபத்தில் வெளியிடப்பட்ட புதிய தொழில் கொள்கையால் தமிழ்நாட்டில் தொழில்மயமாக்கல் மேலும் முன்னேற்றம் அடையும். இக்கொள்கை, பல்வேறு தரப்பினரது கருத்துகளின் அடிப்படையிலும், டாக்டர் சி. ரங்கராஜன் குழுவின் சில பரிந்துரைகளின் அடிப்படையிலும் வகுக்கப்பட்டது. தொழிற்சாலைகளுக்கு வழங்கப்படும் உதவிகள் சார்ந்த விவரங்கள் இக்கொள்கையில் தெளிவாக விவரிக்கப்பட்டுள்ளன.

இக்கொள்கை, தென்மாவட்டங்களிலும், மாநிலத்தில் தொழிற்சாலைகள் குறைவாக உள்ள பகுதிகளிலும் தொழிற்சாலை அமைப்பதற்கு மேலும் ஊக்கத்தொகையினை அளிக்கிறது. வழிகாட்டி நிறுவனம் (GUIDANCE) பெருமளவில் வலுப்படுத்தப்பட்டு, அமெரிக்கா, பிரான்ஸ், ஜெர்மனி, இங்கிலாந்து, சீனா, கொரிய குடியரசு, ஜப்பான், ஐக்கிய அரபு நாடுகள், இந்தோனேசியா, சிங்கப்பூர், தைவான் ஆகிய நாடுகளுக்கான பிரத்தியேக அமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

108) தமிழ்நாடு தொழில் மேம்பாட்டுக் கழகம், 2,674 தொழில் நிறுவனங்களுக்கு 21,912 ஏக்கர் பரப்பளவு நிலத்தை இதுவரையில் ஒதுக்கீடு செய்துள்ளது. 3,000 ஏக்கர் நிலம் ஒதுக்கீட்டிற்காக தயார் நிலையில் உள்ளது. கூட்டு முயற்சியின் அடிப்படையில் புதிய தொழிற் பூங்காக்கள் அமைப்பதற்கு சிப்காட் ஊக்கம் அளிக்கின்றது. தமிழ்நாடு உட்கட்டமைப்பு நிதி மேலாண்மை கழகத்துடன் உருவாக்கப்பட்ட சிறப்பு நோக்கு முகமை வாயிலாக வல்லம் வடகாலில் தொழிலக வீட்டு வசதிகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. ஃபாக்ஸ்கான் நிறுவனத்தின் பணியாளர்களுக்கான தங்குமிட வசதியும், 680 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும். அதேபோல், கிருஷ்ணகிரி அருகிலுள்ள புதிய டாடா மின்னணுவியல் திட்டத்திற்காக வசதிகள் ஏற்படுத்தப்படும்.

109) உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதி மற்றும் நிதி தொழில்நுட்ப நிறுவனங்களை ஈர்ப்பதற்கு, சென்னை அருகிலுள்ள காவனூரில் நிதி தொழில்நுட்ப நகரத்தை, தமிழ்நாடு தொழில் வளர்ச்சி கழகம், தோராயமாக 260 ஏக்கர் பரப்பளவில் உருவாக்கி வருகின்றது. புதிய நிதி தொழில்நுட்பக் கொள்கை இறுதி செய்யப்பட்டு வருகிறது. இதன் மூலம், நிதி தொழில்நுட்ப நிறுவனங்களுக்கான உலக அளவில் ஒரு மையமாக சென்னை உருவாக வழி வகுக்கும்.

## குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள்

**110)** குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறையில் தமிழ்நாடு முன்னணி மாநிலமாக தொடர்ந்து விளங்குவதற்கு, 2021 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 16 ஆம் நாளன்று, புதிய குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் கொள்கையை தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ளது. முதலீட்டு வரம்புகள் கணிசமாக உயர்த்தப்பட்டதுடன், விற்பனை அளவு சார்ந்த வரன்முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டு, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் வரையறையை மத்திய அரசு மாற்றியது. இந்த மாற்றப்பட்ட வரையறை குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களை விரிவாக்கம் செய்வதற்கும் வளர்ச்சியடைவதற்கும் உதவும்.

**111)** தமிழ்நாட்டின் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள், கோவிட்-19 பெருந்தொற்றினால் மிகவும் பாதிப்படைந்துள்ளன. குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு உதவுவதற்கும், புத்துயிர் அளிப்பதற்கும் டாக்டர்.சி.ரங்கராஜன் குழு விரிவான பரிந்துரைகளை அளித்துள்ளது. இப்பரிந்துரைகளின் மீது மாநில அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது. **டாக்டர் சி.ரங்கராஜன் குழுவின் பரிந்துரைகளை ஏற்றுக்கொண்டு, கடன் வழங்கும் நிறுவனமாக தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகத்தை வலுப்படுத்துவதற்கும், அதன் செயல்பாடுகளை விரிவாக்குவதற்கும் கூடுதல் மூலதனமாக 1,000 கோடி ரூபாயை அரசு வழங்கும். இதற்காக, 2021-22 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 300 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**112)** 2011-12 ஆம் ஆண்டு முதல் 2020-21 ஆம் ஆண்டு வரையிலான காலத்தில், மொத்தம் 1,517.78 கோடி ரூபாய் மதிப்பீட்டில்

பல்வேறு திட்டங்களின் கீழ் வழங்கப்பட்ட மானியங்களால் 43,041 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் தொழில் முனைவோர்கள் பயன்பெற்றுள்ளனர். இந்த ஆண்டு கோவிட்–19 பெருந்தொற்று காலத்தில் தொழில் நிறுவனங்களுக்கு உதவும் விதமாக மானியங்கள் முன்கூட்டியே வழங்கப்பட்டன. வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் ஒதுக்கீடு செய்யப்பட்ட 210 கோடி ரூபாயில், இன்று வரையில் 191 கோடி ரூபாய் மானியம் வழங்கப்பட்டது.

113) பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் கீழ், 2011 ஆம் ஆண்டு முதல், 16,239 பயனாளிகளுக்கு 355.94 கோடி ரூபாய் விளிம்புத்தொகையாக வழங்கப்பட்டுள்ளது. வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வேலை உருவாக்கும் திட்டத்தின் கீழ், 2011–12 ஆம் ஆண்டு முதல், 42,238 பயனாளிகளுக்கு 230.78 கோடி ரூபாய் மானியம் வழங்கப்பட்டுள்ளது. புதிய தொழில் முனைவோர் மற்றும் நிறுவன மேம்பாட்டுத் திட்டத்தின் தொடக்கத்திலிருந்து, 4,178 பயனாளிகளுக்கு 407.96 கோடி ரூபாய் தனிநபர் அடிப்படையிலான மூலதன மானியமாக வழங்கப்பட்டுள்ளது. மேலும், 37.05 கோடி ரூபாய் பின்முனை வட்டி மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

114) நடைமுறையில் உள்ள தொழிற்பேட்டைகளை உருவாக்கும் திட்டங்களுடன், தனியார் தொழிற்பேட்டைகளை ஊக்குவிப்பதற்கான ஒரு சிறப்புத் திட்டத்தை சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் (SIDCO) அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின் கீழ் கோயம்புத்தூர் மாவட்டம் மொப்பிரிபாளையத்திலுள்ள, கொடிசியா தொழிற்பூங்கா அமைக்கப்பட்டுள்ளது, மற்றும் மதுரையிலுள்ள மதுரை பொறியியல் குழுமம் செயல்பாட்டில் உள்ளது. கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள கள்ளபாளையத்தில் ஒரு புதிய தொழிற்பூங்காவை உருவாக்கும்

திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. தொழில் நிறுவனங்களை நகர்ப்புறங்களிலிருந்து மாற்றுவதற்கான சிறப்பு முயற்சித் திட்டத்தின் கீழ், மேட்டுப்பாளையத்தில் ஒரு தேயிலை தொழிற் குழுமம் மற்றும் தென் மாவட்டங்களுக்கான ஒரு ஜவுளித் தொழில் குழுமம் ஒன்று விருதுநகரில் உருவாக்கிடவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

## கைத்தறி, கைத்திறன் துணிநூல் மற்றும் கதர்

**115)** கைத்தறி மற்றும் துணிநூல் துறையானது, தமிழ்நாட்டில் அதிகமான வேலைவாய்ப்பு அளிக்கும் திறனைக் கொண்ட துறையாகும். ஏழை மக்களுக்கு விலையில்லா வேட்டி மற்றும் சேலைகள் வழங்கும் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படுவதன் காரணமாக, கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர்களுக்கு தொடர்ந்து வேலைவாய்ப்பு வழங்கப்பட்டு வருகிறது. ஊரடங்கு காலத்தில், 31.60 கோடி ரூபாய் மொத்தச் செலவில், பதிவு செய்யப்பட்ட மற்றும் பதிவு செய்யப்படாத 1.58 இலட்சம் நெசவாளர்களுக்கு தலா 2,000 ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டது. 2021–22 ஆம் ஆண்டின் இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 1,224.26 கோடி ரூபாய் கைத்தறி மற்றும் துணிநூல் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## இந்துசமயம் மற்றும் அறநிலையங்கள் துறை

**116)** 2011 ஆம் ஆண்டு மே மாதத்திலிருந்து, 754 திருக்கோயில்களில் அன்னதானத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2011 ஆம் ஆண்டிலிருந்து 11,454 திருக்கோயில்களில் 550.60 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருக்குடமுழுக்கு விழாக்கள் நடத்தப்பட்டுள்ளன. ஆதிதிராவிடர் குடியிருப்புப் பகுதிகளில் உள்ள 7,159 திருக்கோயில்களை புனரமைக்க 53.39 கோடி ரூபாய் நிதியுதவி

வழங்கப்பட்டுள்ளது. ‘ஒரு கால பூஜை’ திட்டத்தின் கீழ் தற்போது மொத்தம் 12,959 திருக்கோயில்கள் பயன் பெற்று வருகின்றன. இந்துசமயம் மற்றும் அறநிலையங்கள் துறையின் பொது நல நிதியிலிருந்து 1,409 திருக்கோயில்களின் புனரமைப்புப் பணிகளுக்காக 109.65 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. 1,234 திருக்கோயில்களுக்குச் சொந்தமான 8,163.26 ஏக்கர் நிலங்கள் ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்கப்பட்டு, அவற்றின் பட்டாக்கள் அத்திருக்கோயில்களின் பெயரிலேயே மாற்றம் செய்யப்பட்டுள்ளன. மானசரோவர் மற்றும் முக்திநாத் ஆகிய புனித தலங்களுக்குச் செல்வதற்கான மானியங்கள் அரசால் வழங்கப்பட்டு வருகின்றன.

**சமூக நலன்**

117) மறைந்த முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள், பெண்களின் முன்னேற்றத்திற்கு அடையாளமாகத் திகழ்ந்தார். பெண்களுக்கு அதிகாரமளிப்பதற்கான பல்வேறு திட்டங்களை இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. **பல்வேறு திருமண நிதியுதவித் திட்டங்களின் கீழ், 2011–12 ஆம் ஆண்டு முதல் இன்று வரையில் 12,50,705 பயனாளிகளுக்கு 1,791.05 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 6,099.08 கிலோ தங்கமும், 4,371.22 கோடி ரூபாய் நிதியுதவியும் வழங்கப்பட்டுள்ளது.** 2011–12 ஆம் ஆண்டு முதல் முதலமைச்சரின் பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 4,56,115 பெண் குழந்தைகள் பயன்பெற்றுள்ளனர். 2011–12 ஆம் ஆண்டிலிருந்து தொட்டில் குழந்தை திட்டத்தின் கீழ் 1,186 ஆண் குழந்தைகளுக்கும், 4,359 பெண் குழந்தைகளுக்கும் புதுவாழ்வு அளிக்கப்பட்டது. மறைந்த முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பிறந்த நாளான

பிப்ரவரி, 24 ஆம் நாள் தற்போது மாநில பெண் குழந்தைகள் பாதுகாப்பு தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது.

118) **புரட்சித் தலைவர் டாக்டர்.எம்.ஜி.ஆர் மதிய சத்துணவுத் திட்டம் ஊரடங்கு காலத்திலும் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது இத்திட்டத்தின் கீழ் 43,246 மதிய சத்துணவுக் கூடங்கள் வாயிலாக 40.09 இலட்சம் பள்ளி மாணவர்கள் பயன்பெற்று வருகின்றனர். 2021–22 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 1,953.98 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.** 54,439 அங்கன்வாடி மையங்கள் வாயிலாக ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. 6 மாதம் முதல் 6 வயது வரையில் உள்ள குழந்தைகளுக்கு சத்துமாவு வழங்கப்பட்டு வருகிறது. இதில் 33 இலட்சம் குழந்தைகள் பயன்பெற்று வருகின்றனர். வளர் இளம் பெண்களுக்கு அவர்களது ஊட்டச்சத்து நிலையை அதிகரிக்க பல்வகை உணவு வழங்கப்பட்டு வருகிறது. 2 வயது முதல் 5 வயது வரையிலான 11.33 இலட்சம் குழந்தைகளுக்கு சூடான கலவை சாதம் வழங்கப்படுகிறது. 2021–22 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 2,634 கோடி ரூபாய் ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன்**

119) ஆதி திராவிடர்கள் மற்றும் பழங்குடியினரின் நிலைக்கத்தக்க சமூகப் பொருளாதார முன்னேற்றத்தை அடைவதற்கு இந்த அரசு உறுதிபூண்டுள்ளது. **2021–22 ஆம் ஆண்டு இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் ஆதி திராவிடர் சிறப்புக் கூறுகள் திட்டத்திற்காக 13,967.58 கோடி ரூபாயும், பழங்குடியினர்**

**துணைத் திட்டத்திற்காக 1,276.24 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.** ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு கல்வி வழங்குவதன் மூலம், அதிகாரம் அளிப்பதற்கு இந்த அரசு அதிக முக்கியத்துவத்தை வழங்கி வருகிறது. **2020–21 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் ஒதுக்கீடு செய்யப்பட்ட மொத்த தொகையான 4,109.53 கோடி ரூபாயில் 84.14 சதவீதம் அதாவது 3,457.56 கோடி ரூபாய் கல்வி மற்றும் கல்வி சார்ந்த திட்டங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. உயர்கல்வி உதவித்தொகை திட்டத்திற்காக, 2021–22 ஆம் ஆண்டு இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 1,932.19 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.** 1,25,154 மாணவ மாணவியர்கள் தங்கும் வகையில் 1,681 விடுதிகள் அரசால் நடத்தப்பட்டு வருகின்றன. பள்ளி விடுதி மாணவ மாணவியர்களுக்கான மாதாந்திர உணவுக் கட்டணம் 900 ரூபாயிலிருந்து 1,000 ரூபாயாகவும், கல்லூரி விடுதி மாணவ மாணவியர்களுக்கான உணவுக் கட்டணம் 1,000 ரூபாயிலிருந்து 1,100 ரூபாயாகவும் உயர்த்தப்பட்டுள்ளது. 11 மற்றும் 12 ஆம் வகுப்பு பயிலும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கு 1,48,812 மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

120) 2020–21 ஆம் ஆண்டில், 25,725 பயனாளிகளுக்கு மொத்தம் 150 கோடி ரூபாய் நிதியுதவியில் தாட்கோ செயல்திட்டத்திற்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதிகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்காக, 2021–22 ஆம் ஆண்டு இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பழங்குடியினர் வசிக்கும் தொலைதூரப் பகுதிகளில் பள்ளிகள் துவங்க முன்வரும் அரசு சாரா தொண்டு நிறுவனங்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டத்தை

தொடர்ந்து செயல்படுத்தும் வகையில், 2021–22 ஆம் ஆண்டு இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 4.07 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன்**

121) **பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் சமூகத்தைச் சார்ந்த 7.40 இலட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி உதவித்தொகைகளைப் பெற்றுவருகின்றனர்.** கல்வி உதவித்தொகைக்காக இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 374.88 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2020–21 ஆம் ஆண்டில் 3,77,286 மிதிவண்டிகள் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் சமூகத்தைச் சார்ந்த மாணவ மாணவியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. 85,914 மாணவ மாணவியர்கள் பயன்பெறும் வகையில் 1,354 விடுதிகள் தற்போது செயல்பட்டு வருகின்றன. மாணவ மாணவியர்களுக்கான உணவுக் கட்டணம், பள்ளி விடுதிகளில் மாணவர் ஒருவருக்கு 1,000 ரூபாயாகவும், கல்லூரி விடுதிகளில் மாணவர் ஒருவருக்கு 1,100 ரூபாயாகவும் உயர்த்தப்பட்டது.

122) **சீர்மரபினர் நல வாரியம் மற்றும் நரிக்குறவர் நல வாரியம் ஆகியவை அந்தந்த சமூகத்தைச் சார்ந்த மக்களின் நலனுக்காக செயல்பட்டு வருகின்றன. மேலும், வன்னியகுல சத்திரியர் சமுதாயத்தைச் சார்ந்த தனியர்களால் அல்லது நிறுவனங்களால் உருவாக்கப்பட்ட பொறுப்பாட்சிகளின் சொத்துகளையும், நிலைக்கொடைகளின் சொத்துகளையும் பாதுகாப்பதற்கு, தமிழ்நாடு வன்னியகுல சத்திரியர் பொது அறநிலைப் பொறுப்பாட்சிகள் மற்றும் நிலைக்கொடைகள் (பாதுகாத்தல் மற்றும் பேணி வருதல்) சட்டம் 2018** இயற்றப்பட்டு,

இச்சட்டத்தின் கீழ் ஒரு வாரியம் அமைக்கப்பட்டு, சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. 2021–22 ஆம் ஆண்டில் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தால் 19,855 பயனாளிகளுக்கு கடனுதவி வழங்கப்படும்.

**சிறுபான்மையினர் நலன்**

123) **2020–21 ஆம் ஆண்டில் சிறுபான்மை சமுதாயத்தைச் சேர்ந்த மாணவர்களின் நலனுக்காக, 110 கோடி ரூபாய் கல்வி உதவித்தொகை விடுவிக்கப்பட்டு வருகிறது.** 2011–12 ஆம் ஆண்டில் ஜெருசலேம் புனித யாத்திரை செல்பவர்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டம் அரசால் அறிமுகப்படுத்தப்பட்டு, இதுவரையில் 4,128 நபர்கள் புனித யாத்திரை மேற்கொண்டுள்ளனர். 2018–19ஆம் ஆண்டில் ஹஜ் புனித யாத்திரை மேற்கொள்பவர்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டம் அரசால் அறிமுகப்படுத்தப்பட்டு, இதுவரையில் 8,166 நபர்கள் பயனடைந்துள்ளனர். 2020–21 ஆம் ஆண்டில், இதுவரை தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் 5,111 பயனாளிகளுக்கு 30.49 கோடி ரூபாய் மதிப்பில் கடன் வழங்கியுள்ளது. **மொழிவாரி சிறுபான்மையினர் நலனுக்காக, 9 கோடி ரூபாய், அரசின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு முதலீட்டுடன், தமிழ்நாட்டில் மொழிவாரி சிறுபான்மையினர் சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் நிறுவப்பட்டுள்ளது.**

**மாற்றுத்திறனாளிகள் நலன்**

124) மாற்றுத்திறனாளிகளின் உரிமைகளைப் பாதுகாப்பதில், மாற்றுத் திறனாளிகள் நலத்துறை முனைப்புடன் செயலாற்றி வருகிறது. **மாற்றுத் திறனாளிகளுக்காக கண்டறியப்பட்ட காலிப் பணியிடங்களை**

**நிரப்புவதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு, தொடங்கியுள்ளது. 1,510 மாற்றுத் திறனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.** மேலும், தொகுதி A மற்றும் B ஆகியவற்றிலுள்ள 559 பணியிடங்கள் கண்டறியப்பட்டுள்ளன. மேலும், சிறப்பு ஆட்சேர்ப்பு முகமை வாயிலாக 2020–21 ஆம் ஆண்டில் இதுவரையில் தனியார் துறையில் 248 மாற்றுத்திறனாளிகள் பணியமர்த்தப்பட்டுள்ளனர். மாற்றுத் திறனாளிகளுக்கு அதிகாரமளிக்கும் தேசிய நிறுவனத்திலிருந்து தொழில்நுட்ப உதவியுடன் விரிவான மறுவாழ்வு சேவைகளை வழங்குவதற்கு ஒருங்கிணைந்த மறுவாழ்வு மையம் ஒன்று அமைக்கப்பட உள்ளது. முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், மனவளர்ச்சிக் குறைபாடு, மூளை முடக்குவாதம், தசைச்சிதைவு நோய், பலவகை குறைபாடு மற்றும் செவித்திறன் குறைபாடு ஆகியவற்றால் பாதிக்கப்பட்டோருக்கு மருத்துவ சிகிச்சை மற்றும் சேவைகள் வழங்கப்படும்.

125) **உடல் ஊனங்களை வருமுன் காப்பதற்கும், அதனைக் கையாளுவதற்கும் ஓர் ஒருங்கிணைந்த அணுகுமுறையை செயல்படுத்தவும், மாற்றுத் திறனாளிகளுக்கான வாய்ப்புகள் மற்றும் வசதிகளை உறுதி செய்வதற்காகவும், இந்த அரசால் 1,700 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 'RIGHTS' என்ற சிறப்புத் திட்டம் வகுக்கப்பட்டு வருகின்றது. இத்திட்டத்திற்கு, மத்திய அரசின் பொருளாதார விவகாரங்கள் துறையின் ஆய்வுக் குழுவால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம், தற்போது உலக வங்கியின் பரிசீலனையில் உள்ளது.** 2021–22ஆம் ஆண்டு இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக 688.48 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாடு**

126) விளையாட்டு மற்றும் விளையாட்டு சார்ந்த நடவடிக்கைகளை இந்த அரசு தொடர்ந்து ஊக்குவித்து வருகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கப்பட்ட 'அம்மா இளைஞர் விளையாட்டுத் திட்டம்', வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 38.85 கோடி ரூபாய் ஒதுக்கீட்டுடன், 2021–22 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். திருப்பூர் மாவட்டத்திலுள்ள சிக்கண்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் திறந்தவெளி அரங்கத்தினை கட்டுவதற்காக 9 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. ஏலகிரியில் உள்விளையாட்டு அரங்கத்தை கட்டுவதற்காக 4.92 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

127) கேரம், டேக்வோண்டோ, ஜூடோ, வாள்வீச்சு, பிரிட்ஜ் மற்றும் ஏனைய உள்ளரங்க விளையாட்டுகளுக்காக, மாநில அளவிலான பயிற்சி மையம் 17.47 கோடி ரூபாயில் அமைக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில், பாரம்பரிய மற்றும் சாகச விளையாட்டுகளுக்கான மையம் அமைக்கப்பட்டு வருகிறது. இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறைக்காக 229.37 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**அரசு அலுவலர் நலன்**

128) **கோவிட்–19 பெருந்தொற்றை எதிர்கொள்வதில் முன்னணியில் இருந்து பொறுப்புடன் செயலாற்றிய அனைத்து அரசு ஊழியர்களுக்கும் நான் நன்றி தெரிவிக்க கடமைப்பட்டுள்ளேன்.** நோய்த்தொற்றின் ஆபத்தை பொருட்படுத்தாமல், தீவிர ஊரடங்கு

அமல்படுத்தப்பட்ட போதிலும், பலர் பணிக்கு திரும்பினர். **இந்த ஆண்டில் முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு, மிகப்பெரிய பங்களிப்பு அரசு ஊழியர்களால், ஒரு குழுவாக வழங்கப்பட்டது.** அரசு ஊழியர்களின் முயற்சிகளை மாநில அரசு தொடர்ந்து அங்கீகரித்து வருகின்றது.

129) தற்போது செயல்பட்டு வரும் விரிவாக்கப்பட்ட தமிழ்நாடு அரசு ஊழியர்களுக்கான புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், 2021 ஆம் ஆண்டு ஜூன் மாதம் அன்று நிறைவடைகிறது. மேம்படுத்தப்பட்ட சலுகைகளுடன் இத்திட்டம் நீட்டிக்கப்படும். தற்போதைய ஒட்டுமொத்த காப்பீட்டுத் தொகையான 4 இலட்சம் ரூபாய் 5 இலட்சம் ரூபாயாக அதிகரிக்கப்படும். குறிப்பிட்ட சிகிச்சைகளுக்கான காப்பீட்டுத் தொகை 7.5 இலட்சம் ரூபாயிலிருந்து 10 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்படும். மேலும், அரிய வகை நோய்கள் மற்றும் அசாதாரண நிகழ்வுகளுக்கு, மொத்தம் 20 இலட்சம் ரூபாய் மதிப்பில் காப்பீட்டுத் தொகை வழங்குவதற்கு ஒரு சிறப்பு ஒதுக்கீடு செய்யப்படும். பணமில்லா சிகிச்சை பெறுவதற்கான நடைமுறைகள் மேலும் ஒருங்கிணைக்கப்படும்.

## பாகம் – ஆ

## வரவு–செலவுத் திட்டத்திற்கான நிதி ஆதாரங்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

130) நான் தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த நிதிநிலைமையை விளக்க விழைகிறேன். 2019–20 ஆம் நிதியாண்டின் இறுதி காலாண்டிலேயே, கோவிட்–19 பெருந்தொற்றின் தாக்கம் ஏற்பட்டது. 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதம், 24 ஆம் நாளன்று தேசிய அளவில் ஊரடங்கு அமல்படுத்தப்பட்டது. நீங்கள் நன்கு அறிந்திருப்பதுபோல்,

நிதியாண்டின் கடைசி வாரத்தில் தான் கணிசமான அளவில் வருவாய்கள் செலுத்தப்படும். ஊரடங்கு காரணத்தால், 2019–20 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடுகளில் எதிர்பார்த்த வருவாய் இலக்கை மாநில அரசால் அடைய முடியவில்லை. இதன் விளைவாக, 2019–20 ஆம் ஆண்டின் நிதிப் பற்றாக்குறையான திருத்த மதிப்பீடுகளில் எதிர்பார்க்கப்பட்ட 55,058.39 கோடி ரூபாய், அதாவது, மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில் 2.97 சதவீதம், 2019–20 ஆம் ஆண்டு கணக்கில் 60,178.63 கோடி ரூபாய், அதாவது, மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3.24 சதவீதமாக அதிகரித்துள்ளது. இந்தச் சபையின் உறுப்பினர்கள் நன்கு அறிந்திருப்பதுபோல், அதிகரித்த ஒட்டுமொத்தப் பற்றாக்குறையை அனுமதிக்க, 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை பொறுப்புடைமைச் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டது.

131) கோவிட்–19 பெருந்தொற்றின் போது, ஊரடங்கை அமல்படுத்தியதாலும், வரி நிலுவைகளைச் செலுத்துவதற்காக கூடுதல் கால அவகாசம் அளிக்கப்பட்டதாலும், நடப்பு நிதியாண்டின் முதல் நான்கு மாதங்களில் மாநில சொந்த வரி வருவாயில் (SOTR) சரிவு ஏற்பட்டது. 2020ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்திலிருந்து மாநில சரக்கு மற்றும் சேவை வரி மற்றும் மதிப்பு கூட்டு வரியின் வசூலிப்பு அதிகரிக்கத் தொடங்கியது. முத்திரைத்தாள் மற்றும் பதிவுக் கட்டணங்களின் வசூல் மீண்டும் புத்துயிர் பெற்றது. எனினும், மோட்டார் வாகன வரியின் வசூல் இன்னும் இயல்பு நிலைக்குத் திரும்பவில்லை. சரக்கு மற்றும் சேவை வரி மன்றத்திலுள்ள தமிழ்நாடு அரசு பிரதிநிதிகளால் மேற்கொள்ளப்பட்ட தொடர் நடவடிக்கைகளால், 2017–18ஆம் ஆண்டின் ஒருங்கிணைந்த சரக்கு மற்றும் சேவை வரி தொடர்பான நீண்டகால நிலுவையிலுள்ள விவகாரத்திற்கு தீர்வு காணப்பட்டு, 2020 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில்

4,321 கோடி ரூபாய் தமிழ்நாடு அரசுக்கு விடுவிக்கப்பட்டுள்ளது. **2020–21 ஆம் ஆண்டின் திருத்த மதிப்பீடுகளில், ஒட்டுமொத்தமாக மாநில அரசின் சொந்த வரி வருவாய் 1,09,968.97 கோடி ரூபாயாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்தொகையானது, 2020–21 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் வருவாயாக எதிர்பார்க்கப்பட்ட 1,33,530.30 கோடி ரூபாயைவிட 17.64 சதவீதம் குறைவானது.**

132) **மத்திய அரசின் 2020–21 ஆம் ஆண்டின் வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 32,849.34 கோடி ரூபாயாக குறிப்பிடப்பட்ட தமிழ்நாட்டிற்கான மத்திய வரியின் பங்கு 2020–21 ஆம் ஆண்டின் திருத்த மதிப்பீடுகளில் 23,039.46 கோடி ரூபாயாக குறைக்கப்பட்டுள்ளது.** மத்திய வரி வருவாய் வசூலில் ஏற்பட்ட குறைவில் ஒரு பங்கு, கோவிட்–19 பெருந்தொற்றால் ஏற்பட்டிருந்தாலும், மேல்வரி மற்றும் கூடுதல் கட்டணங்களின் பங்கு அதிகரித்து வருவதன் மூலம் மாநிலங்களுக்குப் பகிர்ந்துகொள்ளக் கூடிய மத்திய வரிகள் குறைவது முக்கியக் காரணமாகும். இது குறித்து ஏற்கெனவே எனது உரையில் தெரிவித்துள்ளேன். **மத்திய அரசின் வருவாயில் மாநிலங்கள் தங்களுக்கு உரிய பங்கினைப் பெறுவதற்கு மேல்வரி மற்றும் கூடுதல் கட்டணங்களை அடிப்படை வரி வீதங்களுடன் இணைத்திட மத்திய அரசை மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்.**

133) கோவிட்–19 பெருந்தொற்றின் தாக்கத்தினால், 2020–21 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் 15,898.81 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்ட வரியல்லாத வருவாயும், திருத்த மதிப்பீடுகளில் 12,628.79 கோடி ரூபாயாகக் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. திட்டம் தொடர்பான ஒதுக்கீடுகளை மத்திய அரசு குறைத்ததனால், மத்திய அரசால் வழங்கப்படும் மானியத் தொகை,

முந்தைய கணிப்புகள்படி வழங்கப்படவில்லை. இந்த ஆண்டு, சரக்கு மற்றும் சேவை வரி இழப்பீட்டுத் தொகையை சரக்கு மற்றும் சேவை வரி இழப்பீடு கூடுதல் கட்டணத்திலிருந்து திரும்பச் செலுத்தப்படும் கடனாகக் கருதப்படுகிறது. 2020–21 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் மத்திய அரசிடமிருந்து பெறும் உதவி மானியம் 37,096.69 கோடி ரூபாயாகக் கணிக்கப்பட்டதற்கு மாறாக, 2020–21 ஆம் ஆண்டின் திருத்த மதிப்பீடுகளில் 35,009.40 கோடி ரூபாயாகவே இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. **2020–21 ஆம் ஆண்டின் திருத்த மதிப்பீடுகளில், மொத்த வருவாய் வரவினம் 1,80,700.62 கோடி ரூபாயாக இருக்கும் என மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. இது, வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டிலிருந்து 17.63 சதவீதம் குறைவாக இருப்பதைக் குறிக்கிறது.**

134) 2020–21 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் வருவாய் கணக்கு குறித்த மொத்த செலவினம் 2,40,992.78 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டது. வருவாய் கணக்கில் கூடுதல் செலவினத்திற்காக 11,642.35 கோடி ரூபாய் மதிப்பீட்டில் துணை மதிப்பீடு ஒன்று இந்த அவையின் முன் ஏற்கெனவே வைக்கப்பட்டது. **கோவிட்–19 பெருந்தொற்றின் காரணமாக, சுகாதாரம் மற்றும் நிவாரணம் தொடர்பான பணிகளுக்காக 12,917.85 கோடி ரூபாய் வருவாய்க் கணக்கில் கூடுதல் செலவினம் ஏற்பட்டுள்ளது. தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் நலத்திட்டங்கள் குறித்த செலவினங்கள் குறைக்கப்படாமல் இருப்பதை இந்த அரசு உறுதி செய்துள்ளது. இந்தியாவில், 2020–21 ஆம் ஆண்டில் அரசு ஊழியர்களுக்கு சம்பளம் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கு ஓய்வூதியம் தடைபடாமல் வழங்கிய சில மாநிலங்களில், தமிழ்நாடும் ஒன்றாகும்.** அரசால் அறிவிக்கப்பட்ட செலவினங்களைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளினால் தோராயமாக 13,250 கோடி ரூபாய் சேமிக்கப்பட்டது. **இதன் விளைவாக,**

**2020–21 ஆம் ஆண்டின் திருத்த மதிப்பீடுகளில் மொத்த வருவாய் செலவினம் 2,46,694.69 கோடி ரூபாய் என மதிப்பிடப்பட்டது.**

135) வருவாய் வரவினங்களில் ஏற்பட்ட கடும் சரிவினாலும், அதிகரித்த செலவினங்களாலும், 2020–21 ஆம் ஆண்டின் திருத்த மதிப்பீடுகளில், **ஒட்டுமொத்த வருவாய்ப் பற்றாக்குறை 65,994.06 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. இத்தொகை, 2020–21 ஆம் ஆண்டின் வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் கணிக்கப்பட்ட 21,617.61 கோடி ரூபாயைக் காட்டிலும் மிகவும் அதிகமாகும்.**

136) 10,000 கோடி ரூபாய் கூடுதலாக மூலதனச் செலவினங்கள் மேற்கொள்ள வேண்டும் என்ற டாக்டர். சி. ரங்கராஜன் தலைமையிலான உயர்மட்டக் குழுவின் பரிந்துரைகளுக்கு ஏற்ப, நீர்ப்பாசனம், வெள்ளக் கட்டுப்பாடு, குடிநீர் வழங்கல் மற்றும் சுகாதாரம், ஊரக வளர்ச்சி, வீட்டு வசதி மற்றும் ஏனைய உட்கட்டமைப்புத் துறைகளில் 20,013 கோடி ரூபாய் மதிப்பிலான மூலதனப் பணிகளுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. **கோவிட்–19 பெருந்தொற்றின்போது, திட்டப் பணிகளைச் செயல்படுத்துவதில் சிரமங்கள் ஏற்பட்டிருந்தாலும், 2020–21 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடுகளில் மூலதனச் செலவினம் 37,734.42 கோடி ரூபாயாக அதிகரிக்கும் என கணிக்கப்படுகிறது. இது 2019–20 ஆம் ஆண்டில் செய்யப்பட்ட மூலதனச் செலவினமான 25,631.58 கோடி ரூபாயை விட 12,102.84 கோடி ரூபாய் அதிகமாகும்.**

137) இயல்பற்ற நிலையை எதிர்நோக்குவதற்கு, அசாதாரணமான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டிய சூழ்நிலை எழுகிறது. **கோவிட்–19 பெருந்தொற்றுநோயால் வருவாய் கடுமையாகக் குறைந்துள்ளது. ஆனால், மக்களின் நலனைப் பாதுகாப்பதற்காக, செலவினங்கள் அதிகரிக்கப்பட்டன. எனவே, அரசு கடன்கள் பெறுவதைத்**

**தவிர்க்க இயலாது. இதனால், நிதிப் பற்றாக்குறை அதிகரிக்கும்.** எனவே, மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி அளவில் 2 சதவீதம் கூடுதல் கடன் பெறுவதற்கு மத்திய அரசு அளித்த அனுமதியின்படி, இந்த அரசு கடன் பெற்றுள்ளது. வணிகம் மேற்கொள்வதை எளிதாக்குதல் மற்றும் ஒரே நாடு ஒரே குடும்ப அட்டை திட்டம் ஆகிய இவ்விரண்டு சீர்திருத்த நடவடிக்கைகளை தமிழ்நாடு நிறைவேற்றியுள்ளது. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு நிதிகள் தொடர்பான சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு, இது குறித்த கூடுதல் கடன் பெறுவதற்கு மத்திய அரசின் ஒப்புதலுக்காக நாங்கள் காத்திருக்கிறோம். மேலும், சரக்கு மற்றும் சேவை வரி மன்றத்தால் அனுமதிக்கப்பட்ட சிறப்புத் திட்டங்களுக்கு, சரக்கு மற்றும் சேவை வரி இழப்பீட்டிற்குப் பதிலாக, கடனாக 7,608.38 கோடி ரூபாய் தமிழ்நாட்டிற்கு கிடைக்கும். இந்தக் கடன், சரக்கு மற்றும் சேவை வரி இழப்பீட்டு மேல்வரியிலிருந்து மத்திய அரசால் திருப்பிச் செலுத்தப்பட இருப்பதால், மாநிலத்தின் நிதிப் பற்றாக்குறையின் ஓர் பகுதியாக இது கருதப்படாது எனத் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. **மொத்தத்தில், 2020–21 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடுகளில் நிதிப் பற்றாக்குறை, மாநிலத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4.99 சதவீதமாக, அதாவது 96,889.97 கோடி ரூபாயாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது, 15வது நிதிக்குழு பரிந்துரைக்கும், திருத்தப்பட்ட 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை பொறுப்புடைமைச் சட்டத்திற்கும் ஏற்ப உள்ளது.**

138) **2020–21 ஆம் ஆண்டில் கணிசமாகக் குறைந்திருந்த வருவாய் வரவினங்கள் மீண்டெழும் என்று 2021–22 ஆம் ஆண்டின் இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் எதிர்பார்க்கப்படுகிறது.** மாநில சரக்கு மற்றும் சேவை வரி வருவாய் 45,395.50 கோடி ரூபாயாகவும், மதிப்புக்கூட்டு வரி வருவாய் 56,413.19 கோடி ரூபாயாகவும், மொத்த வணிக வரி வருவாய்

1,02,477.14 கோடி ரூபாயாகவும் இருக்கும் என 2021–22 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் எதிர்பார்க்கப்படுகிறது. மாநில ஆயத்தீர்வை வருவாய் 9,613.91 கோடி ரூபாயாகவும், மோட்டார் வாகன வரி வசூல் 6,581.75 கோடி ரூபாயாகவும், முத்திரைத்தாள் மற்றும் பதிவுக் கட்டண வருவாய் 14,879.37 கோடி ரூபாயாகவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

139) **2021–22 ஆம் ஆண்டு இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் மாநிலத்தின் சொந்த வரி வருவாய் 1,35,641.78 கோடி ரூபாயாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.** வரியல்லாத வருவாய் 15,648.42 கோடி ரூபாயாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

140) **15வது நிதிக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் தமிழ்நாட்டிற்கான நிதிப்பகிர்வு 2021–22 ஆம் ஆண்டில், சிறிய அளவில் குறைந்துள்ளது. எனவே, மத்திய வரிகளில் தமிழ்நாட்டின் பங்கு 27,148.31 கோடி ரூபாயாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.** 2021–22 ஆம் ஆண்டில் வருவாய்ப் பற்றாக்குறைக்கான மானியமாக எதிர்பார்க்கப்பட்ட 2,204 கோடி ரூபாய் உட்பட, மத்திய அரசிடமிருந்து பெறும் உதவி மானியம் 40,553.45 கோடி ரூபாயாக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது. **2021–22 ஆம் ஆண்டின் இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் மொத்த வருவாய் வரவினம் 2,18,991.96 கோடி ரூபாயாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.**

141) **சம்பளங்கள், ஓய்வூதியங்கள், வட்டித்தொகை மற்றும் திட்டம் சார்ந்த செலவினங்கள் அனைத்திற்கும் 2021–22 ஆம் ஆண்டின் இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் முழுமையாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2021–22 ஆம் ஆண்டிற்கான**

**வருவாய் செலவினங்கள் உள்ளபடியான நிலவர அடிப்படையில் 2,60,409.26 கோடி ரூபாயாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில், 2021–22 ஆம் ஆண்டிற்கான வருவாய்ப் பற்றாக்குறை 41,417.30 கோடி ரூபாயாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.**

142) ஒப்புதலளிக்கப்பட்ட அனைத்துப் பணிகளையும் நிறைவேற்றுவதற்காக, 2021–22 ஆம் ஆண்டின் மதிப்பிடப்பட்ட மூலதனச் செலவினங்களில் தேவையான நிதி ஒதுக்கீடு செய்யப்படும். **இதனால், மூலதனச் செலவினம் 14.41 சதவீதமாக உயர்ந்து 43,170.61 கோடி ரூபாயாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.**

**143) நடப்பு நிதியாண்டில் அதிகரித்துள்ள நிதிப் பற்றாக்குறையைத் தவிர்க்க இயலாது. பொருளாதாரத்தில் எந்த ஒரு பாதகமான தாக்கமும் ஏற்படாமல் இருப்பதற்காக, இந்தப் பற்றாக்குறையை படிப்படியாகக் குறைக்க வேண்டும். 2021–22 ஆம் ஆண்டில் மாநிலங்களுக்கான நிதிப் பற்றாக்குறை அளவை உயர்த்தி, மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4 சதவீதம் வரை அனுமதிக்க வேண்டும் என்று 15வதுநிதிக்குழு பரிந்துரைத்துள்ளது. அதற்கிணங்க, 2021–22 ஆம் ஆண்டில் நிதிப் பற்றாக்குறை மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3.94 சதவீதம், அதாவது 84,202.39 கோடி ரூபாயாகக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.**

144) 2021–22 ஆம் ஆண்டில் ஒட்டுமொத்த நிதிப் பற்றாக்குறைக்கு நிதி வழங்கும் வகையில், அனுமதிக்கப்பட்ட ஒட்டுமொத்தக் கடன் அளவான 85,454 கோடி ரூபாயில், நிகரக் கடன் தொகையாக 84,686.75 கோடி ரூபாய் திரட்டப்படும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. **2021 ஆம் ஆண்டு மார்ச் மாதம்**

**31–ஆம் நாள் அன்றைய நிலையில், ஒட்டுமொத்தக் கடன் 4,85,502.54 கோடி ரூபாயாகவும், 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31–ஆம் நாள் அன்றைய நிலையில் 5,70,189.29 கோடி ரூபாயாகவும் இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. செலவினங்களின் நிலையை தக்கவைக்க 2020–21 மற்றும் 2021–22 ஆகிய ஆண்டுகளில் அதிக அளவில் கடன் தேவைப்படும் என்பதை அறிந்து, 15வது நிதிக்குழு மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில் கடனின் விகிதத்தை மாற்றியமைத்தது.** 15வது நிதிக்குழு பரிந்துரைத்துள்ள நிதி மேலாண்மை உத்தியின்படி, மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் கடன் விகிதம் 2020–21 ஆம் ஆண்டில் 28.90 சதவீதம் வரையும், 2021–22 ஆம் ஆண்டில் 28.70 சதவீதம் வரையும், 2022–23 ஆம் ஆண்டில் 29.30 சதவீதம் வரையும் மற்றும் 2023–24 ஆம் ஆண்டில் 29.31 சதவீதம் வரையும் இருக்கலாம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. **2021 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 அன்றைய நிலையில், தமிழ்நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் கடன் விகிதம் 24.98 சதவீதமாகவும், 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 அன்றைய நிலையில் 26.69 சதவீதமாகவும் இருக்கும். அவை, 15வது நிதிக்குழுவின் நிர்ணயிக்கப்பட்ட விதிமுறைகளுக்கு உட்பட்டவையே ஆகும்.**

145) 2020–21 ஆம் ஆண்டில் கோவிட்–19 பெருந்தொற்று தாக்கத்தின் காரணமாக மாநிலத்தின் நிதி நிலைமை பாதிக்கப்பட்டுள்ளதை நாம் நன்கறிவோம். திறமையான நிதி நிர்வாகத்தின் மூலம் நிதிநிலை பாதிக்கப்படுவதை கட்டுப்படுத்தியுள்ளோம். இயல்பான வளர்ச்சி நிலை திரும்பி வருகின்ற பயனாக, 2021–22 ஆம் ஆண்டில் முன்னேற்றம் தானாகவே ஏற்படும் என நான் எதிர்பார்க்கிறேன். கூடுதல் வருவாயை அதிகரிக்கும் வழிகளைக் கண்டறிதல், பெரிய பொதுத்துறை நிறுவனங்களின் இழப்புகளை கட்டுப்படுத்துதல், வளர்ச்சியை அதிகரிக்கும் செலவினங்களுக்கு

போதுமான ஆதாரங்களை கண்டறிதல் என மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் வரி வருவாயின் விகிதத்தை உயர்த்துவதற்காக நமது அரசால் மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்த நடவடிக்கைகளை தொடர்ந்து செயல்படுத்த வேண்டும். நல்லாட்சியை வழங்குவதற்கும், நிதி ஒருங்கிணைப்புப் பணியை மீண்டும் தொடங்குவதற்கும் மாண்புமிகு முதலமைச்சர் திரு எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் தலைமையிலான டாக்டர் புரட்சித்தலைவி அம்மாவின் அரசைத் தவிர வேறு எவரையும் தமிழ்நாடு மக்கள் நம்ப மாட்டார்கள். இந்தப் பணியை நிறைவேற்ற நாங்கள் மீண்டும் ஆட்சிக்கு வருவோம் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்க முடையா னுழை.

(குறள் 594)

தளராத ஊக்கம் உடையவர்களிடத்திலே, ஆக்கம், தானே அவரிருக்கும் இடத்திற்கு வழிகேட்டுக்கொண்டு போய்ச் சென்று அவரிடம் நிலையாகச் சேர்ந்திருக்கும்.

146) மறைந்த முன்னாள் முதலமைச்சர் டாக்டர் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆன்மா வழங்கிய வழிகாட்டுதல்களுக்காக நான் என்றென்றும் நன்றிக்கடன் பட்டுள்ளேன். மாண்புமிகு அம்மாவின் நல்லாசிகள் இந்த அரசின் வெற்றிக்கு அடித்தளமாக உள்ளன. மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் எங்களுக்கு வழிகாட்டும் சக்தியாக இருந்து, தமிழ்நாட்டு மக்களின் நம்பிக்கையை தொடர்ந்து பெற எங்களுக்கு உறுதுணையாக இருப்பார்.

147) இந்த இடைக்கால வரவு–செலவுத் திட்டத்தை உருவாக்குவதில் முழுமனதுடன் ஆதரவளித்து, சிறந்த ஆலோசனைகளை வழங்கிய மாண்புமிகு முதலமைச்சர் திரு எடப்பாடி கே. பழனிசாமி அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

148) இந்த இடைக்கால நிதிநிலை அறிக்கையை வடிவமைத்து தயாரிப்பதில் உறுதுணையாக இருந்து, என்னுடன் ஓய்வின்றிப் பணியாற்றிய, நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. ச. கிருஷ்ணன், இ.ஆ.ப. அவர்களுக்கும், அவருடன் திறம்படப் பணியாற்றிய நிதித்துறையின் அனைத்து அலுவலர்களுக்கும், பணியாளர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

149) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2021–2022 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு–செலவுத் திட்டத்திற்கு இந்த அவையின் ஒப்புதலைப் பெற்றுத் தருமாறு தங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**நன்றி**

**வணக்கம்.**

**ஓ.பன்னீர்செல்வம்**
துணை முதலமைச்சர்

**சென்னை**
**2021 ஆம் ஆண்டு**
**பிப்ரவரி திங்கள் 23ஆம் நாள்**
**திருவள்ளுவர் ஆண்டு 2052**
**சார்வரி – மாசித் திங்கள் 11 ஆம் நாள்**

# இணைப்பு

## இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டம்

**2003** ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி நிலை நிருவாகப் பொறுப்புடைமைச் சட்டத்தின் **3** ஆம் பிரிவின் உட்பிரிவு **(1)**–ன்படி, வரவு–செலவுத் திட்ட அறிக்கையுடன், இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டம் குறித்த அறிக்கை ஒன்றையும், மாநில அரசு சட்டமன்றப் பேரவையில் வைக்க வேண்டும். மேலும், இச்சட்டத்தின், **3** ஆம் பிரிவின் உட்பிரிவு **(2)**–ன்படி, வருவாய்ப் பற்றாக்குறை, நிதிப் பற்றாக்குறை மற்றும் கடன் மாநில மொத்த உற்பத்தி மதிப்பு விகிதம் போன்ற நிதி நிலைக் குறியீடுகளுக்கான இலக்குகளை அடுத்தடுத்து வரும் ஆண்டுகளுக்குக் குறிப்பிட்டும், அவற்றின் கணக்கீட்டிற்கான அனுமானங்களைத் தெளிவாக விளக்கியும் இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டம் வகுக்கப்பட வேண்டும். **2003** ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி நிலை நிருவாகப் பொறுப்புடைமைச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள மேற்சொன்ன விதிகளுக்கிணங்கி, **2021–22** ஆம் ஆண்டு முதல் **2023–24** ஆம் ஆண்டு வரையிலான காலத்திற்கு இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டம் சட்டமன்றப் பேரவை முன் வைக்கப்படுகிறது.

**நோக்கங்கள்**

இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டமானது, கீழ்கண்ட நிதி விதிமுறைகளைப் பின்பற்றி முற்போக்கான நிதி ஒருங்கிணைப்பு மற்றும் கடன் தாங்கு தன்மைகள் போன்ற இலக்குகளை அடைவதற்கான வரையறைகளை வகுத்துள்ளது.

- நிதிப்பற்றாக்குறை மாநில மொத்த உற்பத்தி மதிப்பில், 2021–22 ஆம் நிதியாண்டில் 4 சதவீதத்திற்குள்ளும், 2022–23 ஆம் நிதியாண்டில் 3.5 சதவீதத்திற்குள்ளும் 2023–24 ஆம் நிதியாண்டு முதல் 3 சதவீதத்திற்குள்ளும் இருக்க வேண்டும்.

- 15வது நிதிக்குழுவின் பரிந்துரையின்படி, நிலுவைக் கடன் தொகை மாநில மொத்த உற்பத்தி மதிப்பில், 2021–22 ஆம் நிதியாண்டில் 28.7 சதவீதத்திற்குள்ளும், 2022–23 ஆம் நிதியாண்டில் 29.3 சதவீதத்திற்குள்ளும் 2023–24 ஆம் நிதியாண்டில் 29.1 சதவீதத்திற்குள்ளும் இருக்க வேண்டும்.

- மாநில அரசு மத்திய நிதிக்குழு பரிந்துரைத்த இலக்குகளின் அடிப்படையில் 2003–ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி நிலை நிருவாகப் பொறுப்புடைமைச் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ள உள்ளது.

மேலும், வருவாய்ப் பற்றாக்குறையை படிப்படியாக குறைப்பதற்கான நிதி வழிவகைகளும் வகுக்கப்பட்டு வருவதால் பலன்தரும் சொத்துக்கள் உருவாக்கத்திற்கான ஒதுக்கீடு அதிகரிக்கும்.

இதன் நோக்கங்களை அடைவதற்கான வழிமுறைகள்.

- ❖ நிதி வளங்களை முன்னுரிமைப்படுத்துவதுடன், அதனைப் பெருக்குவதற்கான சாத்தியக் கூறுகளை ஆராய்தல்.

- ❖ செலவினங்களை திறமையாக மேற்கொள்வதுடன், எதிர்பாரா செலவினங்களையும் கணக்கில் கொண்டும், வளர்ச்சியை உருவாக்கும் செலவினங்களில் சமரசம் செய்யாமலும், அதேசமயம் பொறுப்பேற்ற செலவினங்களுக்குமான நிதித் தேவைகளை எதிர்கொள்ளுதல்.

- ❖ கடன் தாங்குதன்மை வரையறைக்குட்பட்டு வரவுகளுக்கும் செலவுகளுக்கும் இடையில் சமநிலை இருக்குமாறு பரமரித்தல்.

**பொருளாதார நிலை**

**2020–21**ஆம் ஆண்டில், இந்திய பொருளாதாரம் நிலையான நிலையில் 7.7 எதிர்மறை வளர்ச்சியுடன்

தேக்க நிலையை எதிர் நோக்கியுள்ளது. இருப்பினும், இனி வரும் ஆண்டுகளில், இந்த தேக்க நிலை மறைந்து, போதுமான வளர்ச்சி அடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. நிலையான விலையில் மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பீடு 2020–21 ஆம் ஆண்டிற்கு 2.02 சதவீதமாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது பொருளாதார அதிர்வுகளை மாநில பொருளாதாரம் தாங்கூடிய வகையில் உள்ளது. பன்முக பொருளாதாரம் மற்றும் நிலையான கொள்கை முயற்சிகளின் காரணமாக இந்த தாங்குதிறன் ஏற்பட்டுள்ளது. நடப்பாண்டு கணிப்புகளைக் காட்டிலும் எதிர் வரும் ஆண்டுகளில் வலுவான வளர்ச்சியை அடைவோம் என நாங்கள் எதிர்பார்க்கிறோம். மாநில மொத்த உள்நாட்டு மதிப்பீட்டின் வளர்ச்சியானது, 15வது நிதிக்குழு பரிந்துரையின் அடிப்படையில் 2022–23 ஆம் ஆண்டில் 11.5 சதவீதமாகவும் மற்றும் 2023–24 ஆம் ஆண்டில் 12.0 சதவீதமாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

**I. வருவாய்க் கணக்கு வரவுகள்**

மத்திய அரசின் நிதி உதவி உட்பட மாநில அரசின் மொத்த வருவாய் வரவுகள் 2020–21 ஆம் ஆண்டின் திருத்த மதிப்பீடுகளில் கணிக்கப்பட்ட வரவினம் 1,80,700.62 கோடியைக் காட்டிலும் 2021–22 ஆம் ஆண்டின் வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 2,18,991.96 கோடி ரூபாயாக இருக்குமென

மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த மதிப்பீடுகள் 2022–23 ஆம் ஆண்டில் 2,41,922.83 கோடி ரூபாயாகவும், 2023–24 ஆம் ஆண்டில் 2,70,073.86 கோடி ரூபாயாகவும் இருக்கும் என மதிப்பிடப்படுகிறது. இது 2022–23 மற்றும் 2023–24 ஆண்டுகளுக்கு முறையே 10.47 சதவீதம் மற்றும் 11.64 சதவீத வளர்ச்சியைக் குறிக்கிறது. இதன் முக்கியக் கூறுகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

**1. மாநில அரசின் சொந்த வரி வருவாய்**

மாநில அரசின் சொந்த வரி வருவாய் 2020–21 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளில் 1,09,968.97 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. மாநில அரசின் சொந்த வரி வருவாய் 2020–21 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டினை ஒப்பிடும் போது 23,561.33 கோடி ரூபாய் குறைவாகும். 2021–22 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் இது 1,35,641.78 கோடி ரூபாயாக உயரும் என மதிப்பிடப்பட்டுள்ளது. மாநிலத்தின் சொந்த வரி வருவாய் 2022–23 ஆம் ஆண்டில் 1,53,926.56 கோடி ரூபாயாகவும், 2023–24 ஆம் ஆண்டில் 1,74,688.26 கோடி ரூபாயாகவும் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மாநில அரசின் சொந்த வரி வருவாயின் முக்கியக் கூறுகள் மற்றும் அதன் தொடர்புடைய அனுமானங்கள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன

- பொருட்கள் மற்றும் சேவைகள் வரியைப் பொருத்தமட்டில் **2015–16** ஆம் ஆண்டில் இருந்த **14** சதவீத வளர்ச்சி, **2021–22** ஆம் ஆண்டு வரை நீடிக்கும் என நம்பப்படுகிறது. பொருட்கள் மற்றும் சேவை வரி வசூலில் தமிழகம் ஓரளவு சிறப்பாக செயல்படுவதாலும், மத்திய அரசிடமிருந்து வரவேண்டிய நிலுவைத் தொகைகள் உரிய நேரத்திற்குள் வரும் என எதிர்பார்க்கப்படுவதாலும் **2021–22** ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் **45,395.50** கோடி ரூபாய் மதிப்பிடப்பட்டுள்ளது. விற்பனைவரி குறிப்பாக, பெட்ரோலியப் பொருட்கள் மீதான விற்பனைவரி வளர்ச்சி விகிதம் அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு குறிப்பிடத்தக்க அளவில் உயரும் என எதிர்பார்க்கப்படுவதுடன், மது வகைகள் மீதான விற்பனைவரியும் சீராக வளர்ச்சியடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

- வணிக வரியின் வளர்ச்சி விகிதம் தற்போதைய போக்கின் அடிப்படையில் **2022–23** மற்றும்

2023–24–ஆம் ஆண்டுகளில் 14.0 சதவீதமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

- மாநில ஆயத்தீர்வைகளில் வளர்ச்சி விகிதம் தற்போதைய வரி வசூல் போக்கின் அடிப்படையில் 2022–23 மற்றும் 2023–24–ஆம் ஆண்டுகளில் 12.0 சதவீதமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

- முத்திரைத்தாள் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணங்கள், 2020–21 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடுகளில், 2020–21 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளைக் காட்டிலும் 3,654.13 கோடி ரூபாய் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. 2021–22 ஆம் ஆண்டில் வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் 14,879.37 கோடி ரூபாயாகவும், பொதுவான பொருளாதார வளச்சியின் அடிப்படையிலும், வரிவசூல் திறம்பட செய்யப்படுவதாலும் இதன் வளர்ச்சி வரும் ஆண்டுகளில் சுமார் 12.0 சதவீகிதமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

- 2020–21 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் எதிர்பார்க்கப்பட்ட மோட்டார் வாகன வரிவருவாய், பொதுப் பொருளாதார தேக்க நிலையின் காரணமாக 2020–21 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளில்

4,566.46 கோடி ரூபாயாக குறைந்துள்ளது. மோட்டார் வாகன வரிவருவாய் முக்கியமாக வாகனங்களின் பதிவின் மீது விதிக்கப்படுவதால், வரும் ஆண்டுகளில் வரிவருவாய் பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்ப அமையும். மின் வாகனங்கள் அதிகமாக பதியப்படும் என எதிர்பார்க்கப்படும் நிலையில் அவைகளுக்கு விலக்கு அளிக்கப்பட்டிருப்பதன் தாக்கம் ஒரு காரணியாக கணக்கிடப்பட்டுள்ளது. 2022–23 மற்றும் 2023–24 ஆம் ஆண்டுகளில் 12.0 சதவீத வளர்ச்சி எதிர்பார்க்கப்படுகிறது.

**வரி அல்லாத வருவாய்**

2021–22 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், மாநிலத்தின் சொந்த வரி அல்லாத வருவாய் 15,648.42 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது 2020–21 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீட்டினைக் காட்டிலும் 23.38 சதவீதம் வளர்ச்சியாகும். வருவாய் இனங்களை பெருக்க எடுக்கப்பட்ட பல்வேறு நடவடிக்கையினாலும், வரியல்லாத வருவாய் வசூலை மேம்படுத்தும் நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருவதாலும், வரியல்லாத வருவாய் 2022–23 ஆம் ஆண்டில் 17,213.27 கோடி ரூபாயாகவும்,

2023–24 ஆம் ஆண்டில் 18,934.60 கோடி ரூபாயாகவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

**மத்திய வரிகளில் மாநில அரசின் பங்கு**

2021–22 ஆம் ஆண்டு மத்திய வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டுகளின் படி 2020–21 ஆம் ஆண்டுக்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் 32,849.34 கோடி ரூபாயாக இருந்த மத்திய வரியின் மாநில அரசிற்கான பங்கு, 2020–21 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீட்டில் 23,039.46 கோடி ரூபாயாக முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு குறைக்கப்பட்டிருப்பதால் தமிழ்நாடு மாபெரும் பின்னடைவை சந்தித்துள்ளது. 15–வது நிதிக்குழு, தனது பரிந்துரையில் மத்திய வரிகளில் மாநில அரசிற்கான நிதிப்பகிர்வை 42 சதவீதத்தில் இருந்து 41 சதவீதமாக குறைத்துள்ள போதிலும், மாநிலங்களுக்கிடையேயான நிதிப்பகிர்வில் தமிழ்நாட்டின் பங்கு 4.023 சதவீதத்தில் இருந்து 2020–21 ஆம் ஆண்டில் 4.189 சதவீதமாகவும் 2021–22 ஆம் ஆண்டு முதல் 4.079 சதவீதமாகவும் உயர்த்தியுள்ளது. வரும் காலங்களில் இந்தியப் பொருளாதார உண்மையான வளர்ச்சியில் நேர்மறை மாற்றம் ஏற்படும் என்பதை கருத்தில் கொண்டு, மத்திய அரசின் வரிவருவாயில் தமிழ்நாட்டின் பங்கு 2022–23 ஆம் ஆண்டிற்கு 30,406.00 கோடி ரூபாயாகவும், 2023–24 ஆம் ஆண்டிற்கு

**34,055.00** கோடி ரூபாயாகவும் இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

**மத்திய அரசிடமிருந்து பெறும் உதவி மானியங்கள்**

**2021–22** ஆம் ஆண்டின் மத்திய வரவு – செலவுத் திட்ட ஒதுக்கீடுகள் மற்றும் தற்போதைய போக்குகளின் அடிப்படையில் **2021–22** ஆம் ஆண்டிற்கான மத்திய அரசிடமிருந்து பெறப்படும் உதவி மானியம் **40,553.45** கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. **2021–22** ஆம் ஆண்டில் மத்திய அரசு நிலுவைத் தொகைகளை குறிப்பிட்ட காலவரையறைக்குள் விடுவிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. **2022–23** மற்றும் **2023–24** ஆம் ஆண்டுகளில் முறையே **40,377.00** கோடி ரூபாய் மற்றும் **42,396.00** கோடி ரூபாயாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. மத்திய நிதிக்குழு பரிந்துரையின்படியான உள்ளாட்சி அமைப்புகளுக்கான மானியங்கள் போன்ற ஏனைய மத்திய அரசு மானியங்கள் மற்றும் தற்போது செயல்பாட்டிலுள்ள மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களுக்காக பெறப்படவுள்ள மானியங்கள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு இந்த மதிப்பீடுகள் செய்யப்பட்டுள்ளன.

## II. வருவாய்க் கணக்கில் செலவுகள்

வருவாய்க் கணக்கு செலவுகள் **2020–21** ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளான **2,40,992.78** கோடி ரூபாயைக் காட்டிலும், **2020–21** ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடுகளில் **2,46,694.69** கோடி ரூபாயாக இருக்கும் என மதிப்பிடப்படுகிறது. இந்த ஆண்டில் ஒப்பளிக்கப்பட்ட செலவினங்களால் இது உயர்ந்துள்ளது. **2021–22** ஆம் ஆண்டில் வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகள் **2,60,409.26** கோடி ரூபாயாகும். வருவாய் கணக்கில் செலவினம் **2022–23** ஆம் ஆண்டில் **2,75,433.14** கோடி ரூபாய் எனவும், **2023–24** இல் **2,94,557.79** கோடி ரூபாய் எனவும் இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இதன் முக்கியக் கூறுகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளது.

- பொறுப்பேற்ற ஊதியச் செலவினங்களுக்காக **2021–22** ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகள் **69,978.54** கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. **2022–23** ஆம் ஆண்டிற்கு **76,276.61** கோடி ரூபாயாகவும், **2023–24** ஆம் ஆண்டிற்கு **83,141.50** கோடி ரூபாயாகவும் இருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. **2022–23** மற்றும் **2023–24** ஆம் ஆண்டுக்கான மதிப்பீடுகளில்

தற்போதைய போக்கு மற்றும் பொருளாதர நிலையின் அடிப்படையிலும், வருங்காலங்களில் அகவிலைப்படி உயர்விற்கான சாத்தியங்களின் அடிப்படையிலும் மதிப்பிடப்பட்டுள்ளது.

- 2021–22 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில், சம்பளம் அல்லாத, செயல்பாடுகள் மற்றும் பராமரிப்பிற்கான செலவினம் 14,083.71 கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளது. போக்குகளின் அடிப்படையிலும், வருங்காலப் பொருளாதார நிலவரப்படியும், 2022–23 ஆம் ஆண்டிற்கு 14,647.06 கோடி ரூபாயாகவும், 2023–24 ஆம் ஆண்டிற்கு 15,232.94 கோடி ரூபாயாகவும் முன்கணிப்பு செய்யப்பட்டுள்ளது.

- பொறுப்பேற்ற செலவுகளான, ஓய்வூதியம் மற்றும் ஏனைய ஓய்வுக்காலப் பயன்களுக்கான மதிப்பீடு 2021–22 ஆம் ஆண்டிற்கு 32,071.50 கோடி ரூபாயாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. மேலும், போக்குகளின் அடிப்படையிலும், மாநிலத்தின் ஓய்வூதியப் பொறுப்புகளின் அடிப்படையிலும் 2022–23 மற்றும் 2023–24 ஆம் ஆண்டுகளில் 7.0 சதவீதம் கூடுதல் செலவினம் ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

- உதவித் தொகைகளும் மற்றும் நிதி மாற்றங்களுக்கான **2020–21** ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளில் **1,11,228.73** கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது **2020–21** ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் மதிப்பிடப்பட்ட **94,099.94** கோடி ரூபாயைக் காட்டிலும் உயர்ந்துள்ளது. பேரிடர் ஆயத்தநிலை / கோவிட்–**19** பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான தடுப்பு நடவடிக்கை மற்றும் கோவிட்–**19** பொதுமுடக்க காலத்தின் பொழுது குடும்ப அட்டைத்தாரர்களுக்கு நிதியுதவி வழங்கிய வகையில் கூடுதல் செலவினம் ஆகியவற்றிற்கு நிதியாண்டின் இடையிலே வழங்கப்பட்ட ஒப்புதல்களால் **2020–21** ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளைக் காட்டிலும் திருத்த மதிப்பீடுகளில் குறிப்பிடத்தக்க உயர்வு ஏற்பட்டுள்ளது. **2021–22** ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடு **1,01,180.45** கோடி ரூபாயாகும். தற்போது நடைமுறையிலுள்ள திட்டங்கள் மற்றும், நடைமுறைப்படுத்தப்பட உள்ள புதிய திட்டங்களாலும், **2022–23** ஆம் ஆண்டுக்கான செலவினம் **1,01,676.47** கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது. நடைமுறையிலுள்ள திட்டச் செலவினங்களில், மின்சாரம் மற்றும் போக்குவரத்து துறை சார்ந்த பொதுத்துறை நிறுவனங்களின் பொறுப்புகளும் அடங்கும். இதுபோன்ற

எதிர்பாரா நிதிச் செலவினங்களும் இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டத்திற்கான மதிப்பீடுகளை தயாரித்து கணிக்கையில் கணக்கில் எடுத்துக்கொள்ளப் பட்டுள்ளன. இதனால், உதவித் தொகைகள் மற்றும் நிதி மாற்றங்கள் உள்ளிட்ட இனங்களின் மதிப்பீடு 2023–24 ஆம் ஆண்டில் 1,05,743.53 கோடி ரூபாயாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

III. **மூலதனக் கணக்கு**

பொருளாதார வளர்ச்சியை அடுத்த கட்டத்திற்கு எடுத்து செல்ல, மூலதன உட்கட்டமைப்பை உருவாக்க வேண்டியதன் தேவையை உணர்ந்து, 2020–21 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடுகளில் மூலதனச் செலவினத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 37,734.42 கோடி ரூபாயைக் காட்டிலும் 2021–22 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 43,170.61 கோடி ரூபாயாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது 2022–23 ஆம் ஆண்டில் 13.0 சதவீதமாகவும் மற்றும் 2023–24 ஆம் ஆண்டில் 12.0 சதவீதமாகவும் மேலும் உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. மூலதனச் செலவினம் மற்றும் நிகர கடன்களும் முன்பணங்களும் உள்ளிட்ட மூலதன கணக்கிற்கான செலவினம் 2022–23 ஆம் ஆண்டு 49,582.79 கோடி ரூபாயாகவும் 2023–24 ஆம் ஆண்டு

**55,236.72** கோடி ரூபாயாகவும் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. மாநிலத்தின் நிதி ஒழுக்கத்தை பராமரிக்கும் அதே வேலையில் வளர்ச்சிக்கான செலவினங்களை தொடர்ந்து அதிகரிப்பதில் இந்த அரசு கொண்டுள்ள உறுதி இதன் மூலம் தெரியவருகிறது

## IV. வருவாய்ப் பற்றாக்குறை மற்றும் நிதிப் பற்றாக்குறை

**2020–21** ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் மதிப்பிடப்பட்டட தொகையான **21,617.64** கோடி ரூபாயை விட வருவாய்ப் பற்றாக்குறை அதிகரித்து **2020–21** ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடுகளில் **65,994.06** கோடி ரூபாயாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. மொத்த வருவாய் வரவினங்கள் **38,674.52** கோடி ரூபாயாக குறைந்து மொத்த வருவாய் செலவினங்கள் **5,701.91** கோடி ரூபாயாக உயர்ந்ததே இதற்கு முக்கிய காரணமாகும். வருவாய்ப் பற்றாக்குறையை முறையாக குறைப்பதன் மூலம் வருவாய்ப் பற்றாக்குறை இல்லாத நிலையை அடைவதற்கும், தமிழ்நாடு நிதி நிலை நிருவாகப் பொறுப்புடைமைச் சட்டத்தில் கூறப்பட்ட நெறிமுறைகளை பின்பற்றி, நிதிநிலை மேம்பாடு மற்றும் கடன் தாங்குதன்மையை உறுதி செய்யும் வகையிலும் இடைக்கால நிதி நிலவரத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. வருவாய் மற்றும் செலவினங்களுக்கிடையே சமன்நிலையை பேணுவதன் மூலம்

இந்த நிலையை அடைய எண்ணப்பட்டுள்ளது. இதற்காக வருவாய் ஆதாரங்களை மேம்படுத்த தேவையான வழிமுறைகளை ஆராய முன்னுரிமை வழங்கப்படும். மேலும் வளர்ச்சிக்கான செலவினங்களுக்கு அதிகமாக ஒதுக்கீடு செய்வது மற்றும் வருவாய் செலவினங்களை சரியான முறையில் பயன்படுத்தும் பல்வேறு சீர்திருத்த நடவடிக்கைகளை வருவாய் செலவினங்களுக்காக மேற்கொண்டு செலவினங்களுக்குரிய தரத்தை மேம்படுத்த எண்ணப்பட்டுள்ளது. எனவே, 2021–22 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்தில் 41,417.30 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்ட வருவாய்ப் பற்றாக்குறை 2022–23 ஆம் ஆண்டில் 33,510.30 கோடி ரூபாயாகக் குறையும். இது, 2023–24 இல் 24,483.92 கோடி ரூபாயாக மேலும் குறையும். இது மூலதனச் செலவிற்கு அதிக இடம் தரும் வகையில் உள்ளது.

15வது நிதிக்குழு, நிதிப்பற்றாக்குறைக்கும் மாநில மொத்த உற்பத்தி மதிப்பீட்டிற்கும் உள்ள விகிதத்தை 2022–23 ஆம் ஆண்டில் 3.5 சதவீதமாகவும் 2023–24 ஆம் ஆண்டில் 3.0 சதவீதமாகவும் பராமரிப்பதற்கு மாநில அரசுகளுக்கு அனுமதி அளித்துள்ளது. வரும் ஆண்டுகளில் மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் நிதிப் பற்றாக்குறை விகிதம் 2022–23 ஆம் ஆண்டில் 3.49 சதவீதம் மற்றும்

2023–24 ஆம் ஆண்டில் 2.99 சதவீதமாக இருக்கும். இது 15வது நிதிக்குழு பரிந்துரைத்த இலக்கிற்குள் உள்ளது.

V. **கடன்கள்**

மத்திய அரசு நிர்ணயிக்கும் ஒட்டுமொத்தக் கடன் வரம்பின் அடிப்படையில், கடன் வரவுகள் மற்றும் திரும்பச் செலுத்துதல் மதிப்பிடப்பட்டுள்ளன. 2021–22 ஆம் ஆண்டிற்கான, நிகரக் கடன் வரம்பு 85,454.04 கோடி ரூபாய் என்று கணிக்கப்பட்டிருந்தாலும், மாநில அரசு 84,686.75 கோடி ரூபாய் நிகரக் கடன் வாங்க திட்டமிட்டுள்ளது. 2021–22 ஆம் ஆண்டில் நிலுவையிலுள்ள மொத்தக் கடன், 2020–21 ஆம் ஆண்டில் மத்திய அரசிடமிருந்து சரக்கு மற்றும் சேவை வரி இழப்பீட்டுத் தொகைக்கு மாறாக கடனாக பெறப்படும் 7,608.38 கோடி ரூபாய் நீங்கலாக 5,70,189.29 கோடி ரூபாயாகவும், மாநில மொத்த உற்பத்தி மதிப்பீட்டில் 26.69 சதவீதமாகவும் இருக்கும். மாநில மொத்த உற்பத்தி மதிப்பீட்டின் சதவீதத்தில் நிலுவையிலுள்ள மொத்தக் கடன் 2022–23 ஆம் ஆண்டில் 27.44 சதவீதமாகவும், 2023–24 ஆம் ஆண்டில் 27.50 சதவீதமாகவும் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது 15வது நிதிக்குழு பரிந்துரைத்த இலக்கிற்குள் உள்ளது. எனவே, நிதி மேலாண்மையின் ஒரு பகுதியாக கடன் தாங்குதன்மை இருக்க வேண்டும் என்பது மாநில அரசின் நோக்கமாகும்.

VI. **கடன் உத்திரவாதங்கள்**

ஒவ்வொரு ஆண்டிலும் நிலுவையிலுள்ள அரசு உத்திரவாதங்கள் முந்தைய ஆண்டின் மொத்த வருவாய்க் கணக்கு வரவுகளில் 100 சதவீத அளவு அல்லது மாநில மொத்த உற்பத்தி மதிப்பீட்டில் 10 சதவீத அளவு, இவற்றில் எது குறைவானதோ அந்த அளவிற்குள் அமையப்பெற வேண்டும். 2020 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் தேதி அன்று உள்ளபடி நிலுவையிலுள்ள அரசு உத்திரவாதங்களின் அளவு, முந்தைய ஆண்டின் மொத்த வருவாய் வரவுகளில் 27.24 சதவீதமாகவும், மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பீட்டில் 2.55 சதவீதமாகவும் உள்ளது. ஒவ்வொரு ஆண்டிலும் மீளப்பெறும் சாத்தியக் கூறுகளின் அடிப்படையில் (Risk weighted) கணக்கிடப்பட்ட நிலுவையிலுள்ள அரசு உத்திரவாதங்கள் முந்தைய ஆண்டின் மொத்த வருவாய்க் கணக்கு வரவுகளில் 75 சதவீதம் அல்லது மாநில மொத்த உற்பத்தி மதிப்பீட்டில் 7.5 சதவீதம் இவற்றில் எது குறைவானதோ அந்த அளவிற்குள் அமையப்பெற வேண்டும். 2020 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் தேதி அன்று உள்ளபடி மீளப்பெறும் சாத்தியக் கூறுகளின் அடிப்படையில் கணக்கிடப்பட்ட நிலுவையிலுள்ள அரசு உத்திரவாதங்களின் (Risk weighted guarantees) அளவு, முந்தைய ஆண்டின் மொத்த வருவாய் வரவுகளில் 7.85 சதவீதமாகவும் மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பீட்டில் 0.74 சதவீதமாகவும் உள்ளது.

**முடிவுரை**

தற்போது பொருளாதார மந்தநிலை நிலவினாலும், வரும் ஆண்டுகளில் நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சியை நோக்கிச் செல்லும் என எதிர்பார்க்கப்படுகிறது. தற்போதைய பொருளாதார மந்த நிலையிலும், நாட்டின் பொருளாதார வளர்ச்சியை ஒப்பிடும் போது, தமிழகம் உயர் பொருளாதார வளர்ச்சியை பெற்றுள்ளது. வரும் ஆண்டுகளில் இந்த வளர்ச்சி மேலும் வலுப்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வள ஆதாரங்களை கூட்டுதல் மற்றும் திறன்மிக்க வரிவசூல் நடவடிக்கைகள் ஆகியவற்றின் மூலமாக மாநிலத்தின் மொத்த வருவாயை வலுவான நிலையில் பராமரிக்க இயலும். வளர்ச்சிக்கான செலவினங்களின் மீது முதலீடு செய்யும் அதே வேளையில், நிதி சேர்ப்பு நடவடிக்கையை அடிப்படை கொள்கையாக கொண்டு, கடன் நிலைத்தன்மை மற்றும் வருவாய் மற்றும் செலவினங்களுக்கிடையேயான நிதி சமநிலையை உறுதி செய்வதன் மூலம், தமிழ்நாடு நிலை நிருவாகப் பொறுப்புடைமைச் சட்டத்தின் வரையரைகளின்படி வருவாய் பற்றாக்குறையை வரும் காலங்களில் குறைக்க இயலும் என எதிர்பார்க்கப்படுகிறது.

*********